ஸ்ரீ காசி
அருள்மிகு நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர்
ஆலயத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா
சிறப்பு மலர்



உ
சிவமயம்

546

ஸ்ரீ காசி
அருள்மிகு நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர் ஆலயத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பு மலர்

799

திருக்குட நன்னீராட்டு
25-10-2006

பதிப்பாசிரியர் :
பேராசிரியர் தேவநாவே

மலர் தொகுப்பு :
Agri. சுப. சொக்கலிங்கம், வலையபட்டி, செயலாளர்
M. ராமனாதன், கொத்தமங்கலம், உதவிச் செயலாளர்

வெளியீடு
ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்
3, மேலவடம் போக்கித் தெரு, காரைக்குடி – 630 001.
போன் : 04565 – 220501

ஸ்ரீ காசி அருள்மிகு நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர்
ஆலயத் திருக்குட நன்னீராட்டுப்
பெருவிழாச் சிறப்பு மலர்

ஜூன் 2007

அச்சிட்டோர் :

ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ்
40ஏ, பார்த்தசாரதி தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை–10.
போன் : 0452–2600300, 0452–2602490

மலர் மணம்

காசிக்கு மிஞ்சிய பதியுமில்லை. கங்கையை மிஞ்சிய நதியுமில்லை என்பது பழமொழி. நதிகளெல்லாம் கங்கையே. தலங்களெல்லாம் காசியே. சிவமெல்லாம் விசுவநாதரே என்று காசிக்கலம்பகத்தில் குமரகுருபர சுவாமிகள் குறிப்பிடுகிறார். இவ்வளவு புகழ்பெற்ற காசியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள், கடந்த 200 ஆண்டு காலமாக, விசுவநாதப் பெருமானுக்கு சம்போ அனுப்பி மூன்று கால வழிபாடுகள் முறைப்படி செய்யும் பெரும்பேறு பெற்றிருக்கிறார்கள். இதற்காக சுமார் 1000 பேர் தங்கக்கூடிய வகையில் 1863ல் ஒரு பெரிய சத்திரம் கட்டப்பெற்று அந்தச் சத்திரத்திலேயே நகரேசுவரர் திருக்கோயிலும் அமைக்கப்பெற்று முறைப்படி வழிபாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. இந்தத் திருக்கோயிலுக்கு 25–10–2006ல் திருக்குட நன்னீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்தக் குடநீராட்டு விழா நினைவாக இம்மலர் வெளியிடப்பெற்றுள்ளது.

இம்மலரில் இமயத்தலங்களைப்பற்றியும், காசியில் உள்ள பார்க்கத்தக்க இடங்களைப்பற்றியும், காசியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்து வந்துள்ள திருப்பணிகள் பற்றியும், கட்டுரையாகவும் கவிதையாகவும் தமிழறிந்த பெருமக்கள் எழுதிய எழுத்தோவியங்கள் இடம்பெற்றுப் பொற்குடத்துக்குப் பொட்டு வைத்ததுபோல, அழகு செய்கின்றன. இத்தமிழ்ச் சான்றோர்களுக்கு நம் நன்றிகள் உரித்தாகின்றன.

தமிழகத்தில் பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கும் சான்றோர்கள் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள். திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு சிவப்பிரகாச தேசிகர் அவர்களும் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களும், துலாவூர் ஆதீனகர்த்தர் அவர்களும், நகரத்தார் குருபீடமாக விளங்கும் கோவிலூர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிகர் அவர்களும் ஆசி வழங்க, இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களும் தொழிலதிபர் ஏ.சி. முத்தையா அவர்களும், காசி நகரச்சத்திரத்தின் முன்னாள் தலைவர் சுப. சண்முகம் செட்டியார் அவர்களும் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள். இப்பெருமக்களுக்கு நம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இம்மலருக்கு விளம்பரம் அளித்த பெருமக்கள் பணி மிகவும் பாராட்டுக்குரியது. திருக்குட நன்னீராட்டுக்கு நன்கொடை அளித்தும், காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரப் பணிகளுக்கு நன்கொடை அளித்தும் உதவிய பெருமக்களின் பெருங்கருணைக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை.

மலரின் இதழ்களை ஒரு முறை பார்த்து மலர் சிறப்பாக அமைவதற்கு வழிகாட்டிய பொற்கிழிக்கவிஞர் பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இம்மலரை மிகச் சிறப்பான முறையில் அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ் உரிமையாளர் திரு. ஆர்.எம். லெட்சுமிநாராயணன் அவர்களுக்கு நம் நன்றிகள் உரித்தாகின்றன.

இந்தப் பெரும் பணியில் எங்களை ஆட்படுத்திப் பணிகொண்ட காசி விசுவநாதரின் திருவருளுக்கு நாங்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் கைம்மாறு செய்ய முடியாது.

இம்மலர் காசி விசாலாட்சி விசுவநாதர் திருவடிகளில் மல்லிகைச் சரமாக மணம் வீச, இறைவன் திருவடிகளை இறைஞ்சுகிறோம்.

மலர்க் குழுவினர்

மதுரை

25-06-2007

ஸ்ரீ காசி அருள்மிகு நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர்
ஆலயத் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



ஸ்ரீ நகரேஸ்வரர்




அயோத்தி சத்திரத்தில் உள்ள ஸ்ரீ இராமபிரான்



காசி - ஸ்ரீ கால பைரவர்



நாசிக் பஞ்சவடி - ஸ்ரீ கார்த்திக் சுவாமி




அன்னபூரணி - லட்டுத்தேர்



ஸ்ரீ நகரேஸ்வரி



ஸ்ரீ விசாலாட்சி அம்மன்



ஸ்ரீ விசாலாட்சி கோவில் முன்புறத் தோற்றம்



ஸ்ரீ விசாலாட்சி கோவில் கல்வெட்டு



10-11-1999ல் நடைபெற்ற
ஸ்ரீ விசாலாட்சி அம்மன் ஆலயத்
திருக்குட நன்னீராட்டு பெருவிழாவின்போது
திரு. பிச்சைக்குருக்கள் கும்பாபிஷேகம்
செய்யும் காட்சி.




ஸ்ரீ காசி விஸ்வநாதர்



ஸ்ரீ தங்க அன்னபூரணி



ஸ்ரீ தங்க விசாலாட்சி



ஸ்ரீ பாதாள ஈஸ்வரர்



காசிச் சத்திரத்தின் கல்வெட்டு



காசியில் ஸ்ரீ விஸ்வநாதர் பூஜைக்கு "சம்போ" செல்லும் காட்சி.



வாரணாசி காசிச் சத்திரத்து மேலாளர் மற்றும் அலுவலர்கள்.

ஸ்ரீ காசி விஸ்வேசர் போற்றி

பொற்கிழிக் கவிஞர் சொ.சொ. மீ. சுந்தரம்

சீர்வளர் காசியில் சிவமே போற்றி!
வார ணாசியில் வளர்வாய் போற்றி!
அகல்பா பாய்க்கருள் அப்பனே போற்றி!
புகல் அடைந் தோர்களைப் புரப்பாய் போற்றி!
கங்கையைத் தாங்குசெஞ் சடையாய் போற்றி!
மங்கைக் கிடமே வழங்கினாய் போற்றி!
அன்னையின் வடிவில் அமர்ந்தாய் போற்றி!
அன்னபூ ரணியாம் அருந்தவ போற்றி!
மாசிலார் துன்பம் மாற்றுவாய் போற்றி!
காசிக் கயிற்றால் களைபவ போற்றி!
பூசும் நீற்றின் பொலிவே போற்றி!
பேசும் ஐந் தெழுத்தின் பெருமையே போற்றி!
தீர்வரும் மனநோய் தீர்ப்பாய் போற்றி!
பார்வையால் ஆட்கொள்ளும் பைரவ போற்றி!
அகிலம் காக்கும் ஐயா போற்றி!
அகிலே சன் எனும் அண்ணலே போற்றி!
ஆயிரம் பேர்கள் அமைந்தாய் போற்றி!
தாய்விசா லாட்சி தண்ணருள் போற்றி!
திருமறை தந்த திருவருள் போற்றி!
திருமுறைக் குள்வளர் சிவமே போற்றி!
கட்டளை பற்பல கண்டாய் போற்றி!
லட்டுத் தேரை நயந்தாய் போற்றி!
ஈசான்ய திக்கில் இலங்குவாய் போற்றி!
காசிவிஸ் வேசர் கழலிணை போற்றி!
பொங்கிய கங்கைப் பொலிவே போற்றி!
எங்கும் தெரியும் இலிங்கமே போற்றி!
நம்பின வர்க்கருள் நம்பா போற்றி!
"சம்போ" செல்லத் தாங்குவாய் போற்றி!
மங்கலம் குமரர்க்கு வழங்கினாய் போற்றி!
கங்கைக் கரைமடம் கண்டனை போற்றி!
அட்சய வடமாய் அமைந்தாய் போற்றி!
பிச்சை ஏற்கும் பெருமான் போற்றி!
ஆதி லிங்கமாய் ஆனாய் போற்றி!
சோதி லிங்கமாம் சுடரே போற்றி!

பார்த்த னுக்கருள் பசுபதி போற்றி!
தீர்த்தச் செம்பில் திகழ்வாய் போற்றி!
தகரா காசத் தவமே போற்றி!
மகாம யான வாழ்வே போற்றி!
வீட்டில் திகழும் விளக்கே போற்றி!
காட்டில் ஆடும் கண்ணுதல் போற்றி!
மணமிலாப் பூவின் மணமே போற்றி!
தணல்எரி யேந்தும் தலைவா போற்றி!
பொன்னைக் காட்டிப் புரப்பாய் போற்றி!
தன்னைக் காட்டும் தத்துவ போற்றி!
மன்னுல கெல்லாம் வளைத்தாய் போற்றி!
அன்பர் பிடிக்குள் அடங்குவாய் போற்றி!
கட்டிப் பிடிக்கக் காட்டுவாய் போற்றி!
தொட்டுத் தழுவச் சுடர்பவ போற்றி!
காதில் மந்திரம் ஓதுவாய் போற்றி!
பாதாள ஈசனாய்ப் படர்ந்தாய் போற்றி!
அஞ்சு லிங்கமாய் ஆனாய் போற்றி!
மிஞ்சும் அமைதி விளக்கமே போற்றி!
மங்கல மீனாள் மணாள போற்றி!
தங்கவிசா லாட்சி தலைவா போற்றி!
நகரே சப்பெயர் நயந்தாய் போற்றி!
நகரத் தார் தவ நற்பயன் போற்றி!
ஆதி அனாதியும் ஆனாய் போற்றி!
ஓதும் மந்திரத் துட்பொருள் போற்றி!
அளக்க லாகா ஆற்றலே போற்றி!
விளக்கில் விளங்கும் விளக்கமே போற்றி!
பக்தர்க் கருளும் பரம்பர போற்றி!
முக்தி அளிக்கும் முதலே போற்றி!
ஞானியர் காணும் நல்லொளி போற்றி!
ஆனந்த வனத்தில் ஆடுவாய் போற்றி!
பூரண ஞானப் பொலிவே போற்றி!
காரணம் கடந்த கடவுள் போற்றி!
பதியில் சிறந்த பதியே போற்றி!
நதியில் சிறந்த நதியே போற்றி!
பயம் கெடுத் தாளும் பரனே போற்றி!
சுயம் பிர காசச் சோதி போற்றி!
அணைந்தவர்க் கின்பம் அளிப்பாய் போற்றி!

மணிகர் ணிகையில் வழங்குவாய் போற்றி!
தொடரும் பாசம் சுடுவாய் போற்றி!
அடைவோர் பிறவி அறுப்பாய் போற்றி!
வினையெலாம் மாற்றும் விஸ்வேச போற்றி!
மனையெலாம் சிவமாய் வந்தவ போற்றி!
தாயென மடியில் தாங்குவாய் போற்றி!
ஒய்வளித் தாளும் ஒருவனே போற்றி!
பாடும் பணிக்கே பணிப்பாய் போற்றி!
கோடி தீர்த்தம் கொண்டவ போற்றி!
மரண பயத்தை மாற்றுவாய் போற்றி!
திருவருள் புரியத் தேடுவாய் போற்றி!
எண்ணுவார் நெஞ்சில் இனிப்பாய் போற்றி!
எண்ணிய படியே வருவாய் போற்றி!
கரும வினைகள் களைவாய் போற்றி!
தரும வனத்தில் தங்குவாய் போற்றி!
ராக்கால பூசை நயந்தாய் போற்றி!
பூக்கோலம் காட்டிப் பொலிவிப்பாய் போற்றி!
கல்லா நெஞ்சில் நில்லாய் போற்றி!
எல்லாம் சிவமாய் இருந்தாய் போற்றி!
அயன்தலை மாலை அணிந்தாய் போற்றி!
பயன்தரும் ஆகமம் பயந்தாய் போற்றி!
மதியை வ ளர்க்கும் வள்ளால் போற்றி!
கதியென நின்ற கடவுள் போற்றி!
திரிவேணி சங்கமம் திகழ்வாய் போற்றி!
அருள்பொழி கயைப்பதி அமர்ந்தாய் போற்றி!
பருகா அமுதாம் பண்பே போற்றி!
கருவாய் உலகம் காப்பாய் போற்றி!
மூவர்க் கருளும் முதல்வா போற்றி!
தேவரும் காணாச் சிவமே போற்றி!
கண்டம் கறுத்த கனியே போற்றி!
துண்டி விநாயகர் துணையே போற்றி!
வந்த பிறப்பாம் வரவே போற்றி!
சிந்தும் இறப்பாம் செலவே போற்றி!
ஆல நீழல் அமர்ந்தாய் போற்றி!
காலனைக் காய்ந்த கண்அழல் போற்றி!
தேசு மிகுந்த திருவருள் போற்றி!
காசிவிஸ் வேசக் கடவுளே போற்றி!

*****

உ
சிவமயம்

KOVILOOR MADALAYAM 04565 - 236846
Koviloor - 630 307
(Via-Managiri)
Sivagangai District.

Date : 12-12-2006



கோவிலூர் ஆதீனம் குரு மகா சந்நிதானம்
சீர்வளர் சீர் நாச்சியப்ப ஞான தேசிகர் அவர்களின்

அருள் ஆசி

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்னர் கால்நடையாகவும், வண்டிமூலமாகவும், கட்டிட சாமான்கள் கொத்தனார், தச்சர்களுடன்சென்று ஏற்படுத்திய பாரம்பரியம் மிக்க பெருமைக்குரிய நகரச்சத்திரம். காசி நகரச்சத்திரம். இருநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து இடைவெளியின்றி மூன்று கால பூஜைக்கு நைவேத்திய அபிஷேக ஆராதனைக்குரிய திரவியங்களை நேரந் தவறாது காசி விஸ்வநாதருக்கு அளித்துவரும் செயல் எண்ணறகரிய பேறுடையதாகும்.

இச்செயலைத் தொடர்ந்து செய்து வருகிற ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரசத்திர மேலாண்மைக் கழகத்தினரும் நகரத்தார் பெருமக்களும் போற்றுதற்கு உரியவர்கள்.

நகரச் சத்திரத்தினோடு அருள்மிகு விசாலாட்சி ஆலயம், ஸ்ரீ நகரேஸ்வரி உடனாய ஸ்ரீ நகரேஸ்வரர் ஆலயம் முதலியனவும் கட்டப் பெற்று இருநூறு ஆண்டுகளாகச் சிறப்பாகப் பராமரிக்கப் பட்டுவருகின்றன.

அண்மையில் நகரச்சத்திரத்தில் உள்ள ஸ்ரீ நகரேஸ்வரி உடனாய ஸ்ரீ நகரேஸ்வரர் திருக்கோவில் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது மிக்க மகிழ்ச்சி.

அதனை ஒட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

இவ்வரிய செயலை முன்னின்று நடத்திய மேலாண்மைக் கழகத் தலைவர் டாக்டர் முத்தையா அவர்கட்கும் மற்றைய உறுப்பினர்கட்கும் நம் பாராட்டுக்கள்.

அறம் செய்து வாழும் இனம் என்றும் புகழுடன் வாழும் உயரும். நம்முன்னோர் செய்த அறங்களைத் தொடர்ந்து செய்தும், மேலும் நம்மால் இயன்ற அறங்களையும் செய்து வருவோம். ஆயின் நம் இனம் பழைய மகோன்னத நிலையை விரைவில் எட்ட இயலும்.

நம்மவர் நல்லறங்களை பல இயற்றி எல்லாத்துறைகளிலும் முன்னிற்க அன்னை திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் மலரடிகளையும் கோவிலூர் ஆண்டவர் திருவடிகளையும் நினைந்து வாழ்த்துகிறோம்.

வேணும்
ஸ்ரீசற்குருநாதன் துணை

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் திருவாவடுதுறை
23ஆவது குருமகாசன்னிதானம் 609 803
சீர்–வளர்–சீர் **சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள்



அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழிஆண்ட குருமணிதன் தாள் வாழ்க

அன்புடையீர்,

திருவருளும் குருவருளும் என்றும் அருளுவதாக.

சீர்வளர்சீர் குருமகாசன்னிதானம் அவர்கள்,

குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெறவும், விழா அன்று வெளிவரும் மலர் சைவ மணம் பரப்பவும். விழாவில் கலந்து கொள்ளும் பத்தப் பெருமக்கள் மற்றும் நகரத்தார்கள் வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும், தமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றார்கள்.



அருள்தரு மங்களாம்பிகை உடனாய
அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி துணை
Ph : 04577-264446
His Holiness
SRI LA SRI NIRAMBA ALGIYA GNANAPRAKASA DESIKA
PARAMACHARIYA SWAMIGAL
MADATHIPATHI - THULAVUR MADURAI
KUNNAKKUDI - Via (Sivaganga Dt.) Pin : 630208 Tamilnadu, India
ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், மடாதிபதி, துலாவூர் மடம்

வாழ்த்துரை

நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குச் சொந்தமான (வாரணாசி) காசியிலுள்ள, நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மிகவும் பழமையான ஸ்தாபனம். அங்குள்ள சுவாமி, அம்பாள் திருக்கோயில் திருப்பணிகள் செய்யப்பெற்று மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. மிக்க மகிழ்ச்சி.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பொருளீட்டுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தாலும், திருக்கோவில் திருப்பணிகள் செய்வதையும், மஹாகும்பாபிஷேகம் செய்வதையும் தம் தொழிலாகக் கொண்டவர்கள். ஆகையால் மன்னவர் பின்னவர்கள் என்ற பாராட்டுப் பெற்றவர்கள். அவர்களின் ஆண்கள் குருவாகிய பாதரக்குடி சுவாமிகளையும், பெண்கள் குருவாகிய துலாவூர் சுவாமிகளாகிய நம்மையும் அழைத்திருந்தார்கள். தீபாவளி கங்காஸ்நானம், தங்க அன்னபூரணி தரிசனம். பிறகு யாக பூஜை பூர்ணாகுதி தரிசனம் செய்ததோடு, சுவாமி அம்பாளுக்கு மருந்து சாத்தும் பேறும் பெற்றோம். நகரத்தார் ஆண்களும், பெண்களும் சைவசமய தீட்சை பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ நகரேஸ்வரி சமேத ஸ்ரீ நகரேஸ்வரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் தலைவர் டாக்டர் MR. முத்தையா செட்டியார் அவர்கள் மற்றும் செயலாளர். பொருளாளர் நகரத்தார் முன்னிலையில் பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ K. பிச்சை சிவாசாரியார் அவர்கள் தலைமையில் 25–10–2006 காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது. எல்லோரும் தரிசித்துத் திருவருள் பெற்றோம். இதனையொட்டி வெளியிடப் பெறும் மஹாகும்பாபிஷேகமலர் சிறப்பாக அமையத்திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நலமே தழைக!

ஸ்ரீ நிரம்ப அழகிய சிவஞானப் பிரகாச தேசிக சுவாமிகள்

உ
சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

தவத்திரு **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்** குன்றக்குடி–630 206

நாள் : 18–4–2007



வாழ்த்துரை

நம் சமயத்தவரால் மிகவும் போற்றப்படும் புனிதத் திருத்தலமாகிய காசியில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் உள்ள அருள்மிகு நகரேசுவரி உடனாய அருள்மிகு நகரேசுவரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் கண்டு திருவருள் பொலிவுடன் விளங்குவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

நகரத்தார் பெருமக்கள் திருக்கோயில் திருப்பணிகளில் வழிவழியாக நிறைந்த ஆர்வம் உடையவர்கள். தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கும், நாயக்க மன்னர்களுக்கும் பின் விண்ணளாவிய கோபுரங்களோடும், கலையழகு கொழிக்கும் சிற்பச் சிறப்போடும் புதிய திருக்கோயில்கள் எழுப்பியும், பழைய திருக்கோயில்களைப் புதுப்பித்தும் திருப்பணிகள் பல செய்த பெருமை உடையவர்கள். அவர்கள் எங்கெங்கு சென்று வாழ்கிறார்களோ அங்கெல்லாம் திருக்கோயில் திருப்பணிகள் பல செய்துள்ளனர். இது அவர்களின் குருதியோடு கலந்து வரும் தெய்வ உணர்வாகும். காசியிலும் அதுபோன்ற நகரச் சத்திரத்தில் திருக்கோயில் அமைத்து வழிபாடு செய்து வருவதைப் பாராட்டி மகிழ்கிறோம்.

நடைபெற்ற திருக்குட நன்னீராட்டு விழாவை முன்னிட்டு மலர் வெளியிட இருப்பது மகிழ்வளிக்கிறது. மலர் அருள்மணம் கமழ வெளிவரவும் நகரத்தார்களின் திருக்கோயில் திருப்பணிகள் மேலும் மேலும் சிறந்து உலக மக்களுக்கு நலம் சேர்க்கவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

– பொன்னம்பல அடிகளார்

∗ திருக்குறளே நமது பொதுமறை ∗ திருமுறைகளே நமது மறை ∗

Dr. M.A.M. Ramaswamy, B.A., D.Litt.
Pro-Chancellor : Annamalai University
Member of Parliament (Rajya Sabha)

Flat. # 111, Ranka View Apartments
51/22-4, Richmond Road, Bangalore-560 025.
Tel : 080-25587779 Fax : 080-25584896

3-02-2007

வாழ்த்துரை

அன்புடையீர்,

காசி நகரச் சத்திரம் நகரத்தார்கள் நிறுவியதில் மிகவும் பழமை வாய்ந்தது. நகரத்தார்கள் தங்கள் வாழ் நாளில் ஒரு முறையேனும் காசி சென்று காசியில் விஸ்வநாதரை வழிபடுவார்கள். அத்தகைய தொன்மை மிகு நகரத்தார்கள் சத்திரத்தில் ஸ்ரீநகரேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீநகரேஸ்வரர் திருக்கோவில் இருப்பது பெருமதிப்பிற்குரியது.

விழா மலர் சிறப்பாக வெளிவர என்னுடைய வாழ்த்துக்களை மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

(மு.அ.மு. இராமசாமி)

New Delhi : C. 5/2, Vasant Vihar, New Delhi-110 057
Tel : 011-26156666, Tel Fax : 011-26156667
Chennai : Chettinad House, Rajah Annamalaipuram, Chennai-600 028.
Tel. : 044-24938800, 044-24938802 Fax : 044-24938263

SPIC HOUSE

No. 88, MOUNT ROAD, CHENNAI - 600 032.

A.C. MUTHIAH

6/12/2006

அன்புடையீர்,

வணக்கம்.

உங்கள் 25–11–2006 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் உள்ள ஸ்ரீநகரேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீநகரேஸ்வரர் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் இவ்வருடம் அக்டோபர் மாதம் 25–ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றதை அறிந்தும் இந்தக் கும்பாபிஷேகத்தை ஒட்டி நினைவு மலர் வெளியிட இருப்பதை அறிந்தும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மலர் சிறப்பாகவும் பொலிவுடனும் வெளிவர எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

அன்புடன்

அ.சி. முத்தையா

Dr. MR. முத்தையா
தலைவர்
ஸ்ரீகாசிநாட்டுக்கோட்டை நகரச் சத்திர
மேலாண்மைக் கழகம்
3, மேற்கு வடம்போக்கித் தெரு
காரைக்குடி – 630 001

Telephone : 91-44-2235087 / 22352336 e-mail : chairman@spic.co.in Fax : 91-44-22350308

சுப. சண்முகம் செட்டியார்

முன்னாள் தலைவர்

ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம்



வாழ்த்துரை

நமது முன்னோர்கள் போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாத காலத்தில் வடநாட்டுக்குப் போய் அங்கு புண்ணிய நதிகள் இருக்கும் ஸ்தலங்களில் இடம் வாங்கிச் சத்திரங்கள் கட்டியும் 1813ல் ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரருக்குப் பூஜைகள் செய்ய ஆரம்பித்து 1863 ல் ஸ்ரீ காசியில் புதிதாகச் சத்திரம் கட்டியும் காசி விஸ்வேஸ்வரர் கோவிலில் தினந்தோறும் நடைபெறும் நான்கு கால பூஜைகளில் மூன்று கால பூஜைகளை என்றென்றும் நடத்தி வர உரிமைகளைப் பெற்றும் பெரிய சாதனையைப் படைத்துள்ளார்கள். அதை மனதில் கொண்டு அவர்கள் தொடங்கி வைத்த சத்திரங்களும் பூஜைகளும் மேன்மேலும் சிறப்புற நடைபெற நகரத்தார் பெருமக்கள் அனைவரும் மேற்படி பணியில் பங்குபெற வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இம்மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

சுப. சண்முகம்

காசி விஸ்வநாதா

"பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ" "கபிலைமணி" **அரு. சோமசுந்தரன்,** M.A.B.T.

காசி விஸ்வ நாதா
கருணை பொழிய வாவா
காசி விஸ்வ நாதா
கருணை பொழிய வாவா

செட்டி நாட்டில் அன்று
செகம் புகழ வாழ்ந்து
கெட்டி வைத்த தங்கம்
கோயி லாக்கி வைத்தார் (காசி)

கல்கத் தாவில் அன்று
கடைகள் வைத்த போது
நல்ல ரெங்கோன் நோக்கி
நகரத் தார்கள் வந்தார் (காசி)

மகமை எழுதிச் சேர்த்த
மட்டில் லாத செல்வ
மகிமை யாலே காசி
மாந கர்க்கு வந்தார் (காசி)

காசி யிலே சத்திரம்
கல்கத் தாவில் சத்திரம்
நாசிக் கிலே சத்திரம்
நல்ல கயா சத்திரம் (காசி)

அலகா பாத்தில் சத்திரம்
அயோத் தியில் சத்திரம்
பலபல வாய்ச் சத்திரம்
பார் புகழக் கட்டினார் (காசி)

அன்ன தானம் செய்தனர்
ஆர வாரம் இல்லாமல்
சொர்ண தானம் செய்தனர்
சோழ மன்னர் போலவே (காசி)

விஸ்வ நாதர் கோயிலில்
மூன்று வேளை பூசைகள்
விஸ்வ நாதர் வாழ்த்திட
விருப்ப முடன் செய்கிறார் (காசி)

சம்போ கொண்டு போவது
சத்தி ரத்தின் சாதனை
சம்போ கொண்டு போகையில்
சாலை எல்லாம் கும்பிடும் (காசி)

நந்த வனம் பூவுக்கு
நாத சுரம் மேளங்கள்
கந்த னுக்கும் வேல்வேல்
காசிக் கும்மே வேல்வேல் (காசி)


நாலு முறை வேலினை
நடந்தெ டுத்து வந்தனம்
கோல நக ரேசரின்
கோயி லிலே வைத்தனம் (காசி)

தங்க அன்ன பூரணி
தங்கி யுள்ள சத்திரம்
மங்க ளமாய்ப் பூசைகள்
நாத சுர ஓசைகள் (காசி)

பாதா ளத்தில் ஈஸ்வரர்
பார்க்கும் நக ரேஸ்வரர்
வேத நாத யாகங்கள்
வியக்கும் கும்பாபி ஷேகங்கள் (காசி)

நகரத் தார்கள் செய்தது
நாடு போற்றும் சாதனை
நகரத் தார்கள் நீடுழி
நாடு போற்ற வாழ்கவே (காசி)

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழக நிர்வாகிகள் 2004 - 2007



தலைவர்
டாக்டர் MR. முத்தையா
கோட்டையூர்




துணைத் தலைவர்
அன்பு நா.சிதம்பரம்
கண்டனூர்



துணைத் தலைவர்
PR. சொக்கலிங்கம்
காரைக்குடி




செயலாளர்
Agri SP. சொக்கலிங்கம்
வலையபட்டி



உதவிச் செயலாளர்
AN. சோமசுந்தரம்
அரிமழம்




உதவிச் செயலாளர்
M. ராமனாதன்
கொத்தமங்கலம்




பொருளாளர்
SP. அழகப்பன்
கண்டவராயன்பட்டி

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழக செயற்குழு உறுப்பினர்கள் 2004 - 2007



S.KR. பழனியப்ப செட்டியார்
சொக்கலிங்கம் புதூர்




AR.SP. ஆறுமுகம்
மேலைச்சிவபுரி



N.N. சுவாமிநாதன்
கல்லல்



O. சிங்காரம்
கொ. அழகாபுரி



AL. சின்னையா
குழிபிறை



N.SP.RM. திருநாவுக்கரசு
உலகம்பட்டி



S. சுப்பிரமணியன்
ராங்கியம்



T. தேனப்பன்
சிறு கூடல்பட்டி



PL. அண்ணாமலை செட்டியார்
கொப்பனாபட்டி


ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழக செயற்குழு உறுப்பினர்கள் 2004 - 2007



K. ராஜா சுவாமிநாதன்
சக்கந்தி



K. கண்ணப்பன்
மானகிரி




T.PN. பெத்தாச்சி
சண்முகநாதபுரம்




S.RM.RM. கண்ணப்பன்
நாட்டரசன் கோட்டை



AL.AR.SM. நாராயணன்
செட்டியார்
தேவகோட்டை



ராம. சிவராமன்
கீழச்சிவல்பட்டி



L. ராமன்
கண்டரமாணிக்கம்



A. ராமனாதன்
தேவகோட்டை



காசிஸ்ரீ
SP. ராகவன் செட்டியார்
சொக்கனாதபுரம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழக செயற்குழு உறுப்பினர்கள் 2004 - 2007




VR.S. மெய்யப்பன்
புதுவயல்




RM. அழகப்பன்
கோ.அழகாபுரி



AL.S. அழகப்ப செட்டியார்
காரைக்குடி



P.RM. பழனியப்பன்
அரிமழம்



N.A.M.N. மெய்யப்பன்
கல்லுப்பட்டி



N. மெய்யப்பன்
காரைக்குடி



திரு. திருநாச்சியப்பன்
நாச்சியாபுரம்




ஆடிட்டர் M. சுப்பையா
ஆ. தெக்கூர்



ஆடிட்டர் PL. சோலையப்பன்
கல்லல்

- M. சோமசுந்தரம், பி. அளகாபுரி
- RM. சொக்கலிங்கம், ஆ. முத்துபட்டினம்
- RM. அண்ணாமலை, கானாடுகாத்தான்
- MR. RM. முத்தையாராமன், விரையாச்சிலை
- ஆடிட்டர் M. ராமசாமி, சண்முகநாதபுரம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழக முன்னாள் தலைவர்கள்



முதல் தலைவர்
AL.AR. சோமநாதன் செட்டியார்
தேவகோட்டை
(1970 – 1977)




அ.ராம.அ.லெ.முவீ.
முத்துவீரப்ப செட்டியார்
தேவகோட்டை
(1977 – 1980)




சி.க.அரு.சோம.
இராமநாதன் செட்டியார்
ஒக்கூர்
(1980 – 1984)



உ.ராம.மெ.சுப.சேவு.அ.
அண்ணாமலை செட்டியார்
தேவகோட்டை
(1984 – 1989)



சுப. சண்முகம் செட்டியார்
கண்டனூர்
(1989 – 1998)



டாக்டர் MR. முத்தையா
கோட்டையூர்
(1998 - 2001)



S.KR. பழனியப்ப செட்டியார்
சொக்கலிங்கம் புதூர்
(2001 – 2004)

श्री काशी विश्वनाथो विजयतेतराम्

Shri Kashi Vishwanath Mandir

Vishwanath Gali, Varanasi-221001 Ph.: 0542-2392629

विश्वनाथ गली, वाराणसी-221001

क्रमांक —

दिनांक 7.12.2005

LETTER OF APPRICIATION

Nattukkottai Nagarathars of Chettinad in Tamilnadu have traditionally been spending their wealth, time and energy in renovating temples, building and maintaining choultries through out India. They have built the famous Nattukkottai Nagara Chutram in Varanasi and maintaining it very well from the year 1813. The fact that they have been offering pooja and harathy articles for three poojas (Mangala Arthi, Bogh Arthi and Singar Arthi) every day for the famous Sri Kasi Viswanath temple and two poojas for Sri Armapoorani temple continuously without any break for the last eighteen decades is a matter of pride for the holy city of Varanasi. Every day when the pooja articles are taken from chartram to temple by Sambo a

श्री काशी विश्वनाथो विजयतेतराम्
Shri Kashi Vishwanath Mandir
Vishwanath Gali, Varanasi-221001 Ph.: 0542-2392629
विश्वनाथ गली, वाराणसी-221001

क्रमांक.................... दिनांक 07.12.2008

precession preceeded by Nadhaswaram recital, all the devotees and public all along the route used to give respect and worship.

The chatram provides safe shelter and food for all those country to worship Lord Viswanath. I place on record my APPRICIATION of the activities of Sri Kasi Nattukkottai Nagara Satram Managing society and pray God that they should continue to prosper and serve Lord Viswanath and facilitate the devotees for ever.

CEO
(M.D. DUBEY)

உ
சிவமயம்



வாரணாசி (ஸ்ரீகாசி) அருள்மிகு நகரேஸ்வரி உடனுறை நகரேஸ்வரப் பெருமான் திருக்கோவில் அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேக அழைப்பிதழ்

விநாயகர்

கற்பகம் என்றும் வேத
கணபதி என்றும் தெய்வ
அற்புதக் களிறே என்றும்
அருளினைப் போற்றி உன்றன்
பொற்பதம் பணிவோர்க் கின்பம்
போற்றியே நல்கும் காசித்
தற்பரன் திருத்தாள் எங்கள்
தலையிலைச் சேர்த்தி னோமே.

முருகன்

கோமமா மலைகள் ஆறும்
குமரனே ஞான மென்றும்
சீலமார் வேலை ஏந்தும்
செல்வனே பொங்கு கங்கைச்
சோலையின் மலரைப் போலச்
சுந்தர முகங்கள் காட்டும்
வேலனே காசி வாழும்
வித்தகா போற்றி, போற்றி.

ஸ்ரீ நகரேஸ்வரர், ஸ்ரீ நகரேஸ்வரி

அகமெலாம் நிறைந்த அன்பினைப் பெருக்கி
ஆதியில் அமைத்த ஆலயம் இதனில்
இகபர சுந்தனை ஈந்து உவந்து
இனியஇக் காசியில் இன்பமே தந்து
நகரேஸ் வரராய் நகரேஸ் வரியாய்
நானிலம் போற்ற நன்கு அமர்ந்த
பாகம் பிரியாளைப் பற்றுக மனமே
பவப்பிணி யாவும் பறந்திடும் படியே.

ஸ்ரீ பாதாள ஈஸ்வரர்

காசியிலே நகரத்தார் அமைத்த நல்ல
கருத்தான சத்திரத்துக் கோயிலுக் குள்
பாசமுடன் பல்லாண்டாய் விளங்கி நிற்கும்
பாதாள ஈஸ்வரரே! பரம் பொருளே!
வந்தனைசெய்(து) உனைப்பாடி வழிபட போரை
வந்தடைந்த பாவங்கள் போக்கி நல்ல
சொந்தமெலாம் வாழவைக்கும் ஈசா உன்னைச்
சொல்லாலே வணங்குகின்றோம், வாழ்த்துவாயே.

மெய்யன்பர்களே,

வணக்கம். நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு சொந்தமான வாரணசி (காசி) அருள்மிகு நகரேஸ்வரி உடனுறை நகரேஸ்வரப் பெருமான் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா, நாளது விய ஆண்டு ஐப்பசித் திங்கள் 8ஆம் நாள் (25.10.2006) புதன்கிழமை சதுர்த்தி திதியும் அனுஷ நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 9.00க்கு மேல் 9.45க்குள் தனுர் லக்கினத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வந்து வணங்கி அருள்மிகு நகரேஸ்வரி உடனுறை நகரேஸ்வரப் பெருமான் திருவருளை அடைந்து இம்மையிலும், மறுமையிலும் நீங்காத செல்வம் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்

விய ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் நாள்	22.10.2006 ஞாயிற்றுக்கிழமை	காலை மணி 9.00 க்கு	அனுக்ஞை, விக்னேஸ்வரர் பூஜை, தனபூஜை, கணபதி ஹோமம்
விய ஆண்டு ஐப்பசி மாதம் 6ஆம் நாள்	23.10.2006 திங்கட்கிழமை	மாலை மணி 4.00 க்கு	கடஸ்தாபனம், முதல் கால யாகபூஜை
		இரவு மணி 9.15 க்கு	பூர்ணாகுதி, தீபாராதனைகள்
விய ஆண்டு ஐப்பசி மாதம் 7ஆம் நாள்	24.10.2006 செவ்வாய்கிழமை	காலை, மாலை இருவேளைகளிலும்	2ஆம், 3ஆம் கால யாகபூஜைகள்
		இரவு மணி 9.15க்கு	பூர்ணாகுதி, தீபாராதனைகள்
விய ஆண்டு ஐப்பசி மாதம் 8ஆம் நாள்	25.10.2006 புதன்கிழமை	காலை மணி 6.00க்கு	4ஆம் கால யாகபூஜை
		காலை மணி 8.35க்கு	பூர்ணாகுதி, தீபாராதனைகள்
		காலை மணி 9.00 to 9.45க்குள்	மஹா கும்பாபிஷேகம்
		காலை மணி 11.00க்கு	மஹா அபிஷேகம்
		மாலை	சுவாமி புறப்பாடு

காரைக்குடி
24.9.2006

இங்ஙனம்,
ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்
மேலாண்மைக் கழகம்

ஸர்வ சாதகம் Dr.K.பிச்சைக்குருக்கள்

Iyyappan Print House : 4370438

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், வாரணாசி

சிவத் தலங்களிலெல்லாம் நிகரற்று விளங்கும் காசியம்பதியில் கங்கை கரையிலும் சரி, நகரெங்கிலும் சரி ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் உள்ளன. கண் பார்வை செல்லுமிடமெங்கும் ஒரு சிவலிங்கத்தைக் காணலாம். புதிய சிவன்கோயில் அமைக்க காசியிலிருந்து சிவலிங்கம் வரவழைப்பது மரபு.

இவ்வாறு சிவலிங்க வடிவமாய்த் திகழும் காசியில் கோயில் கொண்டுள்ள விசுவேசர்க்கு தினந்தோறும் நடைபெறும் நான்கு காலப் பூஜைகளில் **மூன்று காலப் பூஜைகளை** செய்யும் பேறுபெற்ற புகழ்மிக்க ஒப்பற்ற நிறுவனம் **காசி நகரச்சத்திரம்.**

காசிமா நகரின் வாழ்விலும் வரலாற்றிலும் இச்சத்திரம் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறது. நகரச்சத்திரம் விசுவேசர் கோயிலுக்கு அருகேயுள்ள குதோலியா சந்திப்பையடுதது அமைந்த கட்டிடமாகும். கல்கத்தாவில் தொழில் செய்துவந்த நகரத்தார்கள் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடத்தை விலைக்கு வாங்கி அதைப் புதுப்பித்து 1863ல் ருத்ரோத்காரி ஆவணி 10ம் தேதியில் **நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம்** என்ற பெயரில் தொடங்கினார்கள். அன்று முதல் விசுவேசர், விசாலாட்சி, அன்னபூரணி முதலிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூஜைகள் சிறப்பாகச் செய்யப்பெற்று வருகின்றன.

1863ல் கோஷாயிஅரிதயான்கிரி 1866ல் கிருஷ்ணய்ய சாஸ்திரி 1873ல் ஈரலால் 1874ல் கின்னுகிரி கொசாயி, காந்ததாகிரி கொசாயி, 1877ல் பாபுமியா, 1884ல் பத்திக்கி நாத் கோசுவாமி, 1894ல் விசுவநாதகோசுவாமி, துர்கா பிரசாத் 1895ல் மன்னுப்படடு பிராமணர் என்பர்களிடமும் இடங்கள் வாங்கப்பெற்று இவ்வற்றை தக்கவாறு கட்டி பெரியதொரு மாளிகையாக நகரத்தார்கள் அமைந்துள்ளனர்.

விசுவேசருக்கு அபிஷேகம் செய்ய தூய்மையான பால் குறித்த நேரங்களில் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாட்டையும் நகரத்தார்கள் செய்திருந்தார்கள். சொந்தமாகவே பசுமடம் தொடங்கினார்கள். அதற்குரிய இடத்தை நகரச்சத்திரத்திற்கு அருகேயே வாங்கி 15–1–1897ல் கட்டிடம் கட்டி முடித்தனர். இதில் சொந்தமாகப் பசுக்களை வைத்துப் பால் கறந்து அபிஷேகம் நடத்தி வந்தனர். பின்னர் அந்த இடத்தில் கட்டிடம் கட்டி அட்டாச்பாத்ரூம் உள்ள அறைகளாக மாற்றியிருக்கிறது.

காசி விசுவேசருக்கு நாளும் நறுமலர்கள் அனுப்ப நந்தவனம் ஒன்றை நடத்தி வந்தனர். 1894ம் ஆண்டில் சிக்ரா பகுதியில் பெரிய தோர் இடம் வாங்கி நந்தவனம் அமைக்கப்பெற்றது.

மீண்டும் 1902லும், 1905லும் புதிதாக இடங்கள் வாங்கி நந்தவனம் விரிவாக்கப்பெற்றது. இது தவிர பசுமடத்துக்காகவும், நந்தவனத்துகாகவும் 8–12–1924ல் காசிநாத பட்டாச்சாரி என்ற வங்காளியிடம் இடம் வாங்கியிருக்கிறார்கள்.

இரங்கூன் நகரத்தார்கள் அந்நகரில் நடத்திய நந்தவனத்துக்குரிய நிதியை 1955ல் காசிநகர சத்திரத்துக்கு கொடுத்து உதவினர்.

இச்சத்திரம் தொடங்கியது முதல் இச்சத்திரத்தின் சார்பாக நடைபெற்றுவரும் மூன்று காலப் பூஜைகளுக்கும், உச்சிக்காலப்பூஜைக்கு ஒரு தடவையும் அர்த்தஜாமத்துக்கு ஒரு தடவையும் ஸ்ரீ காசி விஸ்வேசர் கோவிலுக்கு சத்திரத்து வேலை ஆட்களும் சாதுக்களும் அபிஷேக ஆராதனைப் பொருள்களை நாதஸ்வர இன்னிசையுடன் **சம்போ சம்போ சங்கர மஹா தேவா** என்று வழிநெடுக சொல்லிக்கொண்டே கோவிலுக்கு கொண்டு செல்வார்கள். அதோடு அன்னபூரணி கோவிலுக்கும் பூஜைப் பொருள்களைக் கொண்டு செல்வார்கள். மங்கள ஆர்த்தி விசுவேசர் கோவிலுக்கு அர்த்தஜாமப் பூஜைப் பொருள்கள் கொண்டுபோகும் போது மறுநாள் அதிகாலையில் நடக்கும் உசத் காலைப்பூஜைக்குரிய பொருள்களையும் சேர்த்துக் கொண்டு போய்க் கொடுப்பார்கள். பொதுமக்கள் கடைக்காரர்கள் ஆகியோர் சம்போவைப் பார்த்து இன்றும் வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அன்னபூரணி கோவிலுக்கு ஒரு காலப் பூஜைக்குரிய பொருள்களும் ஒருகாலத்துக்கு அபிஷேகத்துக்கு பால் மட்டும் கொடுத்து வந்தோம். தற்போது கோயில் மகந்துகள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க இரண்டு காலத்துக்குரிய பூஜைப்பொருள்கள் அனைத்தும் அனுப்பிவைக்கிறோம்.

சம்போ என்ற சொல் சிவபெருமானைக் குறிக்கும் சிவபெருமானுக்குரிய பூஜைப் பொருள்களைகளைக் கொண்டு செல்வதை அங்குள்ள மக்கள் 'சம்போ' என்று அழைக்கிறார்கள்.

நாள்தோறும் இச்சத்திரத்திலிருந்து அனுப்பப்பெறும் பொருள்களைக் கொண்டு கோவிலிலேயே நைவேத்தியம் தயார் செய்ய வேண்டும் என்பதற்காக கோவிலுக்குள்ளே மடப்பள்ளியை நகரத்தார்கள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீவிசுவேசர் கோவிலில் உள்ள கோபுரத்தில் மெர்க்குரி லைட்டுப்போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளி அறைக்கு வெள்ளிக்கட்டில், நைவேத்தியம் வைப்பதற்கு உள்ள நாற்காலிகள், முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். நைவேத்தியத்துக்கும் தீபத்துக்கும் வேண்டிய பொருள்கள் யாவும் ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு அனுப்பபெறுகின்றன. அபிஷேகத்திற்கு கங்கை நீர்வைப்பதற்கு 5 தாமிர அண்டாக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. புதிய வெள்ளி நாகாபரணம் செய்து கொடுக்கப்பெற்றிருக்கிறது.

காசி விசுவநாதர் கோவிலுக்கு ஒரு நாள்கூட சம்போ போவதில் தடை ஏற்பட்டது கிடையாது. 1942ம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் நடைபெற்ற காசிமாநகரில் கலகங்கள் நிகழந்தன. ஊரடங்குச் சட்டம் போடப்பெற்றது. அப்போதும் கூட விதிவிலக்குப் பெற்று சம்போ உரியநேரத்தில் சென்று வந்தது. தற்போதும் அதேபோல அரசு நமக்கு ஊரடங்குச் சட்டம் இருக்கும் போது விதிவிலக்கு அளிக்கிறது.

குளிர்காலச்சட்டை

ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசிமாதம் சிவராத்திவரை குளிர் காலச்சட்டை (மக்–மல்பட்டு) நம் சத்திரத்திலிருந்து விசுவேசருக்கு அணிவிக்கப்பெறுகிறது.

காலை 10.45 மணிக்கும் இரவு 8.30 மணிக்கும் பூஜைப்பொருள்கள் காசி விசுவநாதர் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இன்றைய விலைவாசி ஏற்றத்தையும் கூட பொருட்படுத்தாது தினமும் ஸ்ரீவிசுவேசர் கோவிலுக்கு அனுப்பிவரும் சம்போ ஆராதனைப்பொருள்களின் அளவுகளை அதிகப் படுத்தி நம் முன்னோர்களால் ஆரம்பிக்கப்பெற்ற இத்தருமச்செயலை மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்திவருகிறோம்.

நகரேஸ்வரர் கோவில்

சத்திரத்துக்குள்ளேயே இருக்கிறது. இந்தக்கோவிலில் உள்ள சிவபெருமானுக்கு **நகரேஸ்வரர்** என்றும், இறைவிக்கு **நகரேஸ்வரி** என்றும் பெயர். நகரேஸ்வரர் கோயிலின் வெளிவாசலுக்கு வெளியே மேற்குப்பகுதியில் கிழக்குப்பார்த்த முகமாக ஒரு விநாயகர் திருவுருவம் இருக்கிறது. நகரேசுவரருக்கு திருவாட்சி உண்டு. இது கல்கத்தா தண்டாயுதபாணி கோவிலிலிருந்து கொண்டு வரப்பெற்றது. நகரேசுவரருக்கு எதிரில் நந்தியும் கருவறையின் வாயிலில் பிள்ளையார் தண்டாயுதபாணி திருவுருவங்களும் அமைந்துள்ளன. சுற்றுப்பிரகாரத்தில் கருவறை மதிலில் தட்சிணாமூர்த்தி அண்ணாமலையார், பிரம்மா, திருவுருவங்களும், பிரம்மாவுக்கு எதிரில் சண்டிகேசுவரர் திருவுருவங்களும் காணப்பெருகின்றன. கருவறை மதிலுக்கு எதிரில் சுற்றுப்பிரகாரத்தில் நந்தியுடன் கூடிய 48 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கின்றன. தென்மேற்கு மூலையில் விநாயகரும் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியரும் காட்சி கொடுக்கின்றனர். இரண்டு வேல், இடும்பன் ஆகியவையும் இருக்கின்றன. கல்கத்தா சின்ன வீட்டுக்காரர்களால் இவை கொண்டு வரப்பெற்றன. சுற்றுப் பிரகாரத்தில் வட பகுதியில் நகரேஸ்வரிக்கு உட்கோயில் இருக்கிறது. வடகிழக்கு மூலையில் வைரவர் விக்கிரகம்

இருக்கிறது. இக்கோயிலில் தினசரிப் பூஜைகளோடு சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை, விசாகம், சஷ்டி உற்சவங்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. 11–2–1962ல் மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோவிலைப் புதுப்பித்து 29–10–1978லிலும் 7–11–1994லும் 25–10–2006 லும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

பாதாள ஈஸ்வரர் கோவில்

சத்திரத்துக்குள்ளேயே இருக்கிறது.

இக்கோயிலில் 4 சிவலிங்கமும் ஒரு நந்தியும் ஒரு பாவைவிளக்கும் உள்ளன.

சத்திரத்தின் ஒரு பகுதி நகரத்தார்கள் விலைக்கு வாங்குமுன் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடமாக இருந்தது. அந்த மடத்தில் பெருமதிப்பிற்குரிய துறவி ஒருவர் சமாதி அடைந்தனர். அவ்விடத்தில் லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றன. இந்த லிங்கங்களுக்கு 'பாதாள ஈஸ்வரர்' என்ற பெயர் நிலவிவருகிறது. பாதாள ஈஸ்வரரின் பெருமையே நகரச்சத்திரம் அடைந்துள்ள பெரு முன்னேற்றத்திற்கு காரணம் என்று நகரத்தார்கள் நம்புகிறார்கள். காசி யாத்திரை மேற்கொள்வோர்அறிந்தோ அறியாமலோ செய்திருக்கக்கூடிய தவறான செயல்களுக்குப் பிராயச்சித்தமாக காசியை விட்டுப் புறப்படு முன் பாதாள ஈஸ்வரருக்கு அபிஷேகம் செய்வது வழக்கம். பலர் சேர்ந்து கூட்டாகவும் அபிஷேகம் செய்யலாம். தினசரி பூஜையோடு ஒவ்வொரு திங்கட்கிழமையும் வெகு சிறப்பாக அபிஷேகம் செய்யப்படுகிறது. அவர்கள் விரும்பும் தொகையை சத்திரத்தில் கொடுத்தால் அதை திங்கட்கிழமை நடைபெறும் பூஜைக்கு பயன்படுத்துவார்கள்.

அன்னபூரணி கோயில்

சத்திரத்தில் அன்னம் பாலிக்கும் மண்டபத்தில் கருங்கல் திருவுருவம் நிறுவப்பெற்றிருக்கிறது. தினசரி பூஜையும் நடைபெறுகிறது.

மானேஜர் பெட்டியடிக்கு அருகே சுப்பிரமணியர், நடராஜர், பரமசிவன் பார்வதி. ஸ்ரீ காசி விஸ்வநாதர் படங்கள் உள்ளன. நடராஜர் சிவகாமி அம்மன் மாணிக்க வாசகர் திருவுருவங்களும் உள்ளன. நகரேஸ்வரர் கோயில் பூஜை நடைபெறும் போது மேற்கண்ட திருவுருவங்களுக்கும் படங்களுக்கும் பூஜை நடைபெறுகிறது.

தீபாவளிக்கு முதல் நாளும் தீபாவளி அன்றும் தீபாவளிக்கு மறுநாளும் ஆக மூன்று நாட்களில் நகரேஸ்வரர் கோயிலில் **தங்க விசாலாட்சி** அம்மனை வைத்து பூஜை செய்யப்பெறுகிறது. மூன்று நாட்களும் அம்மனைத் தரிசிக்க பெரும் கூட்டம் வருகிறது.

தீபாவளி அன்று இரவில் சத்திரத்தில் உள்ள அன்னபூரணி ஹாலில் திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது. 108 நகரத்தார் பெண்கள் கலந்துகொள்கிறார்கள். தீபாவளி அன்று காலையில் நம் சத்திர அலுவலகத்தில் மஞ்சள் உப்பு கற்கண்டு சர்க்கரை மற்றும் பல மங்கலப்பொருள்கள் ஏலம் நடைபெறுகிறது. நகரத்தார்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

அன்னம்பாலிப்பு

தீபாவளிக்கு முதல் நாள் இரவு பலகாரமும் தீபாவளி அன்று காலைப் பலகாரம். மதிய உணவு, இரவு பலகாரமும் தீபாவளிக்கு வரும் அனைவருக்கும் வழங்கப்பெறுகிறது. நான்கு வேளைகளுக்கும், உபயதார்கள் தரும் தொகைக்கு மேல் ஆகும் செலவை சத்திரமே ஏற்றுக் கொள்கிறது.

9.2.1970ல் 76 ஊர் நகரத்தார்கள் நிர்வாகத்தை ஒப்புக் கொண்டபின் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன. ஸ்ரீ வில்வேஸ்வரர் கோவிலில் நாம் கட்டிக் கொடுத்திருக்கும் மடப்பள்ளியை மறாமத்துச் செய்திருக்கிறது. நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று கீழ்க்கண்ட பணிகள் செய்திருக்கிறது.

1. நகரேஸ்வரர் சன்னிதானத்தில் ஸ்பிரிங்கேட் போட்டிருக்கிறது
2. நகரேஸ்வரி சன்னிதானத்தில் இரும்பு கேட் போட்டிருக்கிறது.
3. மேல் வீட்டில் புதிதாய் குளியல் அறையும் கழிவறையும் கட்டியிருக்கிறது.
4. நகரேஸ்வரர் கோவிலுக்கு அருகில் பசுமடம் கட்டியிருக்கிறது.
5. மரப்பெருச்சாளி வாகனம் செய்யப் பெற்றிருக்கிறது.
6. நகரேஸ்வரர் முன்புள்ள வரசித்தி விநாயகருக்கு வெள்ளி அங்கி செய்யப் பெற்றிருக்கிறது.
7. குளியல் அறை கழிவறை வசதியுடன் கூடிய 5 புதிய தங்கும் அறைகள் கட்டியிருக்கிறது.

சத்திரம் 1863ம் வருடம் கட்டப் பெற்றதால் அடிக்கடி எங்காவது பழுது ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

அதனால் 1983க்குப் பின் கீழ்க்கண்ட பணிகள் செய்யப்பெற்றன.

சத்திரத்தின் பின்பகுதி சுவர், தார்சு பூராவும் வெடிவு ஏற்பட்டும் அதை ஒட்டி முன்புறம் உள்ள ரூம்கள் அனைத்திலும் வெடிவுகள் ஏற்பட்டும் விட்டது. நம் பகுதியிலிருந்து நல்ல அனுபவமுள்ள வேலைஆட்களை அனுப்பி பின்பக்கச் சுவர், தார்சு, முன்பக்கமுள்ள ரூம்கள் அனைத்தையும் சீர்செய்யப்பெற்றது.

அதே மாதிரி சத்திரத்தின் முன்பக்கம் உள்ள சுவர்களில் வெடிவுகள் ஏற்பட்டு நீண்ட காலமாக சீர் செய்ய முடியாமல் இருந்தது. சுவரை ஒட்டி ஏராளமான எலெக்ரிக் ஒயர்கள்

செல்வதால் சுவற்றில் வேலை செய்ய யாரும் முன்வரவில்லை. இறைவன் அருளால் எந்த ஆபத்ததும் இல்லாமல் சுவரை சீர் செய்து பெயிண்டும் அடித்து விட்டோம். தற்போது கட்டிடத்தின் முன்பக்கம் பார்க்க ரொம்ப அழகாக இருக்கிறது. நமது அலுவலகத்துக்கு மேல்மாடியில் புழக்கத்தில் இல்லாமல் பெரிதும் பழுதுபட்டிருந்த 5 தங்கும் அறைகளையும் மராமத்துச் செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அந்த மாடியிலேயே 5 ரூம்களில் தங்குபவர்கள் உபயோகத்துக்கு ஒரு குளியலறையும், கழிவறையும் புதிதாய் கட்டியிருக்கிறது. நம் சத்திரத்தின் நடைபாதையிலும் நகரேஸ்வரர் கோவில் அருகேயும் உள்ள வாரத்திலும் மரக்கைகள் பெரிதும் பழுதடைந்து விட்டன. மரக்கைகள் அனைத்தையும் மாற்றி வாரம் பூறாவும் சீர் செய்திருக்கிறது சத்திரம் பூறாவும் எலெக்ட்ரிக் ஒயர்கள் பழுதாகிவிட்டதால் புதிய ஒயரிங் செய்யப்பெற்றுள்ளது.

நந்தவனம்

நந்தவனத்தில் பல இடங்கிளில் சுவர்கள் இடிந்துவிட்டதால் அவைகளை அகற்றி விட்டு புதிதாக உயரமான சுவர்கள் கட்டப்பெற்றது. நமக்குச் சொந்தமான சிக்ரா லாட்ஜ்க்கும் நந்தவனத்துக்கும் இடையில் சிறிய கட்டைச்சுவர் இருந்தது. அதனால் சிக்ரா லாட்ஜ்வில் குடி இருப்பவர்கள் நந்தவனத்துக்குள் நுழைந்து தொந்திரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். அதனால் அந்த சுவரையும் நாம் புதிதாகக் கட்டிய சுவர் உயரத்துக்கு உயர்த்திக் கட்டியிருக்கிறது.

சத்திரத்துப் பணிகள்

கோவில் பூறாவும் சுவர்களை கொத்திவிட்டு புதிதாக சிமிண்ட் போட்டு சீலிங் புதிதாகப் போட்டு மூலஸ்தானத்தில் 3 அடி உயரத்துக்கு மார்பிள் பதித்து சுவர்களுக்கு டிஸ்டெம்பர் அடித்திருக்கிறது.

இரவில் யாத்ரீகர்கள் வந்தவுடன் சத்திரத்தின் முன் கதவு திறந்ததும் நேராக கோயில் வரை வந்து விடுவார்கள். இரயில்கள் பெரும்பாலும் அகாலத்தில் வருவதால் இரவில் 2 மணி 3 மணிக்குக் கூட யாத்ரீகர்கள் வருகிறார்கள். ஊர் நிலைமை அங்கு சரி இல்லாததால் சத்திரத்திற்கும் அங்கு பணியாற்றும் அலுவலர்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக நடைபாதையில் திண்ணைக்குப் பக்கத்தில் ஒரு கிரில் கேட்டுப் பொறுத்தி அந்த இடத்தில் காலிங் பெல்லும் வைத்திருக்கிறோம். வருகிறவர்கள் மணியை அடித்தால் மேல் வீட்டில் ஆபீசுக்குப் பக்கத்தில் படுத்திருப்பவர்களுக்கு கேட்கும்படியாக மணியை வைத்திருக்கிறோம். உள்ளே இருந்தவாரே வெளியில் இருக்கிரவர்களை விசாரித்து தெரிந்து கொண்டு தற்போது அனுமதிக்கிறார்கள்.

சத்திர அலுவலகத்தின் அருகே பெரிதும் பழுதடைந்திருந்த மூன்று சிறிய அறைகளை சீர் செய்து புழக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறது.

ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் கோவிலுக்கு நகரத்தார்கள் பசுமடம் சந்து வழியாக போய் வருவார்கள் அந்தப் பாதை பொது நடைபாதையாக இருந்து வந்தது. அந்தப் பாதை நீண்டகாலமாக அசுத்தமாக இருந்ததால் அதை சீரமைப்பு செய்து நாம் மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ளும் வகையில் வெளியே இரும்பு கேட்டும் போட்டிருக்கிறது.

சத்திரத்தில் உள்ள கிணற்றை கூடுதல் ஆழம் செய்து புதிய மோட்டார் பொருத்தி இருக்கிறது. அன்னபூரணி ஹாலில் சாப்பிட வருபவர்கள் கைகழுவ மூன்று தண்ணீர் பைப்பு குழாய்கள் பொருத்தி அதற்கு தொட்டியும் கட்டியிருக்கிறது. பசுமடம் மறாமத்து செய்து சிமிண்ட் தரை போட்டிருக்கிறது.

சத்திரம் யாத்திரைக்கட்டு மேல் வீட்டிலிருந்து நேரடியாக நமது அலுவலகத்துக்கும் சாப்பாட்டு ஹாலுக்கும் வரத் தோதாக பாதை அமைத்திருக்கிறது. மேல் வீட்டில் சாப்பாட்டு ஹாலில் சாப்பிட்டு விட்டு கைகழுவ தண்ணீர் குழாய்கள் பொருத்தி இருக்கிறது.

அன்னபூரணி ஹாலில் உள்ள மர உத்திரங்கள் பழுதாகிக் கொண்டு வருவதால் அதன் பக்கத்தில் இரும்பு கர்டர்கள் பொருத்தியிருக்கிறது. யாத்திரைக் கட்டின் கீழ்ப்பகுதியில் புதிதாக இரண்டு குளியல் அறைகளும், ஒரு கழிவறையும் கட்டியிருக்கிறது. சம்போ சுவாமிகள் ரூம்மிற்கு அருகேயும், குளியல் அறைகள் கட்டியிருக்கிறது. பொது கழிவறைகளுக்கு ஏற்கனவே தொட்டியிலிருந்து தண்ணீர் எடுத்தார்கள். தற்போது எல்லாக் கழிவறைகளுக்கும் தண்ணீர்க் குழாய் பொறுத்தியிருக்கிறது.

சத்திரத்தில் எட்டு இடங்களில் ஸ்பீக்கர்கள் பொருத்தி இருக்கிறது. அங்கு வரும் யாத்ரீகர்களுக்கு ஊரிலிருந்து தொலைபேசி அழைப்புகள் வருவதால் நமது அலுவலகத்திலிருந்தே அவர்களை மைக்கில் கூப்பிட்டு அவர்கள் பேச ஏற்பாடு செய்திருக்கிறோம். மேல் வீட்டில் நீண்ட காலமாக உபயோகத்தில் இல்லாதிருந்த ஹால் ஒன்றில் புதிதாய் சிமிண்ட் தரை போட்டு சுவற்றில் உள்ள வெடிவுகளை சீர்செய்து டிஸ்டெம்பர் அடித்து கதவுகளுக்கு வர்ணம் வைத்து மின் விசிறிகள் பொருத்தி உபயோகத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அது யாத்ரீகர்களுக்கு பெரிதும் உபயோகமாக இருக்கிறது.

கட்டிடம் பூறாவும் தார்சில் வெடிவு இருந்தவைகளை சீர் செய்திருக்கிறது. அன்னபூரணி ஹால், அய்யர் ஹால் மராமத்து செய்யப் பெற்று இரண்டு ஹால்களிலும் மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருக்கிறது. சத்திரத்துக்கு உள்ளே நுழையும் இடத்தில் மர உத்திரங்கள் பழுதடைந்து விட்டதால் அதற்குப்பதில் இரும்பு கர்டர்கள் பொருத்தியிருக்கிறது.

சத்திரத்தில் எல்லா இடங்களிலும் மின் விசிறிகள் பொருத்தியிருக்கிறது. சில ரூம்களில் ஏர் கூலர் பொருத்தி இருக்கிறது.

அய்யர் ஹாலில் ஏற்கனவே இருந்த பழைய அறையை சீரமைப்பு செய்து நகரேஸ்வரர் கோவில் குருக்கள் தங்க கொடுத்திருக்கிறது.

நகரத்தார்களிடம் நன்கொடை பெற்று எட்டு சாதா அறைகளும், குளியல் அறை, கழிவறை வசதியுடன் கூடிய நான்கு அறைகளும் கட்டியிருக்கிறது.

நகரத்தார்கள் நன்கொடையாக கீழ்கண்ட பொருள்களை கொடுத்திருக்கிறார்கள்.

1.. கிரைண்டர்கள், 2. மின் விசிறிகள், 3. தண்ணீர் சுடவைக்க ஹீட்டர்கள், 4. ரெப்ரிஜிரேட்டர், 5. தண்ணீர் மோட்டார்கள், 6. 6KV ஜெனரேட்டர் ஒன்று, 7. 10KV ஜெனரேட்டர் ஒன்று, 8. 25KV ஜெனரேட்டர் ஒன்று, 9. எரிவாய்வு அடுப்புகளும், சிலிண்டர்களும்.

2004–2007ல் நகரத்தார்களுடைய பேருதவியால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் "ஸ்ரீ காசி சத்திரத்தில் எங்கள் பணி" என்ற தலைப்பில் தனிக்கட்டுரையாக வெளியிடப்பெற்றுள்ளது.

வாரணாசியில் வழிபட வேண்டிய முக்கிய கோவில்கள்

1. ஸ்ரீ காசி விஸ்வனாதர் கோவில்	2. ஸ்ரீ அன்னபூரணி கோவில்
3. ஸ்ரீ விசாலாட்சி அம்மன் கோவில்	4. ஸ்ரீ காலபைரவர் கோவில்

இங்குள்ள 64 கட்டங்களில் முக்கியமாக நீராடக்கூடிய கட்டங்கள்

1. அசி கட்டம்	2. கேதார கட்டம்
3. தசாசுவமேதக் கட்டம்	4. மணிகர்னிகா கட்டம்
5. பஞ்ச கங்கை கட்டம்	

இங்கு முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள்

1. சாரநாத்	2. ராம் நகர் (கோட்டை)
3. பிர்லாமந்திர்	4. சங்கட் மோட்சன்
5. துளசி மனாஸ்மந்திர்	6. துர்கா மந்திர்

அருள்மிகு ஸ்ரீ நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர்
ஆலய கும்பாபிஷேகப் படங்கள்










அருள்மிகு ஸ்ரீ நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகப் படங்கள்

















அருள்மிகு ஸ்ரீ நகரேஸ்வரி சமேத நகரேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகப் படங்கள்



















குழிபிறையைச் சேர்ந்த
டி.என்.டி. தேனப்ப செட்டியார் அவர்கள்
(இடமிருந்து முதல் நபர்) ஸ்ரீ காசி
விஸ்வநாதருக்கு வெள்ளி நாகாபரணம்
செய்து 20-7-2006 அன்று ஆணையாளர்
திரு. வி.வி. சிங் அவர்களிடம் உபயமாக
ஒப்படைத்த காட்சி. அருகே காசிச்
சத்திரத்து நிர்வாகிகள்.



ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்
சத்திரத்திற்குத் தடையின்றி மின்சாரம்
கிடைக்க ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில்
62.5 K.V.A. ஜெனரேட்டர் வாங்கி
அன்பளிப்பாக வழங்கியிருக்கும்
தொழிலதிபரும், கானாடுகாத்தானைச்
சேர்ந்தவருமான டாக்டர்
திரு. ஏ.சி. முத்தையா, செந்தமிழ்த் திலகம்
திருமதி தேவகி முத்தையா அவர்கள்.



வலையபட்டி திரு. அ.ம. திருப்பதி செட்டியார்
– திருமதி விசாலட்சி ஆச்சி தம்பதியர்,
(திருமகள் நிலையம், சென்னை) தமது
மணி விழாவில் (9-5-2007) தமது
புதல்வர்கள் டாக்டர் திரு. ராஜா, டாக்டர்
திரு. பழநியப்பன் உடன் இருக்க
ஸ்ரீ காசிச் சத்திர மேம்பாட்டுக்காக
அதன் நிர்வாகிகளிடம் ரூபாய் மூன்று
இலட்சம் நன்கொடை வழங்கினார்கள்.



ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புள்ள,
மணிக்கு 200 லிட்டர் தண்ணீர்
சுத்தப்படுத்தும் திறன் உள்ள
மினரல் வாட்டர் பிளான்ட்.

சத்திரம் நமக்குச் செய்யும் உதவிகள்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் கீழ்க் கண்ட உதவிகளைச் செய்து வருகிறது. அதற்கு சத்திரத்தோடு கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு அதற்கான செலவு துகையைக் கேட்டு அதற்கு சத்திரத்தின் பெயரால் டிராப்ட் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

1. குறிப்பிட்ட நாளில் ஸ்ரீ காசி விசுவேசுவருக்கு அபிஷேக ஆராதனை செய்ய விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி அபிஷேக ஆராதனை செய்து விபூதி பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

2. குறிப்பிட்ட நாளில் அன்னதானம் வழங்க விரும்புகிறவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி அன்னதானம் வழங்கப்படும்.

3. யாத்ரீகர்கள் தங்க நல்ல இட வசதியும் செட்டிநாட்டிலிருந்து நல்ல சமையல்க்காரர்களைக் கொண்டு சுவையான உணவும் வழங்கப்படுகிறது.

4. அறுபதாம் ஆண்டு விழா வைதீக முறைப்படி செய்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு

5. கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் வேண்டுமென்பவர்கள் ஸ்ரீ காசிச் சத்திரத்தோடு தொடர்பு கொண்டு அதற்கான செலவு துகையை அனுப்பி வைத்தால் அவர்கள் பிரயாகை சத்திரத்திலிருந்து கங்கை அனுப்ப ஏற்பாடு செய்வார்கள்.

6. காசிக்கு அஸ்தி அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அஸ்தியை சிறிய டின்னுக்குள் வைத்து மேலே துணி போட்டு தைத்து அதில் காப்பியிங் பென்சிலினால் அனுப்புகிரவர்கள் பெயரையும் கீழ்க்கண்ட விலாசத்தையும் ஆங்கிலத்தில் எழுதி ரிஜிஸ்தர் பார்சலில் / கூரியர் மூலம் அனுப்ப வேண்டுகிறோம்.

SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM, Back of “SUSIL” Cenema, Godowliia, Varanasi-221001 U.P. State

அஸ்தி கரைக்க ரூ. 100/–க்கு மணி ஆர்டர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம் அல்லது ரூ. 100/–க்கு **SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM** என்ற பெயருக்கு டிராப்ட் எடுத்து விபரமாக கடிதம் எழுதி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் போய் அஸ்தியை கரைக்க விரும்பினால் நேரில் வருவதாகவும், அஸ்தியை வைத்து வைக்கும் படியும் எழுத வேண்டுகிறோம். நேரில் போகா விட்டால் அஸ்தியை கரைத்து விபூதி பிரசாதம்

அனுப்பி வைக்க வேண்டியது என்றும் விபூதி பிரசாதம் அனுப்பி வைக்க வேண்டிய முகவரியையும் எழுத வேண்டுகிறோம்.

பொதுக்குழு தீர்மானப்படி அஸ்தி வந்த ஒரு வருடம் வரைதான் காசியில் வைத்து வைப்பார்கள். ஆகவே நேரில் போய் கரைக்க விரும்புகிறவர்கள் அஸ்தி அனுப்பி ஒரு வருடத்துக்குள் போய் கரைக்க வேண்டுகிறோம்.

0542 2451804

மோட்சதீபம் போட விரும்புவர்கள் தொலைபேசி எண் ~~0452–2402004~~ ல் யார் பெயருக்கு மோட்ச தீபம் போட வேண்டுமென்று விபரம் சொன்னால் காசியில் சத்திரத்திலிருந்து அதற்கான ஏற்பாட்டை உடனே செய்வார்கள். அதற்கு ரூ. 100/– **SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM** என்ற பெயருக்கு டிராப்ட் எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். **M.O.** மூலமும் பணம் அனுப்பலாம்.

SRI KASI NATTUKKOTTAI NAGARA SATRAM,
Back of "SUSIL" Cenema, Godowlila,
Varanasi-221001 U.P. State

உ
முருகா

பஞ்சவடி
பிலவ, ஆவணி 6,
22–8–1961

இளம்பூரணன் இன்னருளால் இன்று இங்குவந்து நகரமடாலயத்தில் தங்கினேன். பூஜை உணவு முதலிய சகலவகைக்கும் அனுகூலமாக இருந்தது. "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரியினை வீரர் கண்டார்" என்று கம்பநாடர் பாடியருளிய கோதாவிரியை அடியேனும் கண்டு களித்தேன்.

மடம் யாத்ரீகர்கட்கு மிக்க வசதியாக அமைந்துளது. தரும குணசீலர்களான நகர தணவணிகர்களுடைய அறம் போற்றுதற்குரியது.

மடாலயத்தில் திரு. கோபாலசாமி அவர்கள் நல்ல முறையில் கவனித்து மடத்தின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருப்பது பாராட்டுதற் குரியது. வாழி மடாலயம்.

அன்பன்,
கிருபானந்தவாரி,
ஆசிரியர், "திருப்புகழமிர்தம்"
சென்னை.

“ஸ்ரீ காசிச் சத்திரத்தில் எங்கள் பணி”

(ஜூலை 2004 முதல் ஜூன் 2007 முடிய)

Agri. **SP. சொக்கலிங்கம்** வலையபட்டி, செயலாளர்

ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக்கழகம்

1) ஸ்ரீ காசியில், ஸ்ரீ காசி விஸ்வநாதருக்கு தினந்தோறும் வழக்கம்போல் மூன்று கால பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நமது மேலாண்மைக் கழகத்தின் நிர்வாகத்திலிருக்கும் அனைத்து ஸ்தலங்களிலும் நமது கால கால தர்மங்கள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

ஸ்ரீகாசி நாட்டுக்கேட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு 27.6.2004 அன்று நடைபெற்ற தேர்தலில் நாங்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். அன்றுமுதல் இந்தக் கும்பாபிஷேக மலர் அச்சேறும் வரை எங்கள் பணிகளைத் தொகுத்து வழங்கியுள்ளேன்.

நாங்கள் பணியேற்ற காலத்தில் டெப்பாசிட்டுக்களும் பேங்க் இருப்புக்களும் சேர்த்து சுமார் 32 லட்ச ரூபாய் இருந்தது. நாங்கள் பணியேற்று 3 ஆண்டுகள் நிறைவுறும் நிலையில் இன்றைய டெப்பாசிட்டுக்கள் சுமார் 73 லட்ச ரூபாய்களும் வங்கி இருப்புக்கள் ரூ. 10 லட்சமும் சேர்த்து 83 லட்ச ரூபாயாக உள்ளது. எங்கள் பணிக் காலத்தில் மட்டும் 51 லட்ச ரூபாய் உயர்ந்துள்ளது. மேலும் உபயங்கள் மூலமாக சுமார் 49 லட்ச ரூபாய் செலவில் ஸ்ரீ விஸ்வநாதர் கோவில் பிரகாரக் கதவுகள் 5, ஸ்ரீ விஸ்வநாதருக்கு புதிய வெள்ளி நாகாபரணம், தங்கவிசாலாட்சி வெள்ளித் திருவாச்சிக்கு தங்கரேக், தங்க விசாலாட்சி அறையைப் புதுப்பித்தல், ஆகிய பணிகளைச் செய்திருக்கிறோம். நகரவிடுதியில் கல்தரைகள் முழுவதும் சகாபாத் நடைபாதைகளாக்கியும் சிமெண்ட் தளங்கள் இருந்த அறைகளிலும் டைல்ஸ் பதித்தும் பாத்ரூம் டாய்லட் அனைத்திற்கும் டைல்ஸ் பதித்தும், விடுதி முழுவதையும் பெயிண்ட அடித்தும், புதிய 62.5 KVA Automatic Sound Proof ஜெனரேட்டர் பொருத்தியும், LIFT வசதி செய்தும் மினரல் வாட்டர் பிளான்ட் குளிர்சாதன வசதியுடன் செய்தும் ஸ்ரீ நகரேஸ்வரி சமேத ஸ்ரீ நகரேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் செய்தும் இருக்கிறோம். 3 ஆண்டுகளாக அன்னதானம் 3 நாட்களுக்குச் செய்திருக்கிறது. சென்னை ரெங்கோன் நகரவிடுதியில் பாத்ரூம், டாய்லெட் அனைத்தையும் புதுப்பித்து டைல்கள் பதித்தும் மராமத்துச் செய்திருக்கிறது. அலகாபாத், கயா, கல்கத்தா விடுதிகளிலும் மராமத்துச் செய்திருக்கிறது. கல்கத்தாவில் பல வருடங்களாகக் கட்டப்பெறாமல் இருந்து வந்த ரூ4,28,000 வீட்டுவரி (Property Tax) யைக் கட்டியிருக்கிறது. உத்திரப்பிரதேச மாநிலத்தில் மின்சாரக் கட்டணம் பாக்கிகள் EB க்கள் சரியாக வசூலிப்பதில்லை. மின்சாரப் பாக்கிகள் இருந்த சுமார் 2 லட்ச ரூபாய் மின் கட்டணங்களைக் கட்டித் தமிழ் நாட்டைப்போல் மின் கட்டணம் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆக டெப்பாசிட் உயர்வு ரூ. 51 லட்சமும் மேலே குறிப்பிட்ட பணிகளுக்குத் தேவைப்பட்ட தொகை 49 லட்சமும் சேர்த்து மொத்தம் ஒரு கோடி ரூபாய் நகரத்தார் பெருமக்கள் அள்ளிக் கொடுத்த, வாரி வழங்கிய நன்கொடைகளாலும் நல்ல நிர்வாகத்தினால் கிடைத்த லாபங்களாலும்தான் கிடைத்தது.

நன்கொடைகள் கிடைப்பதற்கு முக்கிய காரணம் நமது பெருமை மிகு தலைவர் கோட்டையூர் Dr. MR. முத்தையா அவர்களின் முகராசியும் செல்வாக்கும்தான் என்றால் மிகையாகாது.

இதற்கு முன்பு தீபாவளிக்கு மூன்று வேளைகள் மட்டும் அன்னதானம் செய்யப் பெற்றதை மூன்று நாட்களுக்கும் அன்னதானம் செய்வோம் என்று நிர்வாகக் குழுவினரும் செயற்குழு உறுப்பினர்களும் கூறியதை ஏற்று மூன்று நாட்களுக்கும் அன்னதானம் செய்யப்பெற்றது.

நமது விடுதியில் உள்ள ஸ்ரீ நகரேஸ்வரி சமேத ஸ்ரீ நகரேஸ்வரப் பெருமானுக்கும் ஸ்ரீ பாதாளஈஸ்வரருக்கும் 25–10–2006 அன்று பிச்சை சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. நகரத்தார் பெருமக்கள் கும்பாபிஷேகத்திற்கும் அன்னதானத்திற்கும் வாரி வழங்கினார்கள்.

முதல் ஆண்டில் மதுரை திருப்பரங்குன்றம் ராஜாபட்டருடைய வேதபாடசாலை மாணவர்கள் 10 பேர் ஓர் ஆசிரியருடன் நமது விடுதியில் தங்கி வேதம் படித்து வந்தார்கள். ஸ்ரீவிஸ்வநாதர் கோவிலுக்கு சம்போ தேவாரம் திருவாசகம் முழங்க நாதஸ்வர வாத்ய இசையுடன் சென்றது. வாரணாசியில் காணக்கிடைக்காத காட்சியாக இருந்தது. 6 மாதங்களுக்குப் பின்னர் மேற்படி மாணவர்களுடைய பெற்றோர்கள் வற்புறுத்தலின் பேரில் மாணவர்கள் திருப்பரங்குன்றத்திற்குத் திரும்பிவிட்டார்கள். மீண்டும் பிள்ளையார் பட்டி பிச்சைக்குருக்கள், பெங்களூர் திருச்சி சுவாமிகள் போன்றோர் மூலம் முயற்சி செய்யப் பெற்றுவருகிறது.

முதல் ஆண்டு 2004ல் கணபதி ஹோமமும் லெட்சார்ச்சனையும் நடைபெற்றன.

ஆண்டுதோறும் தீபாவளி அன்று திருவிளக்குபூஜை சிறப்பாகச் செய்யப்பெற்று வருகிறது. நகரத்தார் பெண்மக்கள் (ஆச்சிமார்கள்) மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஈடுபாட்டுடனும் கலந்து கொள்கிறார்கள். இடம் பற்றாக் குறையினால் 325 நபர்களுக்கு மேல் விளக்கு பூஜையில் கலந்து கொள்ள முடியவில்லை.

ஆண்டுதோறும் தீபாவளிக்கு சுமார் 1500 பேர் நகரத்தார் பெருமக்கள் நேரடியாகவும், டிராவல்ஸ் மூலமாகவும், லட்டுத்தேர் பார்க்கவும் தங்க விசாலட்சியைத் தரிசிக்கவும் வருகிறார்கள்.

தங்க விசாலாட்சியைத் தரிசனத்திற்கு வைக்கும் மூன்று நாட்களுக்கும் இரவு விடுதிக்கு வரும் அனைத்து மக்களுக்கும் அன்னதானம் செய்யப் பெற்று வருகிறது. பிரசாதங்களும் வழங்கப்பெறுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும், நமது மான்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் M. சொக்கலிங்கம் அவர்களும், அவர்களது துணைவியார் திருமதி முத்துப்பெரிய நாயகி ஆச்சி அவர்களும் ஸ்ரீ காசிக்கு, நமது விடுதிக்கு வந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தீபாவளியன்று வாழ்த்துரை வழங்கியும் நிர்வாகிகளைக் கௌரவித்தும் வருகிறார்கள்.

ஆண்டுதோறும் மங்கலப்பொருட்கள் ஏலம் நடைபெறுகிறது. நமது நகரத்தார் பெருமக்கள் ஏலம் எடுத்துப் பெருமை சேர்க்கிறார்கள்.

தீபாவளியை ஒட்டி ஸ்ரீகாசிக்கு வருபவர்கள் அதிகாலை 2 3/4 மணிக்கு ஸ்ரீ விஸ்வநாதருக்கு நடைபெறும் மங்கள ஆர்த்தி பூஜைக்கு 5 நாட்களுக்கு நமது சத்திரத்திலிருந்து 30 நபர்கள் கட்டணமின்றி சேவிக்க நமது தலைவர் டாக்டர் MR. முத்தையா அவர்கள் சிறப்பு அனுமதி பெற்று உதவினார்கள்.

நமது நிர்வாகக் குழுவினர் 7 பேருக்கும் மேலாளர் திரு. SP. பனையப்பனுக்கும் Photo வுடன் கூடிய அனுமதி அட்டையை ஸ்ரீ விஸ்வநாதர் கோவில் E.O. திரு. துபே அவர்கள் வழங்கியதுடன், Certificate of Appreciation மூலம் நமது நகரச்சத்திரத்தின் மூலமாகக் கடந்த 194 ஆண்டுகளாக நமது நகரத்தார்கள் ஸ்ரீ காசி விஸ்வநாதருக்குச் செய்து வரும் பூஜையைப் பற்றி எழுதிச் சான்றளித்துள்ளார்கள். இது எங்கள் காலத்தில் கிடைத்த மிகப் பெரிய சாதனையாக நாங்கள் நினைக்கிறோம்.

ஸ்ரீவிஸ்வநாதர் கோவிலில் பிரகாரத்தில் உள்ள இரும்புக் கதவுகள் ஐந்தைப் பித்தளைக் கதவுகளாக மாற்ற வேண்டுமென்று சத்திரத்துக்கு திருக்கோவில் E.O.தபால் எழுதினார். உடனடியாக 2004 தீபாவளிக்கு வந்திருந்த ஐவர் ஒரு கதவுக்கு 1.25 லட்சம் வீதம் 5 கதவுகளுக்கும் 6,25,000/-ரூபாய் நன்கொடையளித்தார்கள். பித்தளைக் கதவுகளில் நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் என்று ஆங்கிலத்தில் பொறித்துள்ளார்கள்.

ஸ்ரீவிஸ்வநாதருக்கு இரவு 9.00 மணிக்கு நடைபெறும் பூஜையில் அலங்காரத்தில் வைக்கும் நாகாபரணம் பழுதடைந்து விட்டதால் புதிதாக வேண்டுமென்று கேட்டவுடன் குழிபிறை T.N.T.தேனப்பசெட்டியார் அவர்கள் புதிய வெள்ளி நாகாபரணத்தைச் செய்து வாரனாசி கமிஷணர் திரு. V.V. சிங் IAS அவர்கள் வசம் உபயமாக அளித்தார்கள்.

உ.பி. மாநிலத்திலேயே பவர் கட் அதிகம் அதிலும் வாரணாசியில் ஒரு நாளைக்கு 6 மணி நேரம் தான் கரண்டு உள்ளது. எனவே ஏற்கனவே இருந்த 10 KVA, 15 KVA

ஜெனரேட்டர்கள் போதவில்லை. விடுதிக்கு தடையற்ற மின்சாரம் கிடைக்க 62.5 KVA Automatic Sound Proof ஜெனரேட்டர் இருந்தால் நல்லது என்றார்கள். உடனடியாக ரூ5 லட்சத்திற்கு வாங்கப்பெற்றது. நமது கானாடுகாத்தான் Dr. A.C.முத்தையா அவர்களும் அவர்களது துணைவியார் செந்தமிழ்த் திலகம் திருமதி தேவகி முத்தையா அவர்களும் உடனடியாக ரூ5லட்சத்திற்கு டிராப்ட் அனுப்பி ஜெனரேட்டரை அவர்கள் உபயமாக அளித்துள்ளார்கள்.

வயதானவர்கள்தான் அதிகமாகக் காசிக்கு வருகிறார்கள். நமது விடுதியோ மிக உயரத்தில் உள்ளது. 18படி ஏறினால்தான் தரைத்தளமே வரும். அதற்குமேல் முதல் தளம், இரண்டாம் தளம் உள்ளன. எனவே வயதானவர்கள் சாமான்களுடன் படி ஏறுவதற்குச் சிரமப்படுகிறார்களே LIFT அமைத்தால் நல்லது மிகுந்த செலவு வருமே என்று நினைத்தோம். உடனே நமது நகரத்தார் பெருமக்கள் கவலை வேண்டாம் என்று கூறி 9 பேர் சேர்ந்து ரூ7 லட்சம் நன்கொடையாக அளித்துள்ளார்கள். LIFT ஜீன் மாதம் இயங்கிவிடும்.

ஸ்ரீவிஸ்வநாதர் அபிஷேகப் பொருள்களில் அரைத்த கையும் மணக்கும் அசல் சந்தனம் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆண்டுதோறும் AVM சேரிட்டீஸ் 25 கிலோ சந்தனக் கட்டை வாங்கிக் கொடுத்தார்கள். சந்தனக்கட்டை விலை, மிகவும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. எனவே நாங்கள் வருடத்திற்கு ரூபாய் 1 லட்சம் மட்டும் தந்துவிடுகிறோம். மேற்கொண்டு வருவதைச் சத்திரத்திலிருந்து ஏற்பாடு செய்துகொள்ளுங்கள் என்று கூறி ரூபாய் 1 லட்சத்திற்கான DDயை அனுப்பிவிட்டார்கள்.

நாம் உடனே சேலத்திலிருக்கும் நெற்குப்பை T. சிதம்பரம் செட்டியார் அவர்களை அணுகினோம். யோசிக்க வேண்டாம். நான் பொறுப்பேற்று சேலம் வனத்துறையிலிருந்து 75 கிலோ சந்தனக் கட்டைகள் வாங்க பெர்மிட் வாங்கி கட்டைகளை டெலிவரி எடுத்து வாரணாசிக்கு அனுப்பி வைக்கிறேன் என்றார்கள். நமது உதவிச் செயலாளர் கொத்தமங்கலம் M.ராமநாதன் அவர்கள் ரூ3,25,000/–ஐ சேலத்திற்கு கொண்டு சென்று சிதம்பரம் செட்டியார் அவர்களின் உதவியோடு ஒரு வாரத்திற்குள் 75 கிலோ சந்தனக்கட்டையை வாங்கி ரயிலில் வாரணாசிக்கு அனுப்பி வைத்தார்கள். ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு இந்த சந்தனக் கட்டை இருக்கும். நெற்குப்பை T. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும், உதவிச் செயலாளர் கொத்தமங்கலம் M.இராமநாதன் அவர்களுக்கும் நமது நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

மதுரையில் வாங்கும் சாம்பிராணியின் தரம் மிகவும் குறைவாக உள்ளது. சம்போ செல்லும் போது கண்கள் எரிகிறது என்று சம்போ சாமிகள் கூறினார்கள். நயம் மலேஷியாச் சாம்பிராணி 30 கிலோ தேவகோட்டை மா.அரு.சோமசுந்தரம் அவர்கள் ஆண்டுதோறும் வாங்கித் தருகிறார்கள்.

அபிஷேகப் பொருட்கள் விலை உயர்ந்து கொண்டே வருகிறது என்று விலை விபரங்களையும் நமது சத்திரத்துத் தேவைகளையும் நமது சமூகப் பத்திரிகைகளில் எழுதி

உபயதாரர்கள் தேவை என்று தெரிவித்தோம். நகரத்தார் பெருமக்கள் வாரி வழங்கியுள்ளார்கள்.

நிரந்தரக் கட்டளைதாரர்கள் பெயர்கள், அன்னதான நன்கொடையாளர்கள் இந்த மூன்றாண்டுகளில் 2004–2007ல் நமது ஸ்ரீ காசிச் சத்திரத்திற்கும் ஸ்ரீ விஸ்வநாதரர் கோவிலுக்கும் உபயமாகப் அபிஷேகப் பொருட்கள், ரொக்கமாக நன்கொடை வழங்கியவர்கள் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளேன். ஏதாவது விடுதலிருந்தால் பொறுத்தருளவும்.

நகரேஸ்வரர் கோவிலில் உற்சவம் நடத்திவரும் உபயதாரர்களின் விபரம்

1.	பிரதோஷம்	S.RM.பழநியப்ப செட்டியார் வேகுப்பட்டி	கோலாலம்பூர்
2.	சதுர்த்தி	இளையாற்றங்குடி ஒக்கூர் நகரத்தார் அசோசியேஷன்	இளையாற்றங்குடி
3.	கார்த்திகை	SP.சிதம்பரம் செட்டியார்	மலேசியா
4.	சஷ்டி	பொன் புதுப்பட்டி AN. ஜெயசுப்பிரமணியன்	லண்டன்
5.	விசாகம்	ராம.சுப.சே.சேதுராமன் செட்டியார்	வலையபட்டி
6.	மஹாசிவராத்திரி	ராம.முத்தழகப்ப செட்டியார் குடும்பத்தார்	கோனாபட்டு
7.	மாதசிவராத்திரி	S.RM.PL. சேதுபழநியப்பன் வேகுப்பட்டி	அமெரிக்கா
8.	ஏகாதசி	S.K. சிவகாசி ஆச்சி	காரைக்குடி

பூஜைக் கட்டளை நிரந்தர உபயதாரர்கள்

1.	சந்தனக் கட்டை	AVM சேரிட்டீஸ் மற்றும் பலர் விபரம் பின்னால்	சென்னை
2.	பன்னீர்	L. ராமகிருஷ்ணன் செட்டியார்	நாட்டரசன் கோட்டை
3.	அத்தர்	S.T.AR.அருணாசலம் செட்டியார் உமையாள் ஆச்சி	கண்டனூர்
4.	விபூதி	அ.நா.அண்ணாமலை செட்டியார்	வலையபட்டி
5.	சாம்பிராணி	A.N. கல்யாணி ஆச்சி	தேவகோட்டை
6.	சூடம்	ST. பழநியப்ப செட்டியார் மா.அரு.சோமசுந்தரம்	குருவிக் கொண்டான்பட்டி

7.	சாதுக்கள் அன்னதானக் கட்டளை	முத்துபழநியப்ப செட்டியார் கண்ணாத்தாள் ஆச்சி பப்ளிக் சேரிட்டபிள் டிரஸ்ட் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/–வீதம் கொடுத்து வருகிறார்கள்.	பாகனேரி
8.	குங்குமம்	Dr.N. கிருஷ்ணன் செட்டியார்	கோட்டையூர்
9.	கற்கண்டு	சுப.சோம.சுப. கணபதி செட்டியார்	பொன்.புதுப்பட்டி
10.	விபூதி	Dr.A.N. ஜெயசுப்பிரமணியன்	பொன்.புதுப்பட்டி, லண்டன்
9.	பௌர்ணமி	A.N.முத்துப்பழநியப்பன் வேகுப்பட்டி	விஜயவாடா

பூஜைக் கட்டளை விபரம்

கண்டனூர். அ.வெ.சித.நா.ராமேஸ்வரம் கெங்கைக் கட்டளை வரவு	ரூ. 9000
வலையபட்டி, சி.ந.சி.அழகம்மை ஆச்சி வருடப்பிறப்பு பண்டுக்கட்டளை மற்றும் தைப்பொங்கல் அன்னதானக் கட்டளை வரவு	ரூ. 2000
புதுவயல் அண.மீனாட்சி கற்பூரக் கட்டளை வரவு	ரூ. 500
ராங்கியம் அ.மு.மு.சீதை ஆச்சி, பால் கட்டளை வரவு	ரூ. 1000
குழிபிறை மு.ப.ஆ.முத்துப்பழநியப்ப செட்டியார் விநாயக சதுர்த்தி பால் கட்டளை வரவு	ரூ. 500
மேலைச்சிவபுரி S. அழகப்ப செட்டியார் அர்ச்சனைக் கட்டளை வரவு	ரூ. 2500
கானாடுகாத்தான் SP.ST.சோலச்சி ஆச்சி சாம்பிராணிக் கட்டளை வரவு	ரூ. 2000
வேகுப்பட்டி S.RM.பழநியப்ப செட்டியார் பிரதோஷக் கட்டளை வரவு	ரூ. 15000
கல்லுப்பட்டி செ.பழநியப்ப செட்டியார் மீனாட்சி ஆச்சி தீபக்கட்டளை வரவு	ரூ. 3001
கடியாபட்டி பி.கு.நா.கும.நா.கும.நா.குமரப்ப செட்டியார் பால் கட்டளை வரவு	ரூ. 10000
புதுப்பட்டி சுப.ராமன் செட்டியார், நடராஜர் அபிஷேகக் கட்டளை வரவு	ரூ. 10000

சாமான்கள் உபயம்

1. ஜெனரேட்டர் 6 K.V. உபயதாரர் பாகனேரி முத்துப் பழநியப்ப செட்டியார் கண்ணாத்தாள் ஆச்சி பப்ளிக் சாரிட்டி டிரஸ்ட், மதுரை.
2. ஜெனரேட்டர் 6 K.V. உபயதாரர் பொன். புதுப்பட்டி ராம.சதாசிவம் செட்டியார் (குரோம்பேட்டை)
   அழகப்பா விசாலாட்சி டிரஸ்ட் காரைக்குடி AL. ராமசாமி செட்டியார்
3. 62.5 KV ஜெனரேட்டர் உபயம் கானாடுகாத்தான்
   Dr. A.C. முத்தையா செட்டியார் திருமதி.தேவகி முத்தையா அவர்கள்

கிரைண்டர்கள் உபயதாரர்கள்

2 லிட்டர் கிரைண்டர்	PL.K. நாகப்ப செட்டியார், தேவகோட்டை
5 லிட்டர் கிரைண்டர்	R. பழநியப்ப செட்டியார், குழிபிறை
5 லிட்டர் கிரைண்டர்	SP. பழநியப்ப செட்டியார், கீழச்சிவல்பட்டி

மோட்டார் பம்ப்செட் உபயதாரர்கள்

ALS. அழகப்ப செட்டியார் – கண்டவராயன்பட்டி

சென்னை வெள்ளையன் செட்டியார் டிரஸ்ட் (பள்ளத்தூர் AMM)

வேந்தன்பட்டி S. நாச்சம்மை ஆச்சி

உசத்கால பூஜைக்கு பூஜைப்பொருள்கள் கொண்டு செல்ல

வெள்ளிக்கிண்ணங்கள் 12 உபயதாரர்

வலையபட்டி அ.நா.அண்ணாமலை செட்டியார்

ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் பால் அபிஷேகத்துக்கு வெள்ளிக் கெண்டிச் செம்பு உபயதாரர்

பள்ளத்தூர்	M.A.அழகப்ப செட்டியார் (AMM)
Fridge	வலையபட்டி – K.R. சின்னையா
Fridge	நெற்குப்பை –ரெத்தினம்
Fridge	நற்சாந்துபட்டி – V.R. சுந்தரம் செட்டியார்
அலமாரி	SP. மெய்யப்பன்

ஆண்டுதோறும் தீபாவளி அன்னதானத்திற்கு நன்கொடை தருபவர்கள்

திரு.	PV.RM.அழகப்ப செட்டியார்	ராயவரம்	15,000
திரு.	T. சிவனடியான் செட்டியார்	பனையப்பட்டி	10,000
திரு.	ராமனாதன், பழநியப்பன்	வேகுபட்டி	6,000
திரு.	VD.M.RM. ராமநாதன் செட்டியார்	புதுவயல்	6,000

பூஜைப்பொருட்களுக்கு ஆண்டுதோறும் நன்கொடை தருபவர்கள்

திரு.	A.V.M.சேரிட்டீஸ்	சென்னை	1,00,000	சந்தனக்கட்டை
திரு.	KR.சொக்கலிங்கம்	நாட்டரசன் கோட்டை	20,000	சந்தனக்கட்டை
திரு.	Dr. P.S.V.பெத்தபெருமாள்	சண்முகநாதபுரம்	20,000	சந்தனக்கட்டை
திரு.	A. முத்துக்குமார்	பள்ளத்தூர்	10,000	சந்தனக்கட்டை
திரு.	Dr. M. அழகப்பன்	கோட்டையூர்	20,000	சந்தனக்கட்டை
திரு.	பிரேம்நாத் சுந்தரம்	வலையபட்டி	10,000	சந்தனக்கட்டை
திரு.	N.S.S. செந்தில்நாதன் செட்டியார் புனிதா ஆச்சி	கண்டவராயன்பட்டி	11,000	தேன்
திரு.	மா.அரு.சோமசுநதரம்	தேவகோட்டை	25,000	சிங்கப்பூர் சாம்பிராணி
திரு.	A.ஜெயசுப்பிரமணியன்	பொன்.புதுப்பட்டி	40,000	விபூதி குங்குமக்கவர்
திரு.	A.N.அண்ணாமலை செட்டியார்	வலையபட்டி	10,000	விபூதி
திரு.	AR. முத்துக்கருப்பன் செட்டியார்	கொப்பனாபட்டி	5,000	நெல்லிக்காய்த் தைலம் பேரிச்சம்பழம்
திரு.	M. கண்ணன்	கீழச்சிவல்பட்டி	19,011	நெய்க்கு
திரு.	கோபிநாத் சுந்தரம்	வலையபட்டி	18,000	நெய்க்கு
திரு.	PLM.முத்தையா	வலையபட்டி	9,000	நெய்க்கு
திரு.	SP. ஜெயம்கொண்டான் செட்டியார்	உலகம்பட்டி	19,801	நெய்க்கு
திரு.	லெ.மு.மு.சி.வள்ளியப்ப செட்டியார்	தேவகோட்டை	18,000	மதிப்புக்கு நெய்

நன்கொடையாளர்கள், உபயதாரர்கள் விபரம்
ஜூலை 2004 முதல் 2007 ஜூன் வரை

பெயர்	ஊர்	தொகை ரூ.	விபரம்
திரு. Dr. A.C முத்தையா செட்டியார்	கானாடுகாத்தான்	5,00,000	62.5KVA Automatic Sound Proof Generator
திரு. T.N.T. தேனப்ப செட்டியார்	குழிபிறை	2,00,000	வெள்ளி நாகாபரணம், ஸ்ரீ காசி விஸ்வநாதருக்கு
திரு. ம. திருப்பதி செட்டியார்	வலையபட்டி	3,00,000	சத்திர மேம்பாட்டுக்காக விசாலாட்சி ஆச்சிகுடும்பத்தார்
திரு. KR. அண்ணாமலை செட்டியார்	குருவிக் கொண்டான்பட்டி	1,25,000	காசி ஸ்ரீ விஸ்வநாதர் கோவில் பிரகாரப் பித்தளைக்கதவு
திரு. AL.PR.AL.L. திருநாவுக்கரசு	மதகுபட்டி	1,25,000	காசி ஸ்ரீ விஸ்வநாதர் கோவில் பிரகாரப் பித்தளைக்கதவு
திரு. டால்பின் AR. ராமனாதன்	தேவகோட்டை	1,25,000	காசி ஸ்ரீ விஸ்வநாதர்கோவில் பிரகாரப் பித்தளைக்கதவு
திரு. ஆத.க. சொக்கலிங்கம்	கல்லல்	1,25,000	காசி ஸ்ரீ விஸ்வநாதர்கோவில் பிரகாரப் பித்தளைக்கதவு
திரு. L.RM.ராமனாதன் செட்டியார்	நற்சாந்துபட்டி	1,25,000	காசி ஸ்ரீ விஸ்வநாதர்கோவில் என்ற கணபதி செட்டியார் பிரகாரப் பித்தளைக்கதவு

திரு. அண.கண.சுந்தரம் செட்டியார் கண.சு.வள்ளியம்மை ஆச்சி	கல்லல்	1,00,000	LIFT
திரு. வெ.சி.அ.ராம.அண.ராம. அலமேலு ஆச்சி	கோட்டையூர்	1,00,000	LIFT
திரு. ராமனாதன் பழநியப்பன்	பொன்புதுப்பட்டி	1,00,000	LIFT
திரு. மாணிக்கம் அண்ணாமலை	அரிமளம்	1,00,000	LIFT
திரு. PL.உமையாள் ராமனாதன்	கண்டனூர்	1,00,000	LIFT
திரு. PL.வைரவன் செட்டியார்	நெற்குப்பை	50,000	LIFT
திரு. சேதுராமன்–உமையாள்	உலகம்பட்டி	50,000	LIFT
திரு. S.RM. கண்ணப்பன்	காளையார்மங்கலம்	50,000	LIFT
திரு. ரகுபதி சுப்பிரமணியம்	நாற்சாந்துபட்டி	50,000	LIFT
திரு. M.A.M.SP.PL. சுப்பிரமணியன்	ராயவரம்	2,00,000	மாசிமாத அதிகாலைப் பூஜைச் செலவில் சேர்த்துக்கொள்ள
திரு. Dr.திருமதி.முத்து ஆச்சி	தேவகோட்டை	1,70,000	அன்னதானம்
திரு. RM.பழநியப்ப செட்டியார்	ஆஸ்திரேலியா	1,50,000	நன்கொடை
திரு. Dr. MR.முத்தையா	கோட்டையூர்	50,000	நன்கொடை கங்கை நதியும் காசிப்பதியும் புத்தகம் மூலம்
திரு. KM.N.மெய்யப்பன்	நற்சாந்துப் பட்டி	25,000	காசி விஸ்வநாதர் கோவிலுக்கு
திரு. தமிழ்நேசன் M.N.நாகப்ப செட்டியார்	வலையபட்டி	25,000	ஸ்ரீ காசி சத்திரத்தில் Computer அமைக்க
திரு. N.ராமனாதன்	கானாடுகாத்தான்	25,000	ஸ்ரீ காசி சத்திரத்தில் Computer அமைக்க
திரு. T.N.M.முத்துச்செட்டியார்	கடியாபட்டி	13,000	Software
திரு. T.N.M.முத்துச்செட்டியார்	கடியாபட்டி	34,000	வாட்டர்கூலர்
திரு. PSP.பெருமாள்	பூலாங்குறிச்சி	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திரு. V. வெங்கடாச்சலம்	கோட்டையூர்	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்

திரு. Dr.AR.சொக்கலிங்கம்	தேவகோட்டை	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திரு. Dr.N.கிருஷ்ணன்	கோட்டையூர்	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திரு. Dr.M.அழகப்பன்	கோட்டையூர்	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திரு. பசுமடம் மெ.ராமசாமி	வேந்தன்பட்டி	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திரு. PL.அருணாச்சலம்	புதுவயல்	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திருமதி. உமா. முத்துராமன்	கொத்தமங்கலம்	25,000	மினரல்வாட்டர் பிளான்ட்
திருமதி. N.S.S.புனிதா செந்தில்நாதன்	கண்டவராயன்பட்டி	32,000	தங்க விசாலாட்சி அறை புதுப்பிக்க
திரு. S.A.சோலையப்பன்	சேலம்	11,000	அத்தர்
திரு. CT.சுப்பிரமணியன்	அ.சிறுவயல்	10,000	பால் கட்டளைக்கு
திரு. மீனா அழகப்பன்	கானாடுகாத்தான்	10,000	Fax Machine
திரு. C.வள்ளியப்ப செட்டியார்	பூலாங்குறிச்சி	16,000	10 KVA ஜெனரேட்டர் அலகாபாத்தில் வாங்க
திரு. T.C.T.சிதம்பரம் செட்டியார்	நெற்குப்பை	16,000	10 KVA ஜெனரேட்டர் அலகாபாத்தில் வாங்க
திரு. VR. சுந்தரம் செட்டியார்	நற்சாந்துபட்டி	8,500	Fridge
திரு. V.S.T.PL. சிதம்பரம்	வலையபட்டி	12,000	கயாவில் Fridge வாங்க
திரு. கரு.சி.கரு. சின்னையா	வலையபட்டி	6,000	வாரணாசியில் Fridge வாங்க
திரு. PL.V.S. ரெத்தினம்	நெற்குப்பை	6,000	வாரணாசியில் Fridge வாங்க
திரு. SP. பழநியப்ப செட்டியார்	கீழச்சிவல்பட்டி	7,500	Wet Grinder

திரு. AR. முத்துக்கருப்பன்	கொப்பனாபட்டி	5,000	நெல்லிக்காய்த் தைலம் பேரிச்சம்பழம்
திரு. RM.K. ராமனாதன் செட்டியார்	வலையபட்டி	7,400	ஸ்ரீ நகரேஸ்வரி அம்மன் வெள்ளிகிரீடம்
திரு. மீனாட்சி ஆச்சி	சிராவயல்	18,000	T.V.
திரு. AR. சுப்பிரமணியன்	தேவகோட்டை	3,450	T.V. ஆன்டென்னா
திரு. SP.சிதம்பரம்	கண்டனூர்	3,200	Dish ஆன்டென்னா
திரு. M. விசாலாட்சி	காரைக்குடி	5,000	காசி விஸ்வநாதர் குளிர் காலச் சட்டை
திரு. PL.A.L. மீனாட்சி	நெற்குப்பை		ஸ்ரீ விஸ்வநாதர் சுவாமி டவல்கள்
திரு. Er.L. திருநாவுக்கரசு	மதகுபட்டி செட்டியார்	65,000	கயாவில் சமையல் அறை கட்ட
திரு. L.AR.SP. கருப்பையா– அபிஷேகத் முத்துமீனா	தெக்கூர்	5,000	மணிவிழா தாமிரத்தட்டு

அன்னதானத்திற்கு மூன்று (ஜூலை 2004 - ஜூன் 2007) ஆண்டுகளில் ரூ. 5000/- மும் அதற்கு மேலும் நன்கொடை அளித்தவர்கள்

திரு. PR.S.K.AR. சொக்கலிங்கம்	தேவகோட்டை	20002
திருமதி பார்வதி நாச்சியப்பன்	கோட்டையூர்	20000
திரு. PR. சொக்கலிங்கம் (PRC)	காரைக்குடி	20000
திரு. பெரி. மு.சொ.சி. சொக்கலிங்கம்	வலையபட்டி	15000
திரு. Dr. S. சுப்பிரமணியம்	ஆ. தெக்கூர்	12001
திரு. AN. முத்துப்பழனியப்பன்	வேகுப்பட்டி	12000
திரு. A.SP. அண்ணாமலை	மேலைச்சிவபுரி	11000
காரைக்குடி நகரத்தார்கள்	காரைக்குடி	10001
திரு. KR. வைரவன்	கீழப்பூங்குடி	5001
திரு. Dr. MR. முத்தையா	கோட்டையூர்	5001
திரு. P.K.N.S. குடும்பத்தார்	கடியாபட்டி	5001
திரு. VE. சுப்பிரமணியன்	கல்லல்	5001
திருமதி மீனா அழகப்பன்	கண்டவராயன்பட்டி	5000
திரு. அன்பு. நா. சிதம்பரம்	கண்டனூர்	5000

வேதபாடசாலைக்கு ரூ. 5000/- க்கு மேல் நன்கொடை நன்கொடை அளித்தவர்கள்

திரு. PL. அடைக்கப்ப செட்டியார்	நெற்குப்பை	10,000
திரு. RM. வள்ளியப்ப செட்டியார்	வலையபட்டி	10,000
திரு. M.A.M.SP. PL. பழநியப்ப செட்டியார்	ராயவரம்	10,000
திரு. RM.RM. ராமசாமி செட்டியார்	ராயவரம்	10,000
திரு. AL. முத்தையா செட்டியார்	கோட்டையூர்	10,000
திருமதி KR. அலமேலு ஆச்சி	காரைக்குடி	5,001

கும்பாபிஷேக நன்கொடையாளர்கள்

திரு. LP.குடும்பத்தார்	கோட்டையூர்	40,000	ஸ்ரீ நகரேஸ்வரர் கோவில் கும்பாபிஷேக யாகசாலை உபயம்
திரு. L.RM.ராமனாதன் செட்டியார்	நற்சாந்துபட்டி	20,000	யாகசாலை மருந்து உபயம்

✳ காசிச்சத்திரத்துக்கு வரும் அனைவரும் மினரல் வாட்டர் வாங்கி அருந்திவந்தார்கள். இதனைப் பார்த்த டாக்டர் எம்.ஆர்.எம். அழகப்பன் உறவினர்கள் 8 நபர்கள் உடனடியாக ரூ2 லட்சம் செலவில் மணிக்கு 200 லிட்டர் சுத்தம் செய்து தரக்கூடிய அளவில் மினரல் வாட்டர் பிளான்ட நம் விடுதியில் அமைத்து உபயமாகத் தந்துள்ளார்கள். அதற்கு ஒரு நகரத்தார் கூலிங்மெஷின் வாங்கித் தந்து குளிரூட்டியுள்ளார்கள்.

✳ 2006 தீபாவளியின்போது 170 நகரத்தார்களுக்கு நமது நகரத்தார் குருபீடங்களாகிய பாதரக்குடி சுவாமிகளும் துளாவூர் சுவாமிகளும் வாரணாசி நமது விடுதியில் உபதேசம் செய்து வைத்தார்கள்.

✳ 2004ல் சிவன் ராத்திரிக்குப்பால் கொண்டு செல்ல நகரத்தார் ஆச்சிமார்கள் 16 புதிய பித்தளைக்குடங்கள் வாங்கிக் கொடுத்தார்கள். வழக்கம்போல் ஸ்ரீ விஸ்வநாதர் கோவில், ஸ்ரீஅன்னபூரணி கோவில், ஸ்ரீ விசாலாட்சி கோவில், ஸ்ரீ நகரேஸ்வரர் கோவில்களுக்கு நான்கு குடங்கள் வீதம் பால் மற்றும் 32 விதமான அபிஷேகப் பொருட்கள் மலர் மாலைகளுடன் மேள வாத்யம் முழங்க சிவராத்திரியன்று செல்லும் காட்சியைச் சொல்லால் விளக்க முடியாது. சிவ ராத்திரிக்கும், தங்க விசாலாட்சி அலங்காரம் செய்து பெட்டக அறையிலேயே தரிசனத்திற்கு வைக்கப்பெற்றது.

✳ நமது ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்துக்குச் சொந்தமான கல்கத்தா 34, எஸ்ரா வீதியிலுள்ள நமது நகரத்தார் ஹவுஸ் கட்டிடம் நீண்ட நாட்களாக மராமத்துப் பார்க்காமலும் நமது யாத்ரீகர்களுக்குத் தங்க வசதியில்லாமலும் இருந்தது. இப்பொழுது புதிய மேலாளர் S. மெய்யப்பன் அவர்களை நியமித்து ஒழுங்கு

பண்ணியதில் 35 பேர் தங்க வசதி, கழிவறை, குளியலறை வசதிகள் செய்யப்பெற்று பெயிண்ட் அடித்து சுத்தம் செய்யப்பெற்றுள்ளது. நகரத்தார் பெருமக்கள் தாராளமாகவும் சௌகரியமாகவும் தங்கலாம்.

✶ சென்னை ரெங்கோன் நகர விடுதியிலும் கழிவறை, குளியலறை மிகவும் மோசமாக இருந்ததால் அவைகளும் மராமத்துச் செய்து டைல்ஸ் ஒட்டிப் புதுப்பிக்கப்பெற்றிருக்கிறது. அயோத்தியில் பூஜை வைத்து வந்த திருமதி சாந்தி அம்மாள், நமது சத்திரத்தை ரெங்கோன் நகரத்தார் அவருடைய தகப்பனார் வசம் ஒப்படைத்து, பூஜை செய்யச் சொன்னார்கள் என்றும் இப்பொழுது காரைக்குடியிலிருந்து ஒரு கமிட்டி வந்து சத்திரத்தைக் கைப்பற்றப் பார்க்கிறது என்றும் நமது மேலாண்மைக் கழகத்தின் மீதும் தலைவர் Dr. MR. முத்தையா அவர்கள் மீதும் மேலாளர் SP.பனையப்பன் அவர்கள் மீதும் பைசாபத் கோர்ட்டில் கேஸ் போட்டிருக்கிறார். அதையும் தக்க ரிக்கார்டுகளுடன் எதிர்மனு போட்டு எதிர்கொண்டும் பல ஆட்களை நியமித்து சத்திரங்களைப் பாதுகாத்தும், பூஜையும் செய்து, சாப்பாடும் போடப்பெற்று வருகிறது. சாந்தி அம்மாள் காலி செய்ய மறுத்து ஒருபகுதியில் குடியிருந்து வருகிறார்.

✶ கயாவில் புதிய டாய்லட், பாத்ரூம் கட்டப்பெற்று போர் போட்டு புதிய மோட்டார் பம்ப் வைக்கப்பெற்றிருக்கிறது. நமது விடுதியில் தண்ணீர் பற்றாக்குறை இல்லை. நகரத்தார் பெருமக்கள் பிண்டம் போடுவது. நமது புரோகிதர் திரு.தாமோதரப்பண்டா உதவியில் சிறப்பாக நடைபெறுகிறது. சத்திரம் திருமணங்களுக்கும் வாடகைக்கு விடப்பெறுகிறது.

✶ அலகாபாத்தில் ஹால் டைல்ஸ் பதித்து புதுப்பிக்கப் பெற்றுள்ளது. யாத்ரிகர்கள் தங்குவதற்கு மேல்வீடும் புதுப்பிக்கப்பெற்றுவருகிறது. சாப்பாட்டு வசதி உள்ளது.

✶ நாசிக் பஞ்சவடியில் சத்திரத்திலுள்ள நமது ஸ்ரீ கார்த்திக் சுவாமிகோவிலில் ஆண்டுதோறும் புத்த பூர்ணிமா மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. சுமார் 2லட்சம் பேர் தரிசித்துச் செல்கிறார்கள். நமது செயற்குழு உறுப்பினர் நாட்டரசன்கோட்டை S.RM.RM. கண்ணப்ப செட்டியார் அவர்கள் மிகவும் உதவியாக இருந்து விழாவினைச் சிறப்பாக நடத்தித்தருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி. மற்ற திருவிழாக்களை வழக்கம் போல் பாம்பே நகரத்தார்கள் செய்து வருகிறார்கள்.

✶ மூன்று ஆண்டுகளில் திருமண உதவியாக ரூ. 1,79,500/ம் கல்வி உதவியாக ரூ. 2,93,200/–ம் வழங்கப்பெற்றுள்ளது. ஸ்ரீகாசியில் நமது நகரச் சத்திரத்திலும் காரைக்குடித் தலைமை அலுவலகத்திலும் கம்ப்யூட்டர் பொருத்தி கணக்குகளை உடனடியாகப் பதிந்து வருகிறோம். ஆடிட்டர் திரு. PL. சோலையப்பன் அவர்களும் ஆடிட்டர் திரு. M. ராமசாமி அவர்களும் கணக்குகளைத் தணிக்கை செய்து மிகவும் உதவியாக இருக்கிறார்கள். இந்த ஆண்டு April ல் 20 நாட்களுக்குள் கணக்குகளைத் தணிக்கை செய்து செயற்குழு ஒப்புதலுக்குத் தந்த பெருமை ஆடிட்டர் திரு. PL. சோலையப்பன் அவர்களையே சாரும். நமது நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

மூன்று ஆண்டுகளில் நான்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பெற்றுள்ளன. மேலாண்மைக்கழகத்திற்கும் எங்களுக்கும் எல்லாவிதத்திலும் எங்கள் பணி சிறக்க உதவியாக இருந்த தலைவர் டாக்டர் MR. முத்தையா அவர்களுக்கும் உபதலைவர்கள் திரு. PR. சொக்கலிங்கம் (காரைக்குடி) அவர்களுக்கும் அன்பு நா. சிதம்பரம் செட்டியார் (கண்டனூர்) அவர்களுக்கும் உதவிச்செயலர்கள் கொத்தமங்கலம் M. ராமநாதன் அவர்களுக்கும், அரிமளம் AN. சோமசுந்தரம் அவர்களுக்கும், பொருளாளர் கண்டவராயன்பட்டி SP. அழகப்பன் அவர்களுக்கும், காசிச்சத்திர மேலாளர் SP. பனையப்பன் B.A.B.L அவர்களுக்கும் காரைக்குடி முன்னாள் மேலாளர் திரு. ஆண்டப்ப செட்டியார் அவர்களுக்கும் திரு. ராமசாமி அவர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் நமது சமூகப்பத்திரிக்கை ஆசிரியர்கள் நா. இளங்கோவன், ஆச்சிவந்தாச்சு பழநியப்பன், பூச்சரம் பழநியப்பன் அவர்களுக்கும் மற்றும் மனமுவந்து வாரிவழங்கிய நகரத்தார் பெருமக்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நிர்வாகிகள் அனைவரும் சொந்த செலவில்தான் 12 முறை காசிக்குச் சென்று வந்துள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எந்த இடத்திலும் நான் செய்தேன் என்றோ நாங்கள் செய்தோம் என்றோ, குறிப்பிடவில்லை. காரணம் எல்லாம் நகரத்தார்களுடைய ஒத்துழைப்பும், நன்கொடையும், ஸ்ரீகாசி விஸ்வநாதருடைய அருளாலும் தான் நடைபெற்றுவருகிறது. நாங்கள் செய்த பூர்வ புண்ணியம்தான் எங்களுக்கு இந்தப்பணி செய்யக் கிடைத்த வாய்ப்பு. ஸ்ரீ காசிவிஸ்வநாதரையும், அன்ன பூரணியையும், விசாலாட்சியையும் தரிசிக்கவும் கங்கையில் தீர்த்தமாடவும் கிடைத்த வாய்ப்புக்கும் மீண்டும் மீண்டும் நகரத்தார் பெருமக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

ஜோதிர் லிங்கங்கள் 12

1. சோமநாதர்	–	சௌராஷ்டிரம்
2. மல்லிகார்ச்சுனம்	–	ஆந்திரம்
3. திரியம்பகம்	–	நாசிக்பஞ்சவடியருகே
4. மகாகாளர்	–	உஜ்ஜயினி
5. ஓங்காரம்	–	உஜ்ஜயினி அருகே
6. பீமசங்கரர்	–	பூனா அருகே
7. இராமேச்சுரம்	–	தமிழ்நாடு
8. குஸ்ருணேச்சரம்	–	எல்லோரா குகை அருகே
9. நாகநாதர்	–	சவுண்டி அருகே
10. வைத்தியநாதர்	–	பாட்னா அருகே
11. கேதாரேச்சுரர்	–	இமயத்தில்
12. விசுவேசுவரர்	–	காசி

தருமம் வளர்க்கும் தனவணிகர்

நாசிக் பஞ்சவடி நற்பிர யாகை
காசி அயோத்தி கயைகல் கத்தா
தார கேசுரம் தண்கோ தாவரி
என்னும் தலங்கள் இருநான் கதனில்
சத்திரம் கட்டித் தருமம் வளர்க்கும்
நற்றன வணிகர் நலமுடன் காசி
நாதன் அருளால் நாளும்
வாழ்க! வாழ்க! வழிவழிச் சிறந்தே!

– வித்துவான் வலம்புரி
வே. அண்ணமலை

காப்பாற்ற வேண்டுமெனக் கவியரசி அவரடியில் பாப்போட்டேன் அன்பால் பணிந்து

பேராசிரியர் டாக்டர் மகாகவி **அர. சிங்கார வடிவேலன் (எ) அரசி** கண்டனூர்

காவிரித்தாய் கடல்புகுந்து கப்பல்களைத் தாலாட்டப்
பூ விரியும் பட்டினத்தில் பொன்கொழித்த நகரத்தார்
கோவுடனே மாறுபட்டுக் குடியுடனே இடம்பெயர்ந்தார்
பாவுடனே ஊடாகப் பாண்டியனின் குடியானார்.
இளைபாத்தம் குடிவகைகள் ஏழாக ஆங்காங்கே
குலையாக மலையான குன்றக்குடி சுற்றி
நாற்றிசையும் வாழ்ந்திருந்தார் ஏழொன்பான் குடியானார்.
கோயில்வகைக் குடியானார் கொண்டுவிற்று வளமானார்.
தாயின் மனவளத்தால் தருமங்கள் பலபுரிந்தார்.
அலைகடலுக் கப்பாலும் தொலைதூர ஊர்களிலும்
மலைமலையாய்ப் பொருள்குவித்தார் மன்னருக்கும் கடன்கொடுத்தார்.
தனிவாழ்விற் சிக்கனமும் தருமத்தில் பெருமனமும்
தனிச்சிறப்பாய் நகரத்தார் தரங்காட்டும் முத்திரைகள்.
அன்பாய் இருப்பார் அயல்நாடோ அயலூரோ
தன்துணையை வீடுவிட்டுத் தனியாய்த்தான் வேலைதொழில்.
வீட்டில்/செலவு நடை பிள்ளைகளின் வரவுநடை
கூட்டொதுங்கு தனிவாழ்வால் குறையும் இருப்பிறங்கும்.
இருப்பெல்லாம் ஊற்றாச்சாம் ஏற்றம் மலையாச்சாம்.
பொறுப்பெல்லாம் பூவாச்சாம் பொற்காலம் வாழ்வாச்சாம்.
எல்லாம் வல்லவராய் இருந்தாலும் தம்பெண்கள்
இல்லாம் அறம்தொடங்க இருப்பைக் குறைத்தார்கள்.
பர்மாவுடன் செய்கோனும் பாதை அடைத்ததனால்
வருமானம் குறைந்ததுவாம் வாழ்செலவு மீறியதாம்.

பெண்கொள்ளப் பணங்கொடுத்துப் பெருங்கூரை விலையாச்சு
பெண்தள்ள விலைகொடுத்துப் பின்தரையும் பறிபோச்சு
வருமானம் குறைந்தவுடன் வழிமுறையாம் இளைபவர்கள்
பெருமானம் காக்கப் பெருங்கல்வி கற்றார்கள்
அயலூரில் வேலை அதிகந்தான் சம்பளமும்
வயல்வரவு கொஞ்சம் வரப்புயரம் பெருஞ்செலவு
தட்டுமேளம் கொட்டியதும் தாலிகழுத் தேறியதும்
பெட்டி படுக்கையுடன் பெண்டுடனே குடியேற்றம்.
நகரத்துக் குடித்தனமாம், நண்டு/வளைமனைக்கும்
சிகரத்தில் வாடகையாம் செலவுக்கு வழிபலவாம்.
பூனை புலிபார்த்துப் பூவுடலைச் சுட்டதுபோல்
ஆனைகளைப் பார்த்தே அணில்களுக்கும் ஆசைபல
வருமானம் பெரிதெனினும் வரவைமிஞ்சு செலவுகளால்
ஒருவர் போதாமல் இருவருமே உழைக்கும் நிலை
இருவருமே வேலையெனில் இன்னொருவர் துணைச்செலவு.
தெருவோரம் திண்ணையில்தான் சிறுவர்களின் இராப்பாடம்.
ஊருக்குப் போய்வரவும் உடற்பிணிகள் போக்கிடவும்
காருக்கும் வண்டிக்கும் காசுபணம் பெருஞ்செலவு.
இருவருக்கும் ஓய்வில்லை என்னவந்தும் போதவில்லை
சிறுவருக்கும் பள்ளிச்செலவு பெரிதாச்சு.
பெற்றோரும் சுமையானார் பிள்ளைகளும் தொல்லையெனக்
கற்றோரும் தயங்குநிலை கவலைகளால் மயங்குநிலை.
வீட்டில் அமைதியில்லை வெளியில்பல நெருக்கடிகள்
பூட்டிவிட்ட திருத்தாலி பொருத்து விலகுநிலை
போட்டி வலுத்துவிடப் பொறுமை மலிந்துவிடக்
கூட்டை விலக்கிவிடக் கோர்ட்டுக்குப் போகுநிலை.

மனங்கலந்து பேசாமல் மரபுநிலை பேணாமல்
இனங்குலையும் போகுமென எதிர்காலம் அறியாமல்
தொலைதூர வாழ்க்கையினால் தொலைக்காட்சித் தாக்குதலால்
மலையான தாலியினை மணலாக வீசுகிறார்
கண்ணே கணவரென்றும் கையே மனைவியென்றும்
எண்ணாமல் இருவருமே இணைபிரிய முந்துகிறார்.
கலப்படங்கள் இந்நாளில் காற்றினிலும் புகுந்ததனால்
குழப்படிகள் இல்லறமாம் கோயிலிலும் நுழைந்தனவாம்
காளைகளே! கன்னியரே! கல்வி உயர்வெல்லாம்
ஆளைப் பண்படுத்தும் அனுபவமாய் அமையட்டும்
எங்கே சென்றாலும் எப்பணியை ஏற்றாலும்
மங்கலஞ்சேர் நம்முடைய மரபுகளை மறவாதீர்
அண்டையிலே மணமான அன்புமிகும் தம்பதிகாள்!
உண்மையிலே பணிவில்தான் உயர்பெருமை இருக்கிறது.
பெண்மையிலே ஆண்மையுண்டு ஆண்மையிலே பெண்மையுண்டு
தன்மையிலே ஒன்றுவதே தரமான இல்வாழ்க்கை
"நான்" என்ற தன்முனைப்பை "நாம்"என்ற குடிநினைப்பால்
வீணென்று தள்ளிடுவீர் வீம்புகளை விலக்கிடுவீர்.
தொட்டுத் தொடர்ந்தீர்கள் துணையென்று சேர்ந்தீர்கள்
விட்டுக் கொடுப்பதுதான் வெற்றியென்றே உணருங்கள்
பாட்டுக்கு முந்துங்கள் பயனுக்குப் பிந்துங்கள்
காட்டுக்குள் வாழ்ந்தாலும் கவலைக்கு வழியில்லை
உடலாலே மெல்லினத்தார் உடைமையிலே வல்லினத்தார்
நடப்பாலே இடையினத்தார் நம்மவராம் நகரத்தார்
எல்லாம் நிறைந்தவர்கள் எண்ணிக்கை குறைந்தவர்கள்
வல்லான் இறைவனையே பாதுகாப்பாய்க் கொண்டவர்கள்

ஆதலினால் அன்பர்களே! ஆணுடனே பெண்சேரும்

காதலிலே பிணக்குவரின் கடைசிவரை வழக்குகள்தான்

மணங்களிலே பெரும்பகுதி மணவிலக்காய் முடியுமெனில்

இனங்கலையும் கலப்புமிகும் இருந்தஇடம் மறைந்துவிடும்

குடமுழுக்கு நடத்துமினம் குடிமுழுகிப் போவதுவா?

மடம்கட்டி வைத்தவினம் மனையிழந்து நிற்பதுவா?

எல்லாரும் ஒன்றாவோம் இனம்காக்க முடிவெடுப்போம்.

ஆயிரம் கால அன்பாம் தாலியினைத்

தாய்நகர ஈசுவரியும் தந்தைநகர் ஈசுவரனும்

காப்பாற்ற வேண்டுமெனக் கவியரசி அவரடியில்

பாப்போட்டேன் அன்பால் பணிந்து.

இந்து தேச சரித்திரத்தைப் பற்றிய ஐதீகம் ஒன்று உண்டு. அதாவது இந்திய வாணிபர்கள் முதலில் வர்த்தகத் துறையில் பல நாடுகளுக்கிடையில் ஐக்கியத்தை உண்டு பண்ணுகின்றனர். பின்பு அதைத் தொடர்ந்து அருள் துறையிலும் ஐக்கியம் ஏற்படுகிறது. திரும்பத் திரும்ப நேர்ந்து வருகிற இச்சீரிய நிகழ்ச்சிக்கு ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நல்லதொரு சான்று ஆகும்.

தென்னிந்தியாவில் அமைந்துள்ள அரும்பெரும் கோவில்களையெல்லாம் ஜீரணமடைந்து வந்த பொழுது அவைகளைப் புதுப்பித்து வைத்த சிறப்பு **நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு** உரியதாகிறது. அத்தகைய அரிய திருப்பணியுடன் நின்று விடாது. புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் பல புண்ணிய க்ஷேத்திரங்களில் அதே திருப்பணியைப் பரப்புவாராயினர். அதன் மூலம் தமிழ்நாட்டுக்குத் தனிச் சிறப்பை அவர்கள் கொண்டு வந்திருக்கின்றனர்.

ஸ்ரீ காசியம்பதி சிவனாரது சிறப்பு வாய்ந்த உறைவிடமாகும். உடலுக்கு இருதயம் எவ்வளவு இன்றியமையாததோ, அருள் துறையில் காசியம்பதி இந்தியா முழுதுக்கும், அவ்வளவு இன்றியமையாததாகிறது. என்றென்றும் இந்தியா முழுதுக்கும் அருள் உணர்வை ஊட்ட வல்லதாய் ஸ்ரீகாசி இருந்து வருகிறது. அத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்ரீகாசி விசுவநாதருக்கும் அவருடைய அடியார்களுக்கும் அரிய முறையில் **நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்** பணியாற்றி வந்திருப்பது பாராட்டுதற்குரிய விஷயமாகும். இவ்வரிய பணியில் இப்பொழுது நூறு ஆண்டுகள் கழிந்திருக்கின்றன. இனி என்றென்றுமே இந்த நகரச் சத்திரம் இறைவனாரது திருத் தொண்டுகளைச் சீருடனும் சிறப்புடனும் செய்து வருவதற்கு ஸ்ரீகாசி விசுவநாதர் அருள் புரிவாராக.

சுவாமி சித்பவானந்தா

ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த் துறை

Page 46-60 b0

இமயத்தில் இருதலங்கள்

எஸ்.ஆர்.எம். பழனியப்பன், கோலாலம்பூர்

இந்தியாவில் தோன்றிய சமயங்களை இரு பிரிவாகப் பிரிவாகப் பிரித்துக் கூறுவது உண்டு. வேதத்தை ஏற்றுக் கொள்ளும் **வைதிக சமயாங்கள்** வேதத்தை மறுத்துத் தோன்றிய **அவைதிக சமயாங்கள்** என்பவையே அவை.

'உலகே உள்பொருள், அதைத் தவிர வேறு ஏதுமில்லை' என்று கூறும் உலோகாயதம், சமணம், பௌத்தம் போன்றவை அவைதிக சமயங்கள்.

சைவம், வைணவம் போன்றவை வைதிக சமயங்கள். மிகப் பழமையான இவ்விரு சமயங்களும், தொன்றுதொட்டு வைதிக நெறியின் இரு கண்களாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. இவை இரண்டும் என்றும் பின்னிப் பிணைந்து மக்களிடையே சமரசச் சமயங்களாகத் திகழ வேண்டும் என்று முன்னோர் விழைந்தனர்; அதன் விளைவினை இன்று பல வடிவங்களில் காண்கிறோம்.

திருமால் சிவனை வழிபட்டதாகவும், சிவன் திருமாலின் பெருமையைப் பேசுவதாகவும் அமைந்துள்ள இரு தலங்கள், இந்தியாவின் தெற்கில் ஒன்றும், வடக்கில் ஒன்றுமாகக் காணப்பெறுகின்றன.

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒருவனான இராமன், சிவலிங்கம் அமைத்து வழிபட்ட தலம் **இராமேஸ்வரம்;** சிவராஜதானி என்று போற்றப்பெறும் **காசி**யில் மரணமடைவோரின் காதுகளில், சிவபெருமானே **இராம** நாமத்தை உபதேசிப்பதாக இராமகிருஷ்ணர் போன்ற பெரும் ஞானியர் கூறியுள்ளனர்.

மேலும், இரட்டைக் காப்பியங்கள், இரட்டைப் புலவர்கள் என்பது போன்று, தமிழகத்திலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும், இவ்விரு சமயங்களின் தலங்களும் **இரட்டைத் தலங்க**ளாகவும் திகழ்கின்றன.

தமிழகத்தில் கோயில் என்று சொன்னால், அது சைவ சமயத்தின் தில்லை (சிதம்பரம்) நடராஜர் கோயிலையும், வைணவ சமயத்தில் திருவஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலயத்தையுமே குறிக்கும்.

இவ்விரு தலங்களும் பல வழிகளில் ஒருமைப்பாடு உடையவையாக விளங்குகின்றன.

சைவத்தின் பிரதான நூல்களான திருமுறைகள் தில்லையிலிருந்து பரவின; வைணவத்தின், திராவிட வேதம் என்று சிறப்பிக்கப் பெறும் ஆழ்வார்களின் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்கள் திருவரங்கத்திலிருந்தே பரவின.

சம்பந்தர் – அப்பர் – சுந்தரர் ஆகிய மூவரால் பாடப்பெற்ற பதிகள், **பாடல் பெற்ற தலங்கள்** என்று சிறப்பித்துக் கூறப் பெறுகின்றன. அதே போன்று பன்னிரு ஆழ்வார்களின் பாடல்களைப் பெற்ற வைணவத் தலங்களை **மங்களாசாஸனம்** செய்யப்பெற்ற திருப்பதிகள் என்று வழங்குகின்றனர்.

இவ்வகையில், மூவர் முதலிகளும் பாடிச் சிறப்பித்துள்ள பாடல் பெற்ற தலம் தில்லை; ஆழ்வார் பன்னிருவரில் பதினொருவரின் பாடல்களைப் பெற்றுச் சிறப்படைந்த தலம் திருவரங்கம் (ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவியார், தம் குருவான நம்மாழ்வாரை மட்டுமே பாடியவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது).

தம் பிறந்த குலத்தின் காரணமாகத் தில்லையின் எல்லையை மிதிக்கத் தயங்கிய **திருநாளைப்போவார் நாயனார்** என்னும் நந்தனாரைத் தில்லை மூவாயிரவரை அனுப்பித் தம்மிடம் வரவழைத்துக் கொண்டவர், தில்லைக்கூத்தர். (மூவாயிரவர் கைகூப்ப முனியாயவன் என்று நந்தனின் பெருமையைப் பேசுகிறது திருத்தொண்டர் திருவந்தாதி, 20)

இதே காரணத்திற்காகக் காவிரியைக் கடந்து திருவரங்கத்தை மிதிக்கத் தயங்கிய **திருப்பாணாழ்வாரை**, லோகசாரங்க முனிவரின் தோளில் சுமந்து வரச்செய்து ஆட்கொண்டவர் திருவரங்கத்தம்மான். (வம்பவிழ்தார் முனிதோளில் வந்தபிரான் என்று திருப்பாணாழ்வார் பேசப்பெறுகிறார்)

தில்லையில் **திருக்களிற்றுப்படி (பஞ்சாட்சரப்படி)** இருப்பது போன்று, திருவரங்கத்தில் அஷ்டாக்ஷரப் படிக்கட்டு (எட்டு வரிசைப் படிகள்) உள்ளது. அதன் திருவாசலும், தில்லையைப் போன்று அணுக்கன் திருவாயில் என்றே அழைக்கப் பெறுகிறது.

இவ்வாறு பல துறைகளில் இவ்விரு தலங்களும் தமிழகத்தின் இரட்டைத்தலங்களாக விளங்குகின்றன.

● ● ● ●

இவ்வாறே தெலுங்கு தேசத்தில் **திருப்பருப்பதம்** (ஸ்ரீசைலம்) என்னும் சிவத்தலமும், **திருவேங்கடம்** என்னும் திருப்பதியும் இரட்டைத் தலங்களாக விளங்குகின்றன.

ஸ்ரீசைலத்திற்குச் சம்பந்தர்–அப்பர்–சுந்தரர் ஆகிய மூவருமே பதிகங்கள் பாடியுள்ளனர். திருமலை என்னும் திருப்பதியை ஆழ்வார் பதின்மர் மங்களாசாஸனம் செய்துள்ளனர்.

இவ்விரு தலங்களும் சைவ–வைணவ சமயங்களின் இரு பெருந்தலங்களாகத் திகழ்கின்றன.

● ● ● ●

இது போன்றே வட இந்தியாவின் இமயமலைப் பகுதியில், **திருக்கேதாரமும், பத்ரிநாத்** என்னும் வதரியாச்சிரமமும் (பத்ரிகாஸ்ரமம்), இமயத்தின் இரட்டைத் தலங்கள் என்னும் சிறப்பைப் பெறுகின்றன.

திருக்கேதாரத்திற்குச் சம்பந்தரும், சுந்தரரும் பதிகங்கள் பாடியுள்ளது போன்று, பத்ரிநாத்திற்குப் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பாசுரங்கள் பாடியுள்ளனர்.

ஒன்று (கேதாரம்) மந்தாகினி ஆற்றங்கரையிலும், மற்றொன்று (பத்ரி) அலகநந்தா ஆற்றங்கரையிலும் அமைந்துள்ளன. மேலும் புராண அடிப்படையிலும், இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவைபாகவும் காணப்பெறுகின்றன.

இமயத்திலுள்ள **கங்கோத்ரி** (கங்கை உற்பத்தியாகும் இடம்), **யமுனோத்ரி** (யமுனை உற்பத்தியாகும் இடம்) **கேதார்நாத், பத்ரிநாத்** ஆகிய நான்கு இடங்களுக்கும் ஒரே முறையில் பயணம் செய்து வருவதை **உத்தரகண்ட யாத்திரை** என்பர். கொடுத்து வைத்தவர்களுக்கே கிட்டக்கூடிய இந்தப் புனிதப் பயணம், மிகுந்த புண்ணியத்தை நல்கும் என்னும் நம்பிக்கை தொன்றுதொட்டு நிலவுகிறது.

● ● ● ●

கேதார் – பத்ரி ஆகிய இரு தலங்களுக்குமே ஹர(ரி)த்வாரிலிருந்துதான் புறப்பட வேண்டும். ஹர(ரி)த்வார் என்னும் இவ்வூரின் பெயரே இதனைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

ஹரன் – சிவன்; ஹரி – திருமால்; த்வாரம் – துவாரம் – நுழைவாயில்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கேதாரத்துக்கு, அல்லது திருமால் அருள் பாலிக்கும் பத்ரிநாத்துக்கு நுழைவாயில் என்று இவ்வூரின் பெயருக்குப் பொருள் கொள்ளலாம்.

இவ்விரு தலங்களுக்கும் தோரணவாயிலாகத் திகழும் ஹர(ரி)த்வார், கங்கையாற்றை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தும் அறிமுகவாயிலாகவும் அமைகிறது. இமயத்தில் பிறக்கும் கங்கை, முதன்முதலில் இங்குதான் சமவெளியில் பாயத் தொடங்குகிறது. சிவபெருமான் முடியிலிருந்து இறங்கிய கங்கை, அவனுடைய திருப்பாதத்தைத் தொட்ட பகுதி இதுதான் என்று புராணக் கதைகள் கூறுகின்றன.

மலையிலிருந்து சமவெளிக்கு வரும் கங்கை அன்னையை வரவேற்பது போன்று, ஒவ்வொரு நாள் மாலையிலும் இங்கு நிகழும் கங்கா பூஜை, ஒவ்வொருவரும் வாழ்நாளில் ஒருமுறையேனும் காணவேண்டிய காட்சியாகும்! (நாசிக் பஞ்சவடியிலும், அண்மைக் காலத்தில் காசியிலும் இத்தகைய கங்கை பூஜை ஒவ்வொருநாள் மாலையிலும் நடந்து வருகிறது.)

● ● ● ●

கங்கா பூஜையைக் கண்டுவிட்டு, இமயத்தின் இரட்டைத் தலங்களுக்கான பயணத்தைத் தொடங்குகிறோம். ஹரத்வாரிலிருந்து 24 கிமீ தொலைவிலுள்ள ரிஷிகேஷ் வரைதான் புகைவண்டித் தொடர்பு உண்டு. பின்னர் பஸ் அல்லது காரில்தான் கேதாருக்கோ, பத்ரிக்கோ செல்ல வேண்டும்.

செல்லும் வழியில் ரிஷிகேஷிலிருந்து 70 கிமீ தொலைவிலுள்ள தேவப்ரயாக் என்னும் இடம், பெரியாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருக்கண்டங்கடி நகர் என்னும் பதியாகும். இங்குதான் பாகீரதி ஆறும், அலகநந்தாவும் ஒன்றுகூடிக் கங்கை என்று பெயர் பெறுகின்றன.

பாகீரதி சிவபெருமானின் முடியிலிருந்து பூமிக்கு இறங்கியதாக ஐதிகம். பத்ரியில் திருமாலின் திருப்பாதத்திலிருந்து அலகநந்தா உருவாகி ஓடி வருவதாகக் கூறுகின்றனர். அவை இரண்டும் இந்தத் திருப்பதியில் சங்கமம் ஆவதைப் பெரியாழ்வார் மிக அழகாக வருணிக்கிறார்.

நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்,
நாரணன் பாதத் துழாயும்
கலந்துஇழி புனலால் புகர்படு கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே. –முதலாயிரம் : 4 : 7 : 2

(நன்மை விளங்கும் சடைமுடியை உடைய சிவபெருமானின் தலையில் அணியப் பெற்றுள்ள கொன்றையும், நாராயணன் திருவடியில் பக்தர்கள் தூவிய திருத்துழா(துளசி)யும் கலந்து பெருகி வருகின்ற ஒளியைப் பெற்ற கங்கைக் கரை மீதுள்ள கண்டம் என்னும் சிறப்பு நகர்)

இந்தப் புண்ணிய ஆற்றில் நீராடினால்,
எழுமையும் கூடி ஈண்டிய பாவம்
இரைப்பொழுது அளவினில்.... –மேற்படி : 5

(ஏழு பிறவிகளில் திரண்ட பாவங்கள் அனைத்தும் ஒரு கணப்பொழுதில்) அகன்றுவிடும் என்று விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் உறுதி அளிக்கிறார்.

இங்குள்ள சாளக்கிராமத்தினால் உருவான
பொங்கொலி கங்கைக் கரைமலி கண்டத்து
உறை புருடோத்தமனை.... –மேற்படி : 11

(பொங்கி எழும் ஓசையினைக் கொண்ட கங்கை ஆற்றின் கரையில் உள்ள கண்டம் என்னும் திருப்பதியில் உறைகின்ற ஆண்தகையை (புருஷ உத்தமனை) வழிபட்டுக் கொண்டு கேதாரப் பயணத்தைத் தொடருகிறோம்.

● ● ● ●

திருமாலின் 108 திருப்பதிகளில் ஒன்றான தேவப்ரயாகையிலிருந்து 69 கிமீ தொலைவில் உள்ள **ருத்ரப்ரயாகைக்கு** அடுத்து வருகிறோம். இங்குதான் கேதாரத்திற்கும் பத்ரிக்குமான பாதைகள் பிரிகின்றன. இங்கிருந்து 84 கிமீ தொலைவில் திருக்கேதாரம் அமைந்துள்ளது.

முதலில் ருத்ரப்ரயாகையிலிருந்து 39 கிமீ தொலைவிலுள்ள **குப்தகாசி** என்னும் ஊருக்குச் செல்கிறோம். குப்தகாசியிலிருந்து கேதாரத்துக்கு ஒருவழிப் பயணந்தான்.

சிவபரம்பொருள் தம் பரம இரகசிய உருவத்தைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வெளிப்படுத்தி அருளிய தலமாதலால், குப்தகாசி (குப்தம் – இரகசியம்) என்று வழங்கப் பெறுவதாகச் சொல்கின்றனர்.

இங்குள்ள கோயிலில் கேதாரநாதர் அமைப்பில் விச்வநாதர் அருள்பாலிக்கிறார். இந்த ஊரைச் சுற்றியுள்ள சிற்றூர்களில்தான் திருக்கேதாரத்தில் சிவப்பணி புரியும் பண்டாக்கள் (அருச்சகர்கள்) வசிக்கிறார்களாம்.

இதனருகே **உக்கிமட்** என்னும் சிற்றூர் உள்ளது. பனிக்காலத்தின்போது ஆறு மாதங்களுக்குத் திருக்கேதாரம் திருக்காப்பிடப் பெற்றிருக்கும்போது, கேதாரநாதருக்கு அந்தச் சிற்றூரில்தான் வழிபாடு நடைபெறுகிறது.

முனிவர்களும் தேவர்களும் வழிபட்ட விச்வநாதரை வணங்கி வழிபட்டுக்கொண்டு, ஏறத்தாழ 31 கிமீ தொலைவிலுள்ள **கௌரிகுண்டத்தை** நோக்கிப் பயணமாகிறோம்.

● ● ● ●

கௌரிகுண்டம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் பாடல் பெற்ற தலம். தேவாரப் பாடல்களில் இத்தலம் **திருஅனேகதங்காவதம்** என்று அழைக்கப்பெறுகிறது.

இறைவி, கௌரி என்னும் பெயருடன் சிவபெருமானைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டுத் தவம் செய்த பதி என்று இதனைக் கூறுகின்றனர்.

பனிக்கட்டி போன்று குளிர்ந்து போயிருக்கும் மந்தாகினி ஆற்றங்கரையில், கோமுகியின் வழியாகச் சுடுநீர் எந்நேரமும் கொட்டிக் கொண்டிருக்கிறது.

சற்றுத் தொலைவில் மஞ்சள் நீரைக் கொண்ட கௌரிகுண்டம் என்னும் குளம் இருக்கிறது. அங்குதான் பார்வதி மஞ்சள் தேய்த்துக் குளித்தாராம். எதிரே பார்வதி கோயில்; அம்மையின் பெயர் கௌரி. அருகில் சுயம்பு மூர்த்தியான சிவலிங்கம் ஒன்று உள்ளது. அதன் சிரசில் பாம்பு ஒன்று காணப்பெறுகிறது.

ஆரம் பாம்பது அணிவான்தன்
அனேகதங்காவதம் – 2 : 141 : 8

(பாம்பினை மாலையாக அணியும் சிவபெருமான் உறையும் அனேகதங்காவதம்) என்னும் சம்பந்தரின் வாக்கை, இது மெய்ப்பிப்பது போல் உள்ளது.

கேதாரேஸ்வரின் பெருமையைப் பாடிக் கொண்டு இங்கிருந்து 14 கிமீ தொலைவிலுள்ள திருக்கேதாரத்துக்கு நடைப் பயணம் தொடங்குகிறோம். (நாங்கள் யாத்திரை மேற்கொண்ட 1985ஆம் ஆண்டில், கௌரிகுண்டிலிருந்து நடந்தோ, மட்டக்குதிரையிலோ, தண்டியிலோதான் கேதாரத்துக்குச் செல்ல வேண்டும். இடையில் எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்டன; இப்போது சாலைகள் அமைக்கப் பெற்றிருக்கலாம்.)

இந்தியாவிலுள்ள **பன்னிரு ஜோதிர்லிங்கத்** தலங்களில் ஒன்று திருக்கேதாரம். (பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களையும் ஒரே பயணத்தில் தரிசித்து வழிபடுவது மிகச் சிறப்பானது; பலருக்கு அந்தப் பாக்கியம் கிடைப்பதில்லை. 1991 ஆம் ஆண்டில் அத்தகைய பெரும்பேறு எங்களுக்குக் கிட்டியது.)

பரமேசுவரன் ஆதிசங்கரருக்கு யோகலிங்கம், போகலிங்கம், வரலிங்கம், முக்திலிங்கம், மோட்சலிங்கம் என்னும் பெயர்களைக் கொண்ட ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் கொடுத்தார். அவற்றில் யோகலிங்கத்தைக் காஞ்சி மடத்திலும், போகலிங்கத்தைச் சிருங்கேரி மடத்திலும், வரலிங்கத்தை நேபாளத்தில் நீலகண்ட க்ஷேத்திரத்திலும், **முக்திலிங்கத்தைக் கேதாரத்திலும்**, மோட்சலிங்கத்தைச் சிதம்பரத்திலும் அவர் பிரதிஷ்டை செய்தார் என்று காஞ்சி மகா சுவாமிகள் கூறுகிறார்.

பஞ்ச பாண்டவருக்குப் பரம்பொருள் காட்சியளித்த தலம் திருக்கேதாரம்.

‘சிவபெருமான் பூவுலகில் உறையும் இடங்களில் கேதாரத்திற்கு இணையான வேறோர் இடம் இல்லை’ என்று வேதம் வகுத்த வியாசர் கூறுகிறார்.

கிடைத்தற்கரிய அந்தத் திருக்கேதார தரிசனம் நமக்கும் கிட்டுகிறது.

வெள்ளிப் பனிமலைகளின் பின்னணியில் கேதாரநாதரின் விமானம் தெளிவாகத் தெரிகிறது.

தங்கும் விடுதிகள் – தேநீர்க் கடைகள் – வழிபாட்டு, நினைவுப் பொருட்கள் விற்கும் கடைகள் நிறைந்த சிற்றூரின் வழியே கோயிலுக்குச் செல்கிறோம்.

சில படிகள் ஏறிக் கோயிலின் முன் உள்ள திறந்த முற்றத்திற்குச் செல்கிறோம். தெற்கு நோக்கிய சந்நிதி தென்படுகிறது. சந்நிதிக்கு எதிரே முற்றத்தில் பெரிய இ(ரிஷ)பவாகனர்.

நுழைவாயிலின் அருகில் விக்கினம் தீர்க்கும் விநாயகர், கையில் உருத்திராக்க மாலையுடன் காட்சி தருகிறார்.

நுழைவாயிலின் இருபுறமும் துவாரபாலகர் சிலைகள்.

வடநாட்டுப் பாணியில் கூம்பு போன்று அமைந்த விமானம், கருங்கல்லால் ஆனது. தமிழ்நாட்டுக் கோயில்களைப் போன்ற கோபுர – விமான வேலைப்பாடுகளை வடநாட்டுக் கோயில்களில் காண்பதற்கில்லை; கோயில்களும் சிறியனவே.

அந்த அடிப்படையில் இந்தக் கோயிலும் ஒரே பிராகாரத்தைக் கொண்ட சிறிய கோயில்தான்.

கோயிலை வலமாக வருகிறோம்.

மேற்குப் பிராகாரத்தில் ஆதிசங்கரர் சமாதியும், வடக்குப் பிராகாரத்தில் ஆதிசங்கரரின் நினைவாகப் பளிங்கினாலான ஒரு தண்டும் இருப்பதைக் காண்கிறோம்.

கேரளத்தின் காலடியில் பிறந்த சங்கரர், காஞ்சியில் மறைந்ததாககச் சில நூல்களும், கேதாரத்திலும் (மாதவீயம் என்னும் நூல் சங்கரர் சித்தியடைந்த தலம் கேதாரம் என்று கூறுகிறது.) கேரளத்திலும் சித்தி அடைந்ததாக வேறு சில நூல்களும் கூறிக்கொள்கின்றன. அந்த ஆராய்ச்சியில் இறங்காமல், சமாதியைத் தரிசித்து விட்டுக் கிழக்குப் பிரகாரத்திற்கு வருகிறோம். அப்பிரகாரத்தில் உள்ள நுழைவுவாயில் வழியாகக் கோயிலின் உள்ளே செல்கிறோம்.

முதலில் நாம் காண்பது சபா மண்டபம் என்றும், நவக்கிரக மண்டபம் என்றும் சொல்லப்பெறும் கருங்கல் மண்டபம்.

அறம் – பொருள் – இன்பம் – வீடு என்னும் நான்கு பேறுகளையும் சுட்டுவது போன்று நான்கு தூண்கள்; நடுவே பித்தளையினாலான சிறு இடபவாகனர், கருவறையை நோக்கி வீற்றிருக்கிறார். அருகில், கீழே வீரபத்திரர்.

மேலும் உள்ளே செல்கிறோம். அர்த்த மண்டபம்.. அங்கு சித்தி–புத்தி கணபதியும், பார்வதியும் தரிசனம் தருகின்றனர்.

அடுத்துக் கருவறை.

.....அஞ்சு களிறும் அடக்கிச், சுரும்பார் மலர்
இண்டைகட்டி..... – 2 : 250 : 1

(ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி, வண்டுகள் பொருந்தி மேவும் மலர்களால் இண்டைமாலைகளைத் தொடுத்து)த் தொண்டர் வழிபாடு செய்யும் கேதாரநாதரைக் கண்குளிரக் காண்கிறோம். காணக் கண்அடியேன் பெற்றவாறே என்று எண்ணிக் களிப்படைகிறோம்.

பத்ரிநாத்தில் நர – நாரயண முனிவர்களால் வழிபடப் பெற்று வந்த சிவபெருமான், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இத்தலத்தில் தங்கியிருந்து அருள் பாலிப்பதாகச் சொல்வதுண்டு. கேதாரத்தில் ஜோதி வடிவில் என்றென்றும் எழுந்தருளி அருள் புரிய வேண்டும் என்னும் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஜோதிர்லிங்கமாகத் திகழ்கிறாராம்.

குருக்ஷேத்திரப் போரில் தங்கள் உற்றார்–உறவினரைக் கொன்ற பாவத்திற்குக் கழுவாய் தேடும் பொருட்டுப் பாண்டவர் ஐவரும், வாரணாசி, குப்தகாசி போன்ற தலங்களில் சிவபரம்பொருளைத் தேடி ஏமாற்றமடைந்து, இறுதியில் கேதாரம் வந்தடைகின்றனர். அங்கு எருது வடிவில் இறைவன் அவர்களுக்குக் காட்சி தந்தார் என்றும், பின்னர் அதே உருவில் அவர் நிலத்துக்குள் புகுந்தபோது, பீமன் எருதின் வாலைப் பிடித்து இழுக்க, அப்(காளையின்)பின்புறமே இப்போது காட்சி தரும் கேதாரநாதர் என்றும் கூறுகின்றனர். மூலவரைக் கூர்ந்து நோக்கினால், அவ்வடிவம் ஓரளவு புலப்படுகிறது.

வடநாட்டில் உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் மூலவருக்கு நாமே அபிஷேக – ஆராதனைகள் செய்யலாம்; கட்டித் தழுவலாம். ஆனால் திருமால் கோயில்களில், பண்டரீபுரம் பாண்டுரங்கன் கோயிலைத் தவிர்த்த இதர இடங்களில் அவ்வாறு அனுமதிப்பதில்லை. பண்டரீபுரத்தில் மட்டும் பாண்டுரங்கனின் பாதங்களைத் தொட்டுத் தலையாரக் கும்பிடலாம்; ஆனால், அதுவும் அருச்சகருக்குக் 'கணிசமான' காணிக்கை கொடுத்த பின்னர்தான்!

கேதாரநாதர் கோயிலுக்கு விடியற்காலையில் சென்றால், அபிஷேகக் காணிக்கை செலுத்தி நாமே ஆண்டவனுக்கு அபிஷேக – ஆராதனைகள் செய்யலாம். மற்ற நேரங்களில் அவரைத் தொட்டு வழிபடுவதோடு திருப்தி அடைய வேண்டியதுதான். இரவில் சிருங்கார தரிசனம் காணலாம்.

திருக்கேதாரத்துக்கு ஞானசம்பந்தரும், சுந்தரரும் ஆளுக்கொரு பதிகம் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் திருக்காளத்தியில் இருந்தவாறே திருக்கேதாரத்துக்குப் பதிகம் பாடியதாகச்

சேக்கிழார் சுவாமிகள் (ஞானசம்பந்தர் புராணம், 1026) கூறுகிறார். தம் பதிகத்தை இசையோடு பாடிக் கேதாரநாதரை வழிபடுவோர் வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே என்று ஞானசம்பந்தரும், பரலோகத்து இருப்பாரே என்று சுந்தரரும் பதிகப் பலன்கள் கூறியுள்ளனர்.

இக்கோயிலைப் பாண்டவர்களே முதலில் அமைத்ததாகச் சொல்கின்றனர். பின்னர் ஆதிசங்கரர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் இங்கும் வந்து இக்கோயிலைப் புனர்நிர்மாணம் செய்தாராம்.

இமயமலைப் பகுதியில் இக்கோயில் இருப்பதால், ஆண்டு முழுவதும் இது திறந்திருப்பதில்லை. தீபாவளியை அடுத்துப் பனிக்காலமான ஆறு மாதங்களுக்குக் கோயில் பூட்டப்பெற்றே இருக்கும். ஏப்ரல் 15 முதல் செப்டம்பர் இறுதி வரை கேதாரேஸ்வரரைத் தரிசிக்கலாம் என்று கோயில் நிர்வாகம் கூறுகிறது.

கோயில் மூடப்பெற்றிருக்கும் காலத்தில் தேவர்கள் கேதாரநாதரை வழிபடுவதாக ஐதிகம்.

உள்ளம்மிக்கார், குதிரைம் முகத்தார், ஒருகாலர்கள்,
எள்கல்இல்லா இமையோர்கள் சேரும்இடம்.....2–2 : 250 : 4

(ஒன்றிய சிந்தையராய் உள்ளவர்களும், குதிரை முகம் கொண்டு விளங்கும் கின்னரர்களும், ஒற்றைக் காலில் நின்று தவம் செய்பவர்களும், பழியற்ற சிறப்புடைய தேவர்களும் இறைவனைப் போற்றி வழிடுவதற்குச் சேரும் இடம்) என்று சம்பந்தப் பெருமான் அதைத்தான் குறிப்பிடுகிறார் போலும்!

இந்தியாவில் உள்ள 1008 சிவாலயங்களில் தலைசிறந்தது என்று புராணங்களில் வருணிக்கப்பெறும் திருக்கேதாரத்தைக் கண்டு வழிபடும் அரிய வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து, 11753 அடி (3583 மீட்டர்) உயரத்திலுள்ள கேதாரநாத்திலிருந்து, ருத்ரப்ரயாகைக்குத் திரும்புகிறோம், பத்ரிநாத் பயணத்தைத் தொடங்குவதற்காக.

கேதாரநாத்திலிருந்து மீண்டும் ருத்ரப்ரயாகை சென்றுதான் பத்ரிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

பத்ரிநாத் செல்லும் வழியில் முதலில் ருத்ரப்ரயாகையிலிருந்து 111 கிமீ தொலைவிலுள்ள **ஜோஷிமடம்** என்னும் ஊருக்கு வருகிறோம்.

பத்ரிநாத்தை நிர்மாணித்த ஆதிசங்கரர், முதன்முதலில் ஜோஷிமடத்தில்தான் சங்கரமடம் அமைத்தாராம்.

தமக்கு ஞானவொளி ஏற்பட்ட இத்தலத்தில் சங்கரர் ஜோதிமடம் ஒன்றை நிறுவியதாகவும், அதுவே பின்னர் ஜோஷிமடம் (ஜோஷிமட்) என்றாயிற்று என்றும் ஊருக்குப் பெயர்க் காரணம் கூறுகின்றனர்.

திருப்பிரிதி என்னும் பெயரில் இத்தலத்தை மங்களாசாஸனம் செய்திருக்கிறார் திருமங்கையாழ்வார்.

மறங்கொள் ஆளரி உருவென வெருவர,
ஒருவனது அகல் மார்வம்
திறந்து, வானவர் மணிமுடி பணிதர
இருந்த நல்இமயத்துள்
....
பிரிதி சென்றடை நெஞ்சே! –பெரிய திருமொழி 1 : 2 : 4

(இரணியனின் மார்பைப் பிளந்தவனும், தேவர்களால் வணங்கப் பெறுகின்றவனுமாகிய ஒப்பற்ற நரசிங்கப் பெருமான் இமயத்தில் எழுந்தருளியுள்ள திருப்பிரிதியை, ஏ மனமே! நீ சென்றடைவாயாக) என்று திருமங்கையாழ்வார், இத்தலத்தில் குடிகொண்டுள்ள நரசிம்மரைப் பாடுகிறார்.

அந்த நரசிம்மர் கோயிலுக்கு நாமும் செல்கிறோம்.

வீடு போன்ற தோற்றத்தை உடைய இக்கோயிலில் குடிகொண்டுள்ள சாளக்கிராமத்தினாலான மூலவர் நரசிம்மர், ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றவராம்.

கருவறையில் பத்ரிநாராயணர் சிலையும் உள்ளது. குளிர்காலத்தில் (கேதாரத்தைப் போன்று) பத்ரி ஆலயம் மூடப் பெற்றிருக்கும்போது, பத்ரிநாரயணரின் உற்சவமூர்த்திக்கு இங்குதான் வழிபாடு நடைபெறுகிறதாம்.

கருவறையைக் கம்பிக் கதவினால் பூட்டியிருக்கிறார்கள். அருச்சகர் உள்ளே இருந்து நாம் கொடுக்கும் ஆராதனைப் பொருட்களைக் கம்பிக் கதவின்வழி வாங்கி இறைவழிபாட்டைச் செய்கிறார்.

இங்கிருந்து 48கிமீ தொலைவு பஸ்ஸில் பயணம் செய்து, வதரியாச்சிரமம் என்று ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றதும், பத்ரிகாஸ்மரம், பத்ரிவிஷால் என்றெல்லாம் அழைக்கப்பெறுவதுமான பத்ரிநாத்தைச் சென்றடைகிறோம்.

பல பிறவிகளில் தவமிருந்து புண்ணியம் செய்தோருக்கே பத்ரிநாத் தரிசனம் கிடைக்கும் என்று வசிஷ்ட முனிவர் கூறியிருப்பதாகச் சொல்வர். பத்ரியைப் பார்க்கக் கொடுத்து வைத்த நாமும், பல பிறவிகளில் புண்ணியம் செய்தவர்களாகத்தான் இருக்க வேண்டும்!

பூலோக வைகுந்தம் என்றும், தபோபூமி என்றும் வருணிக்கப்பெறும் இத்திருப்பதிக்குப் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பாசுரங்கள் பாடியுள்ளனர்.

தொழுதெழு தொண்டர்கள் தமக்குப்
பிணிஒழித்து, அமரர் பெருவிசும்பு அருளும்
பேரருளாளன்...........
வதரியாச்சிரமத் துள்ளானே. – பெரிய திருமொழி : 1 : 4 : 4

(தன்னை வழிபடும் தொண்டர்களின் நோயினைப் போக்கிப் பரமபதத்தை அருளும் பேரருளாளனான) எம்பெருமானை,

முற்றமுத்துக், கோல்துணையா, முன்னடி நோக்கிவளைந்து
இற்றகால்போல் தள்ளி, மெள்ள இருந்தங்கு இளையாமுன்.....–மேற்படி 1 : 31: 1

(வயது முதிர்ந்து கூன் முதுகிட்டு, முன்னே செல்லும் அடியைத் தலை குனிந்து பார்த்து, ஊன்றுகோலையே துணையாகக் கொண்டு, முறிந்த கால் போல் தடுமாறி ஆங்காங்கு உட்கார்ந்து சிரமப்படுவதற்கு முன்னரே) வணங்குங்கள் என்று திருமங்கையாழ்வார் அறிவுரை பகர்கின்றார்.

கடைசிக் காலத்தில் காசி (வாரணாசி)க்குச் சென்றால் போதும் என்று இருப்போர் ஏராளம். அவர்களைப் போன்று காத்திருப்போர், வயது முதிர்ந்த நிலையில் கேதாரம் – பத்ரி யாத்திரையை மேற்கொள்வது கடினம். அதனால் தான் வாலிபத்திலேயே வதரியை வணங்குங்கள் என்கிறார் நாலுகவிப் பெருமாள்.

10250 அடி (3110 மீட்டர்) உயரத்திலுள்ள இத்தலத்தைச் சிறியதொரு நகரம் என்றே சொல்லலாம். தங்குவதற்கான விடுதிகளும், தர்மசாலைகளும், உணவகங்களும், கடைகளும் ஏராளம். பஸ்களும், கார்களும் நிறைந்து எந்நேரமும் ஜேஜே என்று இருக்கிறது.

ஆதியில் திருமால் நான்கு வேதங்களையும் உருவாக்கி, அவற்றை உலகுக்கு வழங்கும் பொருட்டு நர – நாராயணர்களாகத் திருவவதாரம் செய்து, தவக்கோலம் பூண்டார். அப்போது திருமகள் பத்ரி (இலந்தை) மரமாக உருவெடுத்து நாராயணனுக்கு நிழல் தந்து, அவருடைய தவத்துக்குத் துணை புரிந்தாள். அதனாலேயே இத்தலம் பத்ரிகாஸ்ரமம் என்று பெயர் பெறலாயிற்று.

ஓம் நமோ நாராயணாய என்னும் தாரக மந்திரத்தை அவர் மனிதனுக்கு முதலில் உபதேசித்த தலமும் இதுவேயாகும்.

● ● ● ●

அலகநந்தா ஆற்றின் மீதுள்ள பாலத்தைக் கடந்து மேலே செல்கிறோம்.

கௌரிகுண்டத்தைப் போன்று இங்கும் ஆற்றின் அருகிலேயே தப்தகுண்டம் என்னும்

சுடுநீர்க் குளம் இருக்கிறது. (ஆதிசங்கரரின் பரிவாரத்தினர் நீராடுவதற்காக இறைவனே அமைத்துக் கொடுத்தது இக்குளம் என்று காஞ்சிப் பெரியவர் கூறுகிறார்.) அதில் நீராடி விட்டுப் படிகள் பல ஏறி பத்ரி நாரயணன் கோயிலை அடைகிறோம்.

வெளியில் வடஇந்திய பாணியிலேயே கோயில் காணப்பெற்றாலும், உள்ளே முழுக்கமுழுக்கத் தென்னிந்திய முறையிலேயே சிற்ப வேலைப்பாடுகள் யாவும் அமைந்துள்ளன.

முதலில் பெரிய திருவடியான கருடாழ்வாரைத் தரிசித்துவிட்டுச், சிறு மாடங்களில் உள்ள விநாயகர், அனுமான் ஆகியோரை வழிபடுகிறோம்.

தென் பிராகாரத்திலுள்ள சிறியதொரு சந்நிதியில் சாளக்கிராமத்தினாலான மஹாலக்ஷ்மியை வழிபட்டுக் கொண்டு மேலே செல்கிறோம். ஆதிசங்கரர் நினைவாக எழுப்பப்பெற்றுள்ள ஒரு கூடம் அடுத்துக் காணப்பெறுகிறது.

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதற்கு இரு வாயில்கள் உள்ளன. கிழக்கு வாயில் வழியாகச் சென்றால், சபா மண்டபத்தினுள் சென்று தர்ம தரிசனம் செய்யலாம். அபிஷேக ஆராதனைகள் செய்யப் பணம் கட்டுவோர் தெற்கு வாயில் வழியாக அர்த்த மண்டபத்தினுள் செல்கின்றனர்.

பத்ரி நாரயணன் தரிசனம் நமக்குப் பரமானந்தத்தைத் தருகிறது.

விடியற்காலையில் நடைபெறும் அபிஷேகத்தின்போதும், இரவு நடைபெறும் கடைசி வழிபாட்டின்போதும் மட்டுமே பரம்பொருளின் முழு உருவத்தைக் காண இயலும். ஏனைய நேரங்களில் பரந்தாமனின் முகம் மட்டும்தான் தெரிகிறது. நவரத்னக் கற்களாலான நகைகளும், மலர் மாலைகளும் நாராயணனின் உருவத்தை மறைத்து விடுகின்றன.

முழு உருவத்தைப் பார்க்கும் பாக்கியம் கிட்டும்போது, பகவான் தவக்கோலத்தில் பத்மாசன நிலையில் இருப்பது தெரியும். திருமாலை இங்கு மட்டுமே இக்கோலத்தில் காண்கிறோம்.

இது குறித்துப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றுள் ஒன்று, இங்கு இருப்பது புத்தர் சிலையே என்பதாகும்.

பௌத்தர்கள் இக்கோயிலைக் கைப்பற்றி இதனைப் பௌத்த விஹாரமாக்கியபோது, முதலில் இருந்த நாராயணனின் சிலையை அகற்றிவிட்டுப் புத்தர் சிலையை வைத்தனராம். பின்னர் இந்துக்கள் இக்கோயிலைப் பௌத்தர்களிடமிருந்து மீட்டபோது, புத்தர் சிலையை நாரதகுண்டம் என்னும் சுடுநீர்க் குளத்தில் எறிந்து விட்டனராம். ஆதிசங்கரர் இதனைப்

புதுப்புதுப்பித்த நேரத்தில், நாரதகுண்டத்தில் காணப்பெற்ற சிலையே நாராயணன் சிலை என்று கூறி, அதனைப் பிரதிஷ்டை செய்ததாகக் கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடையோர் கூறுகின்றனர்.

வழக்கமாக நாம் காணும் புத்தர் சிலைக்கும், இந்த நாராயணனின் சிலைக்குமுள்ள ஒற்றுமையும், திருமாலின் பத்து அவதாரங்களில் புத்தர் அவதாரமும் ஒன்று என்னும் ஒரு சாராரின் கூற்றும் இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன.

(ஆதிசங்கரர் பத்ரிநாத்தில் மடம் நிறுவியபோது, வதரி நாராயண மூர்த்தியே அப்போது அலகநந்தா நதியில் புதைந்திருந்ததாகவும், சுவாமி, சொப்பனத்தில் ஆசாரியருக்குத் தெரிவித்தபடி, அவர் அதை எடுத்துவந்து பிரதிஷ்டை பண்ணினார் என்றும் ஐதிகம் இருக்கிறது என்கிறார் காஞ்சிப் பெரியவர்.)

எது எப்படி இருப்பினும் நாராயணன் சிலையின் உருவ அமைப்புத் தெளிவாகத் தெரியவில்லை என்பது மட்டும் உறுதி.

அருகில் மூலவருக்கு இடப்புறம் நர – நாராயணர் சிலைகளும், வலப்புறம் குபேரன் சிலையும், மற்றும் கருடாழ்வார், நாரதர் ஆகியோரின் சிலைகளும் உள்ளன.

கேரள நம்பூதிரி ஒருவர்தாம் மூலவருக்குப் பூஜை செய்கிறார். இது தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. இவரை ராவல் என்று அழைக்கின்றனர்

இங்கும், கேதாரத்திலும் அருச்சகர்கள் இப்பகுதிகளின் குளிர்நிலைக்கு ஏற்பக் கம்பளி ஆடைகள், குல்லாய்கள் அணிந்தே பூஜை செய்கின்றனர்.

பத்ரி நாராயணனின் திவ்விய தரிசனம் கிடைத்த மகிழ்ச்சியில் கோயிலிலிருந்து வெளியே வருகிறோம்.

சைவர்கள் காசிக்கு அருகேயுள்ள கயாவில் பிதுர்களுக்கான பிண்டதானம் செய்வதை (offering of balls of rice or cooked rice to the manes) மிக முக்கியமான கடமையாகக் கருதுகின்றனர். அது போன்றே பத்ரியிலுள்ள பிரம்மகபாலத்தில் பிண்டதானம் செய்வதை, ஏனைய இடங்களில் செய்வதினும் பன்மடங்கு சிறந்ததாக வைணவர்கள் கருதுகின்றனர்.

நாம் பத்ரிக்குச் செல்கிறோம் என்று தெரிந்ததும் நம் முன்னோர்களின் ஆவிகள் அங்குச் சென்று நாம் அளிக்கப் போகும் பிண்டத்துக்காகக் காத்திருக்குமாம்.

கோயிலின் வடபுறத்தில் சிறிது தொலைவில் உள்ள சிறியதொரு பாறையைத்தான் பிரம்மகபாலம் என்கின்றனர். இது அலநந்தா ஆற்றை ஒட்டி அமைந்திருக்கிறது.

பிரம்மதேவனின் ஐந்தாவது தலையைக் கொய்த சிவபெருமான், அத்தலை தம் கையிலிருந்து அகலாதிருப்பதைக் கண்டு கவலையுறுகிறார். திருமாலின் ஆலோசனைப்படி பத்ரிகாஸ்மரம் வந்து, நாராயணனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த மஹாலக்ஷ்மியிடம் பிக்ஷை பெற்றதும், அத்தலை கீழே விழுகிறது. அதுவே பிரம்மகபாலம் எனப் பெறுகிறது.

இங்கு ஒருமுறை பிண்டதானம் செய்து விட்டால், மீண்டும் சிரார்த்தம் (இறந்தநாட் கடன், திவசம்) முதலியவை செய்ய வேண்டியதில்லை என்றுகூடச் சொல்கின்றனர். (கயாவில் பிண்டதானம் செய்வோருக்கும் இத்தகைய விதிவிலக்குக் கிடைக்குமாம்!)

மற்ற இடங்களைப் போன்று அரிசியில் எள் கலந்து இங்கு பிண்டம் பிடிப்பதில்லை; மாறாக, நாராயணனின் பிரசாதமான மஞ்சள் சோற்றைக் கொண்டுதான் பிண்டம் பிடிக்கிறார்கள்.

பத்ரி யாத்திரையை மேற்கொள்வோர் ஏப்ரல் 25 முதல் அக்டோபர் 15 வரை கோயிலுக்கு வசதியாகச் சென்று வரலாம் என்று கோயில் நிர்வாகிகள் கூறுகின்றனர்.

நவம்பர் மத்தியில் கோயிலை மூடித் திருக்காப்பிட்டு விடுகின்றனர்.

கோயிலைக் குளிர்காலத்துக்காக மூடும் நாளில், ராவல் ஒரு பெண்ணைப் போன்று உடையணிந்து வழிபாடு செய்வாராம். (தமிழகத்தின் திருவானைக்காவிலும், அருச்சகர் பெண் உடையில் உச்சிக்காலப் பூஜை நிகழ்த்துவது இன்றும் நடைபெற்று வருகிறது.) முதலில் மஹாலக்ஷ்மிக்கு வழிபாடு செய்த பின்னர், அம்பாளை எடுத்துச் சென்று நாராயணனின் அருகில் வைத்து விடுவாராம். மூலவரின் மீது நெய் தடவிக் கம்பளியால் போர்த்தி விட்டுப் பெரிய நெய் விளக்கு ஒன்றை ஏற்றி வைப்பாராம். தொடர்ந்து கோயிலைப் பூட்டிச் சீல் வைத்து விடுகின்றனர்.

ஆறுமாதங்கள் கழித்துக் கருவறையைத் திறக்கும்போதும் அவ்விளக்கு அப்படியே எரிந்து கொண்டிருக்குமாம்! (கேதாரத்திலும் இத்தகைய அணையாஜோதி கருவறையின் மேற்குச் சுவரில் காணப்பெறுகிறது. அங்கும் ஆறு மாதங்கள் கழித்துக் கதவைத் திறக்கும்போது அந்த விளக்கு அப்படியே எரிந்துகொண்டிருக்குமாம். இந்த அணையா ஜோதியைக்காணக் கோயில் திறக்கும் நாளில் ஆயிரக்கணக்கானோர் அங்குச் செல்கின்றனர்.

அத்தகைய அரிய வாய்ப்பு நமக்குக் கிட்டாவிடினும், வதரிநாராயணனை வணங்கி வழிபடும் வாய்ப்பாவது கிடைத்ததே என்று எண்ணி மகிழ்கிறோம்.

அலங்கல்ஆய தண்துழாய்கொண்டு ஆயிரம்நாமம்சொல்லி,
வலங்கொள் தொண்டர் பாடிஆடும் வதரி.... —மேற்படி 1 : 3 : 9

(பக்தர்கள், திருத்துழாய் (துளசி) மாலையைக் கையில் கொண்டு, ஆயிரம் இறைநாமங்களைக் கூறி வலமாக வந்து ஆடிப்பாடும் வதரி) நாராயணனை வணங்கிவிட்டுத் திரும்புகிறோம்.

வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள், வாரணாசி (காசி)– கேதார்நாத் – பத்ரிநாத் போன்ற தலங்களுக்கு, வாழ்நாளில் ஒருமுறையேனும் சென்று வருவது, பிறந்ததன் பெரும் பயனைப் பெற்றதாகும். நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக்கூடிய ஒரு சில இன்பங்களில் தலையாயது, இத்தகைய தலயாத்திரைகளால் பெறும் இன்பமேயாகும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

(ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளில் இருமுறை வடநாட்டுப் பயணம் மேற்கொண்டபோது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் எழுதப்பெற்ற கட்டுரை இது. இடையில், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். இருப்பினும் தலங்களைப் பற்றிய குறிப்புகளும், வரலாறுகளும், மனிதர்களைப் போன்று மாறிக்கொண்டே இருப்பதில்லையே ? அதனால்தான் இந்தப் பயணக் கட்டுரையைத் துணிந்து இந்த மலருக்கு வழங்கினேன். இதனைப் படிப்போரில் ஒரு சிலருக்காவது, கேதார–பத்ரி யாத்திரையை மேற்கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் ஏற்படுமானால், அதுவே எனக்குக் கிடைக்கும் பெரும் பரிசாகும். வணக்கம்.)

காசியம்பதியில் நீராடும் கங்கைத் துறைகள்

* 1. அசி	23. தண்டி	45. யமேசுவரம்
2. லோலார்கம்	24. ராணாமகால்	46. கங்காமகால்
3. துளசிதாஸ்	25. முன்ஷி	47. அக்னீசுவரம்
4. ஜானகி	26. அகல்யாபாய்	48. இராமா
5. பாரசுவநாதம்	27. சீதளா	49. இலட்சுமண பாலா
6. சிவாலயம்	28. பிரயாகை	50. மங்களா கௌரி
7. நிரஞ்சனம்	* 29. தசாசுவமேதம்	* 51. பஞ்சகங்கை
8. பிரமேந்திரம்	30. அசுவம்	52. பிந்துமாதவம்
9. அனுமந்தம்	31. கிடிகீ	53. துர்க்கா
10. அரிச்சந்திரம்	32. மான்மந்திரம்	54. பிரம்மா
11. லல்லி	33. திரிபுரசுந்தரி	55. சத்திரம்
12. சிந்தாமணி	34. விசாலாட்சி	56. ராஜமந்திரம்
13. ராணி	35. ஜராசசந்தேசுவரம்	57. லால்
* 14. கேதாரம்	36. லலிதா	58. கௌ
15. சௌகி	37. கங்காகேசவம்	59. நாராயணன்
16. உருக்மாங்கதம்	38. பிரம்மநாளம்	60. திருலோசனேசுவரம்
17. க்ஷேமேசுவரம்	39. மகாசுமயானம்	61. பிரகலாதம்
18. மானசரோவர்	40. சித்திவிநாயகம்	62. ராஜ
19. நாரதம்	* 41. மணிகர்ணிகை	63. கட்கவிநாயகம்
20. அன்னபூரணா	42. தத்தாத்ரேயம்	* 64. வருணாசங்கமேசுவரம்
21. பாண்டேயம்	43. சேந்தியம்	
22. சதுர்சஷ்டி	44. சங்கடாதேவி	

* புள்ளியிட்டவை சிறப்புமிக்க நீராடு துறைகள். நடந்து செல்ல இயலாதவர்கள் படகிலேனும் சென்று இத் துறைகளிலும் நீராடுவது மரபு. (64ல் பலதுறைகள் இப்பொழுது இல்லை.)

நகரத்தாரும் ஆன்மீகமும்

ஏ.வி. கே. சொக்கலிங்கம், தேவகோட்டை

நகரத்தார் திரு மரபு :

தனவணிகர்களாகிய நகரத்தார் பெருமக்களுடைய முன்னோர்கள் காவிரிப்பூம்பட்டினமாகிய பூம்புகார் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு வாழ்ந்த காலத்தில் உள்நாட்டு வாணிகமும், வெளிநாட்டு வாணிகமும் செய்து வந்தார்கள். பின்பு புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் 96 ஊர்களை அமைத்துக்கொண்டு சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள்.

கல்வியும் தொழிலும்

நகரத்தார்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் தொடக்கக்கல்வியும், உயர்நிலைக் கல்வியும் பயின்றவர்கள். அனைத்துப் பாடங்களிலும வல்லவர்கள். ஆயினும் கணிதத்தில் மிகச்சிறப்புப் பெற்றவர்கள். இது அவர்களுடைய தொழிலுக்கு மிகவும் உதவியாக இருந்தது. வாணிபம் செய்யும் பொருட்டு பர்மா, வியட்நாம், மலேஷியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டி, செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றித் தொழில் செய்து வந்தார்கள். வாணிகம் மட்டுமே செய்து வந்தவர்கள். தற்காலத்தில் அனைத்துத் துறைகளிலும் தம் பெருமையைத் தாய்நாட்டிலும், வெளி நாடுகளிலும் நிலை நாட்டி உள்ளனர். குறிப்பாக மின்பொருள் வாணிகம், மருந்து வாணிகம், இரும்பு வாணிகம் யாவும் அவர்களுடைய வழிகாட்டுதலில் நடந்து வருகின்றன. வங்கி அமைப்புகளும் அவர்கள் பொறுப்பில் இருந்து வந்துள்ளன. பல பெரிய தொழில்கள், தொழில் ஆலைகள் அவர்களுடைய நிர்வாகத்தில் பெருமை அடைந்துள்ளன. தாய் நாட்டிலும், அயல் நாட்டிலும் வட்டிக் கடைதான் இவர்களுடைய பிரதான தொழில்.

நகரத்தார்கள் சிக்கனம், சேமிப்பு இரண்டிலும் மிக வல்லவர்கள். சிறுகக் கட்டிப் பெருக வாழும் வாழ்விற்கு உரியவர்கள்.

வகுத்தல்

உரிய பருவத்தில் பொருள் ஈட்டுதல், அதை வகுத்தல், திட்டமிட்டுச் செலவு செய்தல், வாழ்க்கையை வளமுடைய தாக்கல் போன்றவைகளில் கவனமாக இருப்பார்கள்.

ஆன்மீகப் பணிகள்

முன் காலத்தில் வெளி நாடுகளில் ஈட்டிய தொகையைத் தாய் நாட்டிற்குக் கொண்டு வந்து பல அறப்பணிகள் செய்து வந்ததோடு முக்கியமாக ஆன்மிகப் பணியில் கோயில்கள்

கட்டிச் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் நகரத்தார்கள் கட்டிய கோயில்கள் இன்று எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றன. அவர்க்ள் செய்த முக்கியமான பணிகளில் கோவில்கள் கட்டுதல், அன்னதானம் செய்தல், சத்திரங்கள் அமைத்தல், திருக்கோவில்களில் இராஜகோபுரங்கள் புதுப்பித்தல், தளங்கள் இடுதல், கருவறைத்திருப்பணி, குடநீராட்டு இயற்றுதல், திருமுறைப் பதிகங்களைச் சலவைக்கற்களில் பதித்து ஆலயங்களில் நிலைப்படுத்துதல், திருக்குளம், திருமதில், திருநந்தவனம், பசுமடம் முதலிய எண்ணற்ற சேவைகள் குறிப்பிடத்தக்கன.

திருமூலரின் வாக்குப்படி, "யாவர்க்குமாம் இறைவற்க்கு ஒரு பச்சிலை", என்பதற்கு ஏற்பப் பாடல்பெற்ற தலங்களில் நந்தவனம் அமைத்தார்கள். அது போலவே "யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை" என்பதற்கு ஏற்ப பசுமடங்களை அமைத்துப் பால்தரும் மாடுகளைக் காத்தார்கள். மேலும் யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி என்பதற்கு ஏற்ப இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் அன்ன சத்திரங்களை அமைத்தார்கள். இத்தகைய ஆன்மீகப் பணியில் பிற இனத்தாரைக் காட்டிலும் நகரத்தார் சிறந்து விளங்குகிறார்கள் என்பது உண்மை.

திருக்கோயில்களில் நித்திய வழிபாடும், சிறப்பு வழிபாடும் நடைபெற அறக்கட்டளைகள் நிறுவியிருக்கிறார்கள். மரத்தினால் நல்ல வேலைப் பாடுகளுடன் கூடிய அழகான வாகனங்கள் பலவற்றைச் செய்து அதன்மேல் வெள்ளி, தங்கம் போன்ற தகடுகளைப் பதித்துத் திருக்கோயில்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். பாடல்பெற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்ததோடு, தாங்கள் நிரந்தரமாய் வசித்து வருகின்ற ஊர்களிலும் சிவன் கோவில்களிலும் திருப்பணி செய்திருக்கிறார்கள். அவர்களுடைய நகரக் கோயில்கள் ஒன்பதும், நகரத்தார்களின் தலைமையிடமான கோயிலூர்த் திருக்கோயிலும் சிற்பக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

மக்கள் தொகையால் சிறிய சமூகமே ஆனாலும் அறப்பணிகளால் உலகறிந்த ஒரு சமூகமாய்த் திகழ்கின்றது. நகரத்தார் சமூகம். காசி முதல் இராமேஸ்வரம் வரை இவர்களின் அறப்பணி இல்லாத இடமே இல்லை என்னும்படி எல்லா இடங்களிலும் இவர்களுடைய நல்ல தொண்டு நாளும் மலர்ந்து மணம் பரப்பி வருகிறது.

நகரத்தார்கள் அநேக ஊர்களில் தேவாரப் பாட சாலைகள், வேதபாட சாலைகள், அறுபத்து மூவர் குருபூஜைத் திருமடங்கள், அன்ன சத்திரங்கள் ஆகியன கட்டியும், குளங்கள் வெட்டுவது, பள்ளிகள், கல்லூரிகள் அமைப்பது போன்ற பல பணிகளைத் தொண்டு மனத்தால் தளராமல் செய்து வருபவர்கள். மேலும் நகரத்தார்கள் வட இந்தியாவில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம், மானேஜிங் சொசைட்டியர் கங்கை நதியில் சிறப்புப் பெற்ற

காசியில் (வாரணாசி) ஸ்ரீ விஸ்வேஸ்வரருக்கு நடத்தி வரப்பெறும் உச்சிக்காலம், அர்த்த சாமப்பாலபிஷேகம் சிறப்பு பெற்றது. அங்கு ஏழைகளுக்கு உணவு அளிப்பதற்கு சத்திரம் அமைத்துச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதோடு பிரயாகை, அயோத்தி, கயா, தாடகேஸ்வரம், காளிகாட், கோதாவரி இந்தச் க்ஷேத்திரங்களில் ஏழைகளுக்கு உணவளிப்பதற்குச் சத்திரம், யாத்திரையாக வரும் நகரத்தார்கள் தங்குவதற்கு விடுதி இவைகள் ஏற்படுத்தி அவையாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இவை அனைத்தும் காண்பதற்கு அரிய தெய்வத்தின் பணிகளாகும், கண்கண்ட தெய்வமாக விளங்கும் தங்கள் பெற்றோர், பாட்டன், முப்பாட்டன்கள் ஆகிய தென்புலத்தாரை வணங்குவதும் நகரத்தார்களின் பண்பாடாகும். இதனால்தான் திருவள்ளுவரின்

"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கி
ஐம்புலத்தார் ஓம்பல் தலை"

என்ற குறளுக்கு நகரத்தார் எடுத்துக் காட்டாக வாழ்கிறார்கள் என்று பிறர் பாராட்டுகிறார்கள். படைப்பு வீடு என்று வீட்டையே கோயிலாக்குவதும் நகரத்தார்களின் பண்பாடாகும். அதிலும் பெண்பிள்ளைகளுக்குத்தான் படைப்பு அதிகமாக காணப்படுகிறது. தெய்வச்சிலைகள் போலப் படைப்புச் சேலை வேஷ்டிகள் ஆன்மீகச் சின்னங்களாகும்.

காசியில் நம் நகரச் சத்திரத்தில் உள்ள ஸ்ரீ நகரேஸ்வரி சமேத ஸ்ரீ நகரேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக மலர் வெளியிட இருப்பது மிகவும் சிறப்பானது.

இம்மலரில் நகரத்தார்களின் ஆன்மீகப் பணி என்ற கட்டுரைக்கு செய்திகளை நினைத்த பொழுது ஆன்மீகத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காணலாம், என்ற கருத்து நினைவுக்கு வந்தது. இந்த நினைவை உண்மையாக்குகிற எங்கள் திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத்தின் கூட்டுத்திருமண சேவை மனதில் எழுந்து பெருமை தந்தது. இதுவரை 140 எளிய பெண்களின் வாழ்வில் ஒளி ஏற்றி இறைப்பணிக்கு ஒரு முத்திரை பதித்திருக்கிறது என்பது மகிழ்வு தருகிறது.

வளர்க நகரத்தார்களின் புகழ்
ஓங்குக நகரத்தார்களின் அறப்பணி

ஆசையைப் பூர்த்தி செய்தோர் ஆயிரம் ஆண்டு வாழ்க!

"செட்டிநாடு கிரிவலக் குழுத் தலைவர்" கவிஞர் **சிவல்புரி சிங்காரம்**



எட்டுத் திசையிலும் நற்பணி செய்தவர்!
எண்ணம் அனைத்திலும் நன்மையைச் சேர்த்தவர்!
பிட்டுக்கு மண்ணைச் சுமந்தவ னுக்குப்
பெரிதும் ஆலயம் கட்டி மகிழ்ந்தவர்!

திட்டங்கள் போட்டே காரியம் ஆற்றும்
திறமை மிக்கவர்! செல்வம் படைத்தவர்!
மற்றவர் போற்றத் தருமம் செய்தவர்!
மாசில் லாமல் வாழ்வை ஏற்றவர்!

கொட்டிக் கொடுப்பதில் வல்லவர் ஆனவர்!
கொள்கைப் பிடிப்பில் 'அறநெறி' சேர்த்தவர்!
வெற்றிக் கொடிதான் பறந்திட வேண்டி
வியக்கும் விதத்தில் திரைகடல் கடந்தவர்!

காசி முதலாய் கன்யா குமரிவரை
யோசிக்காமல் தர்மம் செய்தவர்!
நேசக் கரத்தைத் தருவோர் பட்டியல்
நீட்டும் மனிதரில் முதலில் நிற்பவர்!

கல்விச் சாலைகள் கட்டி மகிழ்ந்தவர்!
கலைகள் வளரக் கைகொடுத் துதவிய
செல்வந் தர்களில் சிறப்பாய்த் திகழ்பவர்!
தெய்வப் பற்றை மனதில் பதித்தவர்!

காசியில் இன்று கோவிலைக் கட்டிக்
கனிவாய்க் கும்பா பிஷேகம் செய்து
ஆசையைப் பூர்த்தி செய்தவர் அனைவரும்
ஆயிரம் ஆண்டுகள் தழைத்தே வாழ்க!

சிவமும், தவமும்

"அருள்நெறித்தொண்டர்" ஆறு. சுப. ஆறுமுகம் செட்டியார் மேலைச்சிவபுரி

அகில லோக ஏக நாயகனாம் இறைவன் படைத்த பிறப்பில் மனிதப் பிறப்பு புனிதப் பிறப்பு ஆகும், இறைவன் எங்கிருக்கிறான், அவன் எத்தன்மையானவன்? அவனைக்காணும் வழியாது? அவனைக் கண்டவர் யார்? என்று சிந்திக்கின்றவனே உண்மையான மனிதன்.

அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் "சிந்திக்கிலேன்" என்று கூறுகிறார். பொன்னையும், பொருளையும், மனைவி மக்களையும் சிந்திக்கின்றார்கள், சிந்திக்க வேண்டியதைச் சிந்திக்க வேண்டும்.

சிந்தனை செய்து சிவத்தை வந்தனை செய்து தவம்புரிய வேண்டும். சிவத்தை அடையத் தவத்தை மேற்கொள்ளுதல் அவசியம்.

தவம் புரிய வேண்டும் என்ற உடனே யாரும் பயப்படவேண்டாம். "தவமா?" தவம் செய்ய நம்மால் முடியுமா? தவம் கடினமானதன்றோ? என்று அஞ்சவேண்டாம். யாரும் தவஞ்செய்யலாம்; தவம் செய்யக்காட்டுக்குப் போக வேண்டாம். பட்டினிகிடக்க வேண்டாம்; தலைகீழாக நிற்க வேண்டாம். வீட்டிலே இருந்து கொண்டே மனைவிமக்களுடன் வாழ்ந்து கொண்டே தவஞ்செய்யலாம்.

முற்றும் துறந்த முனிவராகிய பட்டினத்தடிகள் பகர்கின்றார்

காடேதிரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன் பிலாதவர் ஓங்கு விண்ணோர்
நாடே இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே

சித்தத்தைச் சிவன் பால் வைப்பதுதான் தவம். வைராக்கியமாக வனாந்திரம் சென்று குகைக்குள் இருப்பதோ தவம் ஆகாது, இறைவனுடைய திருவடிகளை வாயார வாழ்த்த வேண்டும். தலையார வணங்கவேண்டும். இதுதான் தவம். இத்தவத்தால் பேரானந்தம் உண்டாகும்.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகியசிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே

என்பது அப்பர் அருள்வாக்கு.

ஒருவருக்கு உத்தமமான மனைவி, தங்கமான புத்திரர்கள், நோயற்ற வாழ்வு, திடமான உடம்பு முதலிய வாய்ப்பதற்குத் தவமே காரணமாகும்.

"மேலைத்தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்" என்பது ஔவையாரின் திருவாக்கு. அதனால் நம் வாழ்வு சிறக்கத் தவம் புரிய வேண்டும்.

தவம் என்றால் காட்டிற்குச் சென்றோ, அல்லது இமய மலைச்சாரல், ரிஷிகேசம், காசி, கன்னியாகுமரி முதலிய புனித இடங்களுக்குச் சென்றோ, காவி உடுத்தி, உத்திராட்சம் தரித்தோ சடாமுடிதரித்தோ தவம் செய்ய வேண்டும் என யாரும் அஞ்ச வேண்டியதில்லை.

நீங்கள் உங்கள் வீட்டிலோ, கடையிலோ அலுவலகத்திலோ எந்தத் தொழில் செய்தாலும் குடும்பத்தில் இருந்து கொண்டே தவம் செய்யலாம்.

தவம் என்பது உங்கள் இஷ்ட தெய்வத்தின் திருநாமமாகிய மூல மந்திரத்தை காலமும் ஜெபம் செய்து கொண்டிருப்பதுதான். ஜெபம் உரு ஏறஏற ஜெபசித்தியால் உங்களை அறியாமல் உங்கள் நாக்கு மூல மந்திரத்தை நாளடைவில் சொல்லிப் பழகிவிடும்.

நற்றவா உன்னை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே

– என்கிறார் சுந்தரமூர்த்தி நாயனார்

இதையே அருணகிரியார்
இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமுன் அழகுபுனை ஈராறு தோள்நிரையும்
இருபதமும் அறுமுகமும் யானோத ஞானமதை அருள்வாயே

– என்கிறார் (287) கரியகுழல்
சோமீச்சுரம் திருப்புகழ்

தவம், ஜெபம் செய்ய வயதுக் கட்டுப்பாடு இல்லை. எந்த வயதிலும் தவம் செய்யலாம், மனிதர்களாகப் பிறந்த நாம் தவம் செய்து இறைவனுடைய திருவடியாகிய சாயுஜ்யத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ வேண்டும். நீங்கள் உங்களால் இயன்ற உதவி பிறருக்குத் திரிகரணங்களால், வாக்கால், காயத்தால், மனத்தால் செய்ய வேண்டும்.

தானமும் தவமும்தான் செய்வாராயின்
வானவர் நாடுவழி திறந்திடுமே

– என்கிறார் ஔவை மூதாட்டி

சிவபஞ்சாட்சரம் ஆயிரம் எழுத்து அல்ல, நூறு எழுத்து அல்ல, பத்து எழுத்து அல்ல, ஐந்து எழுத்துத்தானே இதைக்கூட உச்சரிக்கக் கூடாதா என்கிறார் இராமலிங்க அடிகள்.

ஆயிரமன் றேநூறும் அன்றோ ரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண் – நீயிரவும்
எல்லும் நினைத்தியென ஏத்துகினும் ஏத்தாய் வீண்
செல்லுமண் என்செய்கேன் செப்பு

சித்தத்தில் தித்திக்கும் மந்திரம் பஞ்சாட்சரம், சித்திக்கும், முத்திக்கும் அதுவே காரணம்

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக்குயிராவது
நன்று கண்டீர் நமச்சிவாயப் பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே

என்பது (திருமந்திரம்)

நித்ய வாழ்க்கையில் நாம் இடைவிடாது ஒன்றை எண்ணும் போதும், உண்ணும் போதும், பேசும் போதும், எக்கர்மம் செய்யும் போதும், இறை சிந்தனை மறவாமல் சிவநாமத்தை உச்சரிப்பது தான் தவம். தவம் செய்து உயர்வு பெறுவோமாக.

காசித் திருத்தலமும் திருவாவடுதுறை ஆதீனமும்

என்ன சாதனம் செய்தாலும் என்ன பாவனை செய்தாலும்
என்ன சாத்திரம் கற்றாலும் என்ன புண்ணியம் செய்தாலும்
என்ன யாகம் செய்தாலும் எய்துறார் முக்தி இன்பம்
என்னரும் புகழும் காசி எய்திடில் எய்தல் உண்மை

முத்தலம் புகழ்நாளும் முழுத்தலமாய்க் காசிக்கு
அத்தலமே ஒப்பன்றி மற்றுண்டோ அறிதி என்றார்

காசி ரகசியம் ஆதீன மகாவித்வான் திரிசிரபுரம் **மினாட்சிசுந்தரம் பிள்ளை**

சிவத்தலங்கள் பலவற்றுள் காசித்தலமே மிக மிகச் சிறந்தது என்பர் பெரியோர். காசி எனும் தலத்தை அடைந்து காசிவிசுவநாதரை ஸ்பரிசித்து வழிபட்டு வந்தாலே அதீதமான ஓர் நிறைவு மனத்தில் ஏற்படும். இந்த உணர்வை உணர்வார் உணர்வர்.

இந்தத் தலம் எவ்வளவு சிறப்புடையதோ அதுபோல, தீர்த்தமாக ஓடும் கங்கையும் சிறப்புடையதாகும். கங்கையைத் தனது சிரசிலே தாங்கி அருள் புரிகின்ற ஒப்பற்ற கடவுள் சிவபெருமான். கங்கை நீர் எல்லா உயிர்களுக்கும் சிவஞானமும் முக்தியும் அளிப்பதால் அதனைத் தாங்கிய சிவபெருமானை கங்கா விசர்ஜனர் என்று அழைக்கிறோம் சிறந்த தவத்தை உடைய பகீரதனுக்கு அருள் செய்ததும் இந்தக் கங்கா தீர்த்தத்தால்தான்.

காசிக்குச் சமமான தலங்கள்

காசித் தலத்தின் பெருமையினைப் பல மொழிகளில் படிக்கக் காணலாம் மகாபுராணங்களும், இதிகாசங்களும் மற்றும் தலபுராணங்களும் காசியின் பலவித சிறப்புகளையும் பெருமைகளையும் கூறுகின்றன. தமிழில் உள்ள சில தலபுராணங்களில் விஸ்வநாதர் துதி குறித்தும், காசிக்குச் சென்று தரிசித்தால் கிடைக்கும் பயன்களைச் சிவனடியார்கள் மூலமும் விவரிக்கப்பெற்றுள்ளது. தென்னகமாம் நம் தமிழ்நாட்டில் உள்ள திருவெண்காடு, திருவையாறு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், சாயாவனம், ஸ்ரீவாஞ்சியம் ஆகிய தலங்கள் காசிக்கு ஒப்பானவை என்று போற்றி வழிபடப் பெறுகின்றன. இதனை ஓர் வடமொழி சுலோகம் மூலம் அறியலாம், அச்சுலோகம்.

சுவேதாரண்யம் சிவ பஞ்சநதம்
கௌரீ மாயூர மத்யார்ஜுனம்
சாயாவனஞ்ச ஸ்ரீ வாஞ்சியம்
காசி க்ஷேத்ர ஸமான ஷடு

என்பதாகும்

இத்தலங்களில் மயிலாடுதுறைத் தலமும், மத்யார்ஜுனம் எனப்படும் திருவிடைமருதூர்த் தலமும் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமானவையாகும்.

மயிலாடுதுறையில் ஐப்பசி மாதம் காவிரியில் நிகழும் கடைமுழுக்கு ரிஷப தீர்த்தமும் திருவிடைமருதூரில் தை மாதம் ரிஷப லக்னத்தில் காவிரியில் நிகழும் பூசத் தீர்த்தமும் சிறப்புடையதால் கங்கைக்கு நிகராகக் கூறப்படுகின்றன. கங்கையில் எப்போது வேண்டுமானாலும் நீராடலாம். ஆனால் தமிழகத்தில் தீர்த்தமாடுதலும், தீர்த்தம் கொடுத்தலும் ஆகிய நிகழ்ச்சியானது முழுமுதற்பொருளாகிய சிவபெருமான் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி இருப்பதனைக் கண்டு தரிசித்தவாறு நிகழும். இது தமிழகத்திற்கே உரிய சிறப்புடையதாகும்.

வாரணாசியில் :

தமிழகத்தில் பல திருக்கோயில்களையும் பல கிளைமடங்களையும் தன்னகத்தே கொண்டு பொலிவுற விளங்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குக் காசியிலும் ஓர் மடம் பல நூற்றாண்டுகளாக விளங்கி வருகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்து குருமகாசன்னிதானங்கள் யாவரும் தமது அருளாட்சிக் காலங்களில் காசிக்குப் பலமுறை விஜயம் செய்தும் கங்கா ஸ்நானம். விஸ்வநாதர் தரிசனம் செய்தும் தல யாத்திரையாக இராமேஸ்வரம் வரை தரிசனம் செய்தும் வருவது ஒரு சம்பிரதாயமாக விளங்குகின்றது. திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடம் இராமேஸ்வரத்திலும் உள்ளது.

காசியில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கண்ணப்பசுவாமி மடம் :

காசித் தலத்திற்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் பல வகையில் தொடர்புகள் உண்டு என்பதனைஆதீன வரலாறுகளால் அறியலாம்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் 12ஆம் நூற்றாண்டில் ஆதீன சிஷ்ய பரம்பரையில் சைவ மரபில் தோன்றிய சைவ கந்தப்ப முதலியார் என்பார் சுயமாகச் சேமிக்கப்பட்ட 1000 பொற்காசுகளைக் கொண்டு காசியில் சோமேஸ்வரர் காட்டில் நிலம் வாங்கி ஆதீனத் தம்பிரான்களின் உதவியால் ஒரு மடத்தை உருவாக்கினார். 1787ஆம் ஆண்டு மகாசிவராத்திரி தினத்தன்று, அந்நிலத்தோடு கூடிய மடத்தைத் தம்மால் தன்னுடைய குருவாகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் 13வது குருமகா சன்னிதானம் அவர்களுக்குத் தானமாகக் கொடுத்தார். அச்சமயம் காசியில் கண்ணப்ப சுவாமி தம்பிரான் இருந்தமையால் திருவாவடுதுறை ஆதீனக் காசிக் கிளைமடம் கண்ணப்ப சுவாமி மடம் என்று அழைக்கப்பட்டது. இம்மடம் கிழக்கு மடம், மேற்கு மடம் என்ற இரு பெரும் மடங்களாக உள்ளது. மேற்கு மடத்தில் தினமும் நடராசர் பூசையும் அன்னதானமும் நடைபெற்று வருகின்றன. மேலும் காசியில் வெவ்வேறு காலங்களில் இன்னும் நிறைய இடங்கள் கிரயத்திற்கு வாங்கிச் சேர்க்கப்படுகின்றன.

மடத்தின் நுழைவு வாயிலில் :

காசி மடத்தின் கிழக்கு நுழைவு வாயிலின் இருபுறமும் தனித்தனியாக பார்சி மொழி மற்றும் தமிழில் கண்ணப்ப சுவாமி வெட்டி வைத்த கல்வெட்டுகள் உள்ளன.

கண்ணப்ப சுவாமித் தம்பிரான் மற்றும் வைத்தியலிங்கம் தம்பிரான் இருவரும் 13ஆவது பட்டத்தில் விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளின் சீடர்கள் ஆவார்கள். இவர்கள் திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காசி அன்னதானச் சத்திரத்தை நிருவகித்து வந்தார்கள். கண்ணப்ப சுவாமி மடத்தில் நடராசப் பெருமான், விநாயகர், ஏழு லிங்கங்கள், அருள்திரு நமசிவாயமூர்த்திகள் ஆகிய திருஉருவங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. அதன் விபரம் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றது. மடத்தின், கீழ்மடத்தின் வடபகுதியில் சதுர்முகலிங்கேஸ்வரர் கோயிலும், சோமேஸ்வரர் காட்டில் சிருங்கேரி மடத்தருகில் அமைந்த இரட்டை விநாயகர் கோயிலும், அதன் அருகில் அமைந்த சில கட்டிடங்களும் கண்ணப்ப சுவாமி மடத்தை சேர்ந்ததாகும். இக்கோயில்களில் நாள்தோறும் பூஜை நடைபெற்று வருகின்றது.

இம்மடத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்திரு நமசிவாயமூர்த்திகளின் திருவுருவத்திற்குத் தை அகவதி (மகரத் தலைநாள்) குருபூசை விழாவில் சிறப்பு அபிடேகம் செய்யப் பெற்றும். வேத பாராயணம், ஹிந்தியில் சித்தாந்தச் சொற்பொழிவுகள் நடத்தியும் சாதுக்களுக்கும் அன்பர்களுக்கும் பிரசாதமும் தட்சிணையும் வழங்கப் பெறுகின்றன.

நாள்தோறும் இம்மடத்தில், துறவிகளுக்கும், சிவபக்தர்களுக்கும் அன்னம்பாலிப்பும், தங்குவதற்கு இடவசதியும் அளிக்கப்பெறுகிறது.

கண்ணப்ப சுவாமி மடத்தில் மலர்ந்த நூல்கள் : (காசிக் கண்டம், காசி ரகசியம்)

அதிவீரராமபாண்டியரால் இயற்றப் பெற்ற காசிக் கண்டம் எனும் நூல் காசியின் பெருமையினைக் கூறும் மொழிபெயர்ப்பு நூல். சங்கரசங்கிதையில், பன்னிரு கண்டங்களுள் ஒன்றாகிய காசிக் கண்டமே அதிவீரராமபாண்டியரால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது. இந்நூல் பூர்வம். உத்தரம் எனும் இரு பிரிவுகளையும் நூறு அத்தியாயங்களையும் 2526 திரு விருத்தங்களையும் உடையது.

இந்நூலை ஓலைச் சுவடியில் இருந்து காகிதப் பிரதி செய்தவர்கள் ஸ்ரீ நமச்சிவாய தேசிகர் அவர்கள் ஆவார். காலம் கி.பி. 1859 ஆகும். இந்நூல் 1859, 1865 ஆண்டுகளில் அச்சு ஏறிற்று. இந்நூற் பெருமையினை யாவரும் உணரும் பொருட்டு இவ்வாதீனத்து 21ஆவது குருமகாசன்னிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சிக் காலத்தில் (1953) ஆம் ஆண்டு

ஆதீனப் பதிப்பாக வெளியிடப்பட்டது. பதிப்பாசிரியர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆவார்.

காசி ரகசியம் :

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற காசி ரகசியம் எனும் நூல் 26 அத்தியாயங்களையும் 1013 செய்யுட்களையும் கொண்டதாகும். பலமுறை காசியாத்திரை சென்றவரும். திருவிடைமருதூர் கட்டளை விசாரணையாக விளங்கியவருமான ஸ்ரீ சுப்பிரமணியத் தம்பிரான் விருப்பத்தின் படி காசியின் தலப் பெருமையினைக் கூறும் நூல்களுள் ஒன்றான காசி ரகசியம், பிள்ளை அவர்களால் தமிழில் செய்யுள் வடிவில் இயற்றப்பெற்றதாகும். இந்நூல் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் (கலியாண மண்டபம்) அரங்கேற்றப்பட்டது என்று தமிழ்த் தாத்தா உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 1881ஆம் ஆண்டு வைகாசி மாதம் உரையுடன் அச்சிடப் பெற்றது.

ஆதீனமும் நகரத்தார்களும் :

திருவாவடுதுறை ஆதீனத்தில் அருளாட்சியில் பாடல்பெற்ற மற்றும் வைப்புத் தல ஆலயங்கள் பல விளங்குகின்றன. திருவாசகத் தலமாம் ஆவுடையார் கோயிலும் இவ்வாதீனத்திற்கு உரியதாகும்.

இவ்வாலயங்களுள் மயிலாடுதுறை மற்றும் திருவிடைமருதூர் ஆலயங்களில் பல பகுதிகளை நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளனர். இன்னும் பல ஆதீனக் கோயில்களில் திருப்பணியில் நகரத்தார் பங்கு கொண்டு திருவருளையும் குருவருளையும் நிரம்பப் பெறுகின்றனர்.

திருவிடைமருதூரில் 1916 ஆம் ஆண்டு நிகழ்ந்த மகாகும்பாபிஷேக விழாவில் சுவாமி கோயில் விமானம் மற்றும் உள்கோயில் திருப்பணியை திருவாளர் மெ.லெ.மெ. சுவாமிநாதன் செட்டியார் அவர்கள் செய்துள்ளார்கள். சமீபத்தில் நிகழ்ந்த மகாகும்பாபிஷேக விழாவில் (ஆகஸ்டு 2006) புதிதாக ஞானவேல் மண்டபம் கட்டி விமானம் அமைத்ததும், அம்பாள் விமானத்தைச் சீர்செய்ததும் ஆகிய பணிகளைத் தேவகோட்டை நகரத்தார் திருமதி எம். சீதாலெட்சுமி குடும்பத்தினரும், சுவாமி கோயில் மேல்தளத்தில் உள்ள விமானங்களைச் சீர்செய்தது, தேவகோட்டை திரு. எம்.எல்.எம். நாச்சியப்ப செட்டியார் குடும்பத்தினரும் ஆவார். மேலும் இவர் திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்க சுவாமிக்கு தினசரி அபிடேகம் செய்திட காலை 3 லிட்டர், மாலை 2 லிட்டர் பால் கொடுத்தும், கார்த்திகை மாதம் ஐந்தாவது சோமவாரம் அதற்கு உபயமும் செய்து வருகிறார்.

மயிலாடுதுறையில் 1928 ஆம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழாவில் ஸ்ரீ அபயாம்பிகை கோயில் திருப்பணியைத் தேவகோட்டை திருவாளர் அள.வீர.பெ. வீரப்ப செட்டியார் மகன் அள.வீர. பெத்தபெருமாள் அவர்கள் செய்துள்ளார். சமீபத்தில் நிகழ்ந்த (செம்டம்பர் 2005) கும்பாபிஷேக விழாவில் மயிலாடுதுறை நகரத்தார் திரு. சி. சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் திருக்கோயிலில் அறப்பணிகள் பல செய்துள்ளார்.

இவ்வாதீனத்து 19 ஆவது குருமகா சன்னிதானம் அருள்திரு வைத்தியலிங்க தேசிக சுவாமிகளிடம் தேவகோட்டை அள.வீர.பெ. வீரப்ப சுவாமிகள் சைவ சந்நியாசம் பெற்று சிவசிந்தனையில் மூழ்கியிருந்து மயிலாடுதுறையில் பரிபூரணம் அடைந்து ஞானசமாதி கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு ஆண்டுதோறும் சித்திரை மாதம் பூராட நட்சத்திரத்தில் நடைபெறும் குருபூசை அன்று ஆதீனத்திலிருந்து பூசை பிரசாதம் நிவேதன பிரசாதம், கல்லாடை (காவி வஸ்திரம்) ஆகியன தம்பிரான் சுவாமிகள் மற்றும் ஓதுவா மூர்த்திகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

நகரத்தார்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கும், நகரத்தார் திருக்கோயிலில் நடைபெறும் குடமுழுக்கு போன்ற நிகழ்ச்சிகளுக்கும் ஆதீனத்திற்கு நேரடியாக பத்திரிக்கை சமர்ப்பித்து ஆசிபெறுவதும் ஆதீனத்திலிருந்து தம்பிரான் சுவாமிகள், ஓதுவாமூர்த்திகள் அவ்விழாக்களில் கலந்து கொண்டு பிரசாதங்களை வழங்கி வருவதும் ஒரு மரபாக இருந்து வருகின்றது.

இவ்வாதீனத்தின் 13 ஆவது பட்டம் முதல் இன்று 23 ஆவது பட்டத்தினை அலங்கரிக்கும் குருமகாசன்னிதானம் அவர்கள் அருளாட்சி வரையிலும் நகரத்தார்கள் ஆதீனத்திற்கு ஆற்றும் ஆலயத்திருப்பணிகள் குறிப்பிடத்தக்கதாகும்.

குடமுழுக்கு மற்றும் குருபூசை நாட்களில் தோத்திரம், சாத்திரம் ஆகியவற்றில் வல்லுநர்கள், கோயிற்கலை வல்லுநர்கள், அறிஞர்கள், ஓதுவாமூர்த்திகள் முதலான பலர்க்கும் சிறந்த அமைப்பு, மன்றங்களுக்கு விருதுகளும், பாராட்டுப் பரிசுகளும் வழங்கியருளுகின்றார்கள். அவ்வகையில் சமீபத்தில் நிகழ்ந்த அருள்திரு நமசிவாய மூர்த்திகள் குருபூசை ஐந்தாம் திருநாள் அன்று (20–01–07) தேவகோட்டை திருவாளர் ஆர்.எம். அண்ணாமலை செட்டியார் அவர்கள் செய்த திருக்கோயில் அறப்பணிகளைப் பாராட்டி திருக்கோயில் அறப்பணிச் செல்வர் எனும் சிறப்பு விருதினையும், ஆதீனத்தில் ஆண்டுதோறும் நிகழும் மாதவச் சிவஞான யோகிகள் சித்திரை ஆயிலியத் திருநாள் விழாவில் 1996ஆம் ஆண்டு தேவகோட்டை சிவத்திரு தத்புருஷ தேசிகர் அவர்களையும், 2001ஆம் ஆண்டு மலேசியா சிவத்திரு டான்ஸ்ரீ மு. சோமசுந்தரம் அவர்களையும் பாராட்டி நினைவுப் பரிசாக பொற்கிழி வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் வாழ்த்தியருளினார்கள். இவ்வகையில்

குருமகாசன்னிதானம் அவர்கள் போற்றும் படியாக நகரத்தார்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

காசியில் நூல் வெளியிட்டருளல் :

சீர்வளர்சீர் குருமகாசன்னிதானம் அவர்கள் அருளாட்சியில் சாத்திரம், தோத்திரம், நுண்கலை முதலான பல்துறை நூல்கள் ஆதீன வெளியீடுகளாக வெளிவந்தும், வந்துகொண்டும் இருக்கின்றன. 05–03–2006 அன்று இவ்வாதீன காசிக் கண்ணப்ப சுவாமி மடத்தில் காசி கண்டம் மற்றும் காசி ரகசியம் ஆகிய இரு நூல்களின் தொகுப்பான ஸ்ரீ காசி மகாத்மியம் எனும் நூலை வெளியிட்டு ஓர் சமயச் சொற்பொழிவினை அமைத்து அருளினார்கள். அது சமயம் சிறப்பான கருத்தரங்கம் நிகழ்ந்தது. வேத பாராயணத்துடன் துவங்கிய இந்நிகழ்ச்சியில் முனைவர். திருமிகு இரமாகோஷ் அவர்கள் பஞ்சாட்சர மந்திரம் என்பது பற்றி உரையாற்றினார்கள். சீர்வளர்சீர் குருமகாசன்னிதானம் அவர்கள் அந்நூலை வெளியிட முதல் பிரதியை காசி பனாரஸ் இந்து பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் திரு. அருண்பாரதி அவர்கள் பெற்று விழாமலரின் சிறப்பினை எடுத்து இயம்பினார்கள். காசிமகாத்மியம் நூலினை பழைமை மாறாது உரைநடைச் சுருக்கத்தை எழுதிய சென்னை திரு. வே. தியாகராஜன் மகாத்மியச் சிறப்புக் குறித்து உரையாற்றினார்கள். நிறைவாகக் குருமகா சன்னிதானம் அவர்கள், விழாவில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தியும், அனைவருக்கும் ஆசி கூறியும் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஆண்டுதோறும் காசியாத்திரையினை மேற்கொண்டு வரும் மகா சன்னிதானம் அவர்கள் தமிழகத்திலிருந்து சிவபூஜா துரந்தரர்கள். முனிபுங்கவர்கள், புலவர்கள், ஆதீனக் காரியஸ்தர்கள் முதலானோர்கள் சூழ்ந்திருக்கக் காசிக்கு எழுந்தருளுவதை வழக்கமாக கொண்டருளுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காசியைக் குறித்துச் செல்லும் கால்களே கால்களாகும்
காசியை வழுத்தும் நாவே நாவெனக் கழறலாமால்
காசியின் கதைகள் கேட்கும் செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும் கண்களே கண்களாமால்

– காசி கண்டம்

இறைவனா அறிய மாட்டான்?

கவிஞர் அழ. அண்ணாமலை

நாடகம் தானே வாழ்க்கை
நாமெல்லாம் ஆடும் பொம்மை
ஆடிடும் மேடை ஞாலம்
ஆண்டவன் சொல்லே வேதம்
வேடமே நாய்தான் என்றால்
விரைந்துதான் குரைக்க வேண்டும்
பாடமே இதுதான் என்றால்
பயின்றுதான் தீர வேண்டும்

அவனவன் தலையெ ழுத்தை
அனுபவக் கீற்றி னாலே
தவமுனி எழுதி வைத்தான்
தாளமே போடு கின்றோம்
சிவசிவ என்று சொல்வோம்
செம்மையால் வாழ்ந்தோ மில்லை
தவமுனி இதையா தந்தான்?
தத்துநாம் எடுத்துக் கொண்டோம்

பணத்திலே மிதக்கும் போதும்
பாலிலே குளிக்கும் போதும்
மணத்திலே மகிழும் போதும்
மலரணை துயிலும் போதும்
பண்வழி நினைக்க மாட்டோம்
பாவமே உற்ற காலை
என்னமாய் நினைக்க லானோம்?
இறைவனா அறிய மாட்டான்?

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!

– கயிலைமணி **மு. பழ. கண்ணப்பன்,** பாகனேரி

இறைவனின் பொருள்சேர் புகழைப் பாடுவதும், கேட்பதும், பிறர் கேட்கச் செய்வதும் இக்கலிகாலத்தில் மிகச் சிறந்த புண்ணியம் என்பது நம் முன்னோர் கருத்து. ஆதரித்து இசைபாடுவது மிகச்சிறந்த வழிபாடு என்பது திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவுள்ளம். பாமாலை பாடுவித்தான் இறைவன் எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும் எண்ணி இன்புறுகிறார். தீதிலாத் திருத்தொண்டத் தொகையாகிய தேவாரத்தைப் பாடுவதற்காகவே சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளை மண்ணிலே தோன்றச் செய்தான் என்பது வரலாறு. பண் சுமந்த பாடல்களை மணிவாசகர் வாய்மூலம் கேட்பதற்காகவே மதுரையின் மண்ணைச் சுமந்து பிரம்படி பட்டான் என்பது சொக்கநாதரின் திருவிளையாடல்.

இத்தகு பெருமைமிகு தமிழ் வேதங்கள் ஆகிய தேவார, திருவாசகத் திருமுறைகளை நாம் பாடுவதும், பிறர்பாடும் போது செவியாரக் கேட்பதும், பண்ணிசைவாணர்களைப் பாடச் செய்து மற்றவர்களைக் கேட்கச் செய்வதும் மிகச்சிறந்த அறமாகும். அவ்வகையில் எம் முன்னோர் செய்த புண்ணியப்பயனாக எங்களுக்குத் திருமுறைப்பணி செய்யும் வாய்ப்பு அமைந்தது எனக் கருதுகின்றோம்.

முத்தி தரும் தலங்கள் ஏழினுள் தலைமை உடையது காசிப் பெருநகர். விசுவநாதர் எழுந்தருளி அகிலம் எல்லாம் அருள்பெறக் காட்சிதருவது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று வகையாலும் சிறப்புடையது வாரணாசி. 64 தீர்த்தக்கட்டங்கள் கங்கைக்கரையில் அமைந்து நீராடுபவர்களின் தீவினைகளை நீக்கும் சிறப்புடையது காசிமாநகர். இந்தியப் பெருமக்களின் இதயத்தில் என்றும் இடம் பெற்று விளங்கும் இடம். அன்று தொட்டு இன்றும், என்றும் அருளாளர்கள் தரிசிக்க விரும்பும் தனித்தன்மை உடையது.

தமிழகத்தில் உள்ள பாடல் பெற்ற தலங்களான மதுரை, இராமேசுவரம், திருவண்ணாமலை முதலாகிய திருக்கோயில்களில் நடைபெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாக்களில் தேவார ஓதுவார்களைத் தக்க இசைக்கருவிகளோடு பண்ணிசைபாடச் செய்வித்த சிவபுண்ணியம் எங்களுக்குப் பல்லாண்டுகளாக அவனருளால் அமைந்து வருகின்றது. மேலும் மேலும் இச்சிவ புண்ணியச் செயல்கள் எங்கள் வழியினர்க்குக் கிடைக்க வேண்டும் என்பது பிரார்த்தனை. இசைகற்று வல்லார்களை (ஓதுவார் மூர்த்திகளை) ஆதரித்துப் பாடச் செய்வதும், கேட்பதும் மிகப்பெரிய அறமாகும். அத்தகு அறச்செயலைத் தொடர்ந்து செய்துவரும் பேறு எங்களுக்குக் கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்கின்றோம்.

அதன் பயனாக, கல்விக்கும் ஞானத்திற்கு இடமானதும் வேத புராண இதிகாசங்களால் புகழப்பெறுவதும், சிவமே பரம்பொருள் என நிலைநாட்டப்பெற்ற இடமாக விளங்குவதும் புத்தர் பெருமான் முதலியோர் தத்தம் கொள்கைகளை நிறுவுவதற்கு வந்ததும், தமிழகத்தைச் சேர்ந்த அப்பர் பெருமான், ஆதிசங்கரர், குமரகுருபர சுவாமிகள் ஆகிய அருளாளர்கள் போற்றியதுமான காசித்திருத்தலத்தில் தேவார இசை முழங்குவதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிட்டியது. இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காசித் தருமத்தை நடத்திவரும் பெருமையுடைய காசி நகரச்சத்திரத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் நகரேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேகத்திலும், நகரத்தார்களால் திருப்பணி செய்யப்பெற்ற அன்னை விசாலாட்சி திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழாவிலும் மூன்று முறை தேவாரப் பண்ணிசை வாணர்களை அழைத்துச் சென்று அவர்களைப் பாடச் செய்து இறைவனின் திருச்செவிகளையும் பக்தர்களின் உள்ளங்களையும் குளிரச் செய்த பேறு எங்களுக்குக் கிடைத்தது.

இத்தகு சீர்மிகு திருப்பணியைச் செய்ய வைத்து எங்களை வாழ்விக்கும் இறையருளுக்கு எவ்வாறு நன்றியறிதலைச் சமர்ப்பிப்பது? எழுமையும் அவனருளால் அவன்தாள் வணங்குவதே அமையும். என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய வாசகத்தையையே சிந்திக்கின்றோம்.

வழித்துணை வருவான்

காட்டையும், காடு சார்ந்த பகுதியையும் பழந்தமிழர்கள் முல்லை நிலம் என்று பிரித்தார்கள். இந்த முல்லையை அடுத்த மலைப் பகுதிகள் குறிஞ்சி நிலம் என்று பிரிக்கப்பெற்றன. குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனாக முருகப் பெருமானைக் கூறுகிறோம். பிற்காலத்தில் சுப்பிரமணியர் வழிபாடு பரவுவதற்கு முன்னமேயே முருகன் வழிபாடும் சிறப்பாக வேல் வழிபாடும் பழந்தமிழ் நாட்டில் விளங்கி வந்திருக்கக் காண்கிறோம். முல்லை, குறிஞ்சி ஆகிய இரு நிலங்களையும் பெற்றுள்ள செட்டிநாடு வாழ் மக்கள் முருகன் வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பழைய பாய்மரக் கப்பற் காலத்தில், கப்பல் ஏறும்பொழுது, திருத்தணி முருகன் வழித்துணை வருவான் என்று சொல்லிச் செல்கின்ற மரபு இருந்து வந்தது. வேல் வழிபாட்டினை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நகரத்தார் பெருமக்கள் தாங்கள் சென்று வாணிகம் செய்த பகுதிகளிலெல்லாம் முருகனுக்குக் கோயில் எடுத்திருக்கிறார்கள். சிறப்பாக, இலங்கை, மலாய் நாடு, பர்மா ஆகிய பகுதிகளில் முருகனுக்குத் திருக்கோயில் எடுத்து வேல் வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். கடல் கடந்து சென்று வாழ்வு சிறக்க வழி தேடிய இவர்கள் வாழ்வின் குறிக்கோளாகிய வழிபாட்டை மறவாமல் போற்றினார்கள் என்பதற்குத் தமிழ் வழங்காத இப்பிற நிலங்களில் இன்றும் நிலைபெற்றிருக்கும் இத் திருக்கோயில்கள் தக்க எடுத்துக்காட்டுக்களாகும். இப்பகுதிகளில் எல்லாம் சென்று பிற மொழி பேசும் மக்களோடு பழகுகின்ற காலத்திலுங்கூட, அங்கங்கே உள்ள இத் திருக்கோயில்கள் என்னைக் கவர்ந்ததோடு, பிற செயல்களினால் இறை வழிபாட்டை மறந்திருந்த என்னை, முருகன் மறவாதிருக்கச் செய்த செயல் இன்றும் என் நெஞ்சைவிட்டு நீங்காது நிற்கின்றது. அங்கனம் முருகனை நினைக்குமாறு இவர்கள் செய்த திருப்பணி என்றும் வாழ்வதாக.

அ.ச. ஞானசம்பந்தன், செயலாளர், தமிழ் வெளியீட்டுக் கழகம், கோட்டை, சென்னை–9.

மணி சொன்ன மனிதக் கடமை!

"பாக்கனி" **மேலை. பழநியப்பன்,** கரூர்

கரு நீல வண்ணனான கிருஷ்ணன், முரட்டு மீசையும் முண்டாசுக்கட்டும் கொண்ட எழுச்சிக் கவிஞன், பாட்டுக்கொரு புலவன் பாரதி கூற்றுப்படி

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை!

தின்னப் பழம்கொண்டு தருவான் – பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் – அதனை
எச்சில் படுத்திக் கடித்துக் கொடுப்பான்

ஆம்! கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை தான்!

ஆயர்பாடியர் வீடுகளின் முற்றத்தில் அன்றைக்கு உறியிருக்கும், உறியில் ஒரு கலயம் இருக்கும், ஆயர்பாடியர் நாள்தோறும் பாலைச் சுண்டக் காய்ச்சி, சிறிது மோர் ஊற்றித் தயிராக்கி, மத்துக்கொண்டு கடைந்து வெண்ணெயைப் பிரித்துக் கலயத்தில் சேர்த்து வைப்பர் நெய்யாக்க.

ஆனால் கண்ணனோ அந்த உறிக்கலையத்தில் உள்ள வெண்ணையை நாள்தோறும் திருடித்தின்பதை வேடிக்கையான வாடிக்கையாகக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஆயர்பாடிப் பெண்கள் நான்கு ஐந்து பேர் ஒன்று கூடித் திட்டமிட்டனர். கிருஷ்ணனைக் கையும் களவுமாகப் பிடிக்க, திட்டம் தயாரானதும் ஒரு வெண்கலமணியை வாங்கி வந்தார்கள்.

உறியின் உச்சியில் மணியைக் கட்டி, மணியின் நுனியில் ஒரு கயிற்றைக் கட்டி, கயிற்றின் மறு நுனியை அடுப்பங்கரையில் கட்டி வைத்து எல்லாப் பெண்களும் திட்டத்தை தயார்படுத்தி ஒளிந்து கொண்டார்கள்.

கிருஷ்ணன் ஒடி ஆடி விளையாடிவிட்டு வெண்ணெய் தின்பதற்காக வந்தான் உறியைப் பார்த்தான், என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு புதிதாக மணி ஒன்று தொங்குவதை கவனித்துவிட்டான், காரணம் புரிந்தது. ஆயர்பாடியர் தன்னைப் பிடிப்பதற்காக மணியைக் கட்டி வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

சரி, இதற்காக இன்றைக்கு வெண்ணெயை திருடித் திங்காமல் விட்டு விடலாமா என்றால் விடக்கூடாது. அதேசமயம் பிடிபடலாமா? என்றால் ஆயர் பாடியரிடமே பிடிபடவும்

கூடாது, அப்படியானால் என்ன செய்வது என்று யோசித்தான், ஒரு பழமொழி மந்திரச் சொல்லாய் மனதில் உதித்தது.

“சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது மேல்” என்பதாகும் அச்சொல்!

ஆமாம் வெண்ணெயைத் திருடித் திங்கிறபோது காட்டிக்கொடுப்பதானால் உறியின் மேலே கட்டப்பட்டு, தொங்குகிற மணிதான் காட்டிக் கொடுக்க வேண்டும். எனவே மணியிடம் பேசுவது என முடிவெடுத்தான்.

ஏ மணியே! என்றழைத்தான் மணி என்ன கிருஷ்ணா என்றது!

நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். செய்வாயா ? எனக்கேட்டான்.

தாராளமாகச் செய்கிறேன் கிருஷ்ணா நீ கேள் என்றது மணி!

பெரிதாக ஒன்று மில்லை என்றைக்கும் போல இன்றைக்கும் நான் வெண்ணையைத் திருடித் திங்கப் போகிறேன், என்னைப் பிடிப்பதற்காக ஆயர்பாடியர் உன்னைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

நீ செய்ய வேண்டிய உதவி என்னவெனில், நான் வெண்ணையைத் திருடித் திங்கிறபோது என்கை உன்மேல் படும். ஆனாலும் கூட நீ அடிக்கக் கூடாது. இவ்உதவியைச் செய்வாயா எனக்கேட்டான்.

மணி அப்படியே செய்வதாக கிருஷ்ணனுக்கு வாக்குறுதி தந்தது.

கிருஷ்ணன் ஒடி ஆடி வந்து உறிக்கலையத்தை உற்றுப்பார்த்தான் மணி ஒன்றும் செய்ய இல்லை.

உறிக்கலையத்தின் மேல் கையைக் கொண்டு சென்றான். மணி அப்பொழுதும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தது.

கலையத்தின் மூடியைத் திறந்தான், மணி மௌனித்தது. கலையத்தினுள் கையை விட்டான். மணி பேசாமடந்தையானது, கையில் வெண்ணையை அள்ளினான் மணி வாய்மூடி மௌனித்தது. அள்ளிய வெண்ணையைக் கைகளால் உருட்டினான் மணி எதுவும் செய்யவில்லை. ஆனால், உருட்டிய வெண்ணையை வாய்க்குள் போட்டுக் கொண்ட போது வெண்கலமணி கலகலவென ஒலித்தது.

ஒளிந்திருந்த ஆயர்பாடியர் ஒடிவந்து கிருஷ்ணனைக் கையும் களவுமாய்ப் பிடித்து விட்டனர். உடனே கிருஷ்ணன் அப்பெண்களைப் பார்த்துப் பேசினான். பெண்களே நான் தோற்றுவிட்டேன். நீங்கள் வென்று விட்டீர்கள் நான் உங்களோடு வரத்தயார்.

ஆனால் அதற்கு முன்னதாக இந்த மணியிடம் நான் ஒரு விளக்கத்தைக் கேட்க வேண்டும். கேட்டுவிட்டு உங்களொடு வருகிறேன், வழி விடுங்கள் என்றான்!

ஆயர்பாடியர் வழி விட்டனர். சிவந்த கண்களொடு நின்ற கிருஷ்ணன் சற்றுக் கோபமாக மணியைப்பார்த்துப் பேசினான்.

உன்னிடம் நான் என்ன கேட்டேன் என்றான் கண்ணன். நீ வெண்ணையைத் திருடித் திங்கிறபோது அடிக்கக்கூடாது எனக் கேட்டாய் என்றது மணி!

சரி அதற்கு நீ என்ன பதில் சொன்னாய் என்றான் கிருஷ்ணன். அடிக்கமாட்டேன் என உறுதி தந்தேன் என்றது மணி. அப்படியானால் ஏன் அடித்தாய் எனக் கேட்டான் கிருஷ்ணன்.

மணி தணிந்த குரலில் பதவிசாகப் பேசியது. பகவான் கிருஷ்ணா நீ கேட்டதும், நான் உத்திரவாதம் தந்ததும் உண்மை. ஆனால் நீ உற்றுப்பார்த்தபோது, மேலே கையை உயர்த்திய போது, கலயத்தின் மூடியைத் திறந்தபோது, கலயத்தின் உள்ளே கையை விட்டபோது, கையில் வெண்ணையை அள்ளியபோது, அள்ளிய வெண்ணையை உருட்டிய போது அடிக்காத நான், நீ வெண்ணையை வாய்க்குள்ளே போட்டுக்கொண்ட போது அடித்ததற்குக் காரணம் என்னுடைய கடமை உணர்வு!

ஆமாம்! பகவான் கிருஷ்ணா, இறைவனுக்கு எவ்வப்போது நைவேத்யம் படைக்கப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் அடிப்பதற்காக இந்த மணி என்ற பிறப்பை எடுத்தேன். அப்படி நைவேத்யம் ஆகின்ற போது அடிக்காமல் வெறுமனே தொங்கினால் ஊமை மணி என இந்த ஊர் உலகம் தூற்றியிருக்கும், எனவே என் கடமையைச் செய்வதற்காகத்தான் அடித்தேன், என்னை மன்னித்துவிடு என்றதாம்.

ஒரு வெண்கலமணி தான் பிறப்பெடுத்ததின் நோக்கமாகிய இறைவனுக்கு நைவேத்ய காலத்தில் அடிக்கின்ற ஒலிக்கின்ற கடமையைச் செய்வதில் உறுதியாக இருந்தது எனில் அரிய பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றிருக்கிற நாம் நம்முடைய தலையாய கடமைகளாகிய இறையுணர்வு, உயர்கல்வி அன்பு, அறம், பணிவு இவற்றைக் கடமையாகக் கொண்டு நிறைவேற்றி வாழ்வில் நிலைக்க வேண்டுமல்லவா!

– MJF லயன் **மேலை. பழநியப்பன்** – கரூர்

காசியும் நகரத்தாரும்

நா. இளங்கோவன், ஆசிரியர், நகரத்தார் மலர், மதுரை

எல்லாம் சிவமயமாய்க் காணும் நகரத்தார் எல்லாம் வல்ல இறைவனை எளிதில் வழிபட ஏற்ற ஊரும் தலமும் காசியாகும் என்பதாலும், விஸ்வநாதப் பெருமானைத் தொட்டு வணங்கவும் நாமே பூப்போட்டும் அபிஷேகம் செய்யவும் அங்கு வழி செய்துள்ளார்கள் என்பதாலும் காசியை நாடிச் சென்றுள்ளார்கள்.

பெரியவர்களையும் இறைவனையும் தொடக்கூடாது என்ற மரபு இந்தியா முழுவதும் இருந்தாலும் காசி இதற்கு விதிவிலக்கு. புராணங்களும் கதைகளும் பல இருக்கலாம். பிறக்க முத்தி திருவாரூர், தரிசிக்க முத்தி திருவண்ணாமலை, இறக்க முத்தி காசி என்பதை இதிகாசங்கள் வாயிலாக அறிகிறோம். ஆகையால் வரலாற்றுச் சிறப்புடைய சொர்க்க பூமியாகத் திகழ்கிறது காசி.

கங்கையில் குளித்தால் பாவம் போகும் இந்தியாவின் எந்தப் பகுதியில் வசிப்போரும் காசிக்குப் போய் வந்தால் இந்தியாவின் மையப்பகுதியை – சரி பாதியைப் பார்த்த அனுபவம் கிடைக்கும். காசி ஏறத்தாழ நாட்டின் மையமாக உள்ள பழம்பெரும் நகரமாகும். பத்து மாநிலத்தார் கொண்டாடும் கோயில் காசி விஸ்வநாதர் ஆலயமாகும்.

நம் ஊரும் வீடும் சில நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை காசியோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும் சந்துகளும், வீதிகளும் அமைப்புக்களும் நமக்குப் பழமையை நினைவு கொள்ளச் செய்கின்றன.

நமது சத்திரம் விசாலாட்சி அம்மையின் ஆலயம் சத்திரத்தில் நாம் அமைத்துள்ள தென்னாட்டுச் சிவாலயம் எல்லாம் சென்ற இருநூறு ஆண்டுக்குட்பட்டது என்றாலும் கல்கத்தா சென்று வியாபாரம் செய்யத் தொடங்கிய நமது ஐயாக்களின் அளவிலாத் துணிவினை, வரலாற்றினை வடிக்கும் வண்ணக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.

நகரத்தார்கள் பேருந்தோ புகைவண்டிகளோ இல்லாத போதே கல்கத்தா சென்று வணிகம் செய்துள்ளார்கள். கடல் மார்க்கமாகக் கூட சென்றிருக்கலாம். பாய்மரக்கப்பலாகத் தான் இருக்கும். அதுவும் ஆச்சரியம் தான். கல்கத்தாவிலிருந்து 700 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள புண்ணிய பூமியை தரிசிக்கச் சென்றதும், மொழி தெரியாத ஊரில் தருமம் தொடங்கி நிலைக்கச் செய்ததும் ஆச்சரியத்தில் ஆச்சரியமே. ஆண்டவனின் கருணைதான் என்றால் மிகையாகாது.

சுதந்திரத்திற்கு முன்பு வரை கல்கத்தாவிலிருந்து தொழில் நிமித்தமாகப் பர்மா சென்ற நகரத்தார் மகமை மூலம் வட மாநிலத்தில் காசி மற்றும் கயா போன்ற பல ஊர்களில் தர்ம கைங்கரியத்தை சிறப்புடன் நிதிதிரட்டி தொய்வில்லா நிர்வாகம் கண்டுள்ளார்கள் என்றால் அவர்களுடைய தீர்க்க தரிசனங்களை வியந்து நாம் வணங்க வேண்டும்.

அவர்களின் வாரிசுகளாகத் தோன்றிய நாமும் புண்ணியம் செய்தவர்கள் தான். புடம் போட்ட தங்கமாக விளங்கிய ஐயாக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தர்மம் தலைகாக்கும் என்ற கூற்றுக்கு மதிப்பளித்து அறப்பணிகள் சிறப்புற நடைபெற நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக ஒற்றுமையைக் கைக்கொண்டு காப்போம். காசி தர்மத்தையும் அதனைச் சுற்றியுள்ள தர்மங்களையும் என்றும் எல்லாம் வல்ல காசிவிஸ்வேசரும் விசாலாட்சியும் நம் கூட இருந்து குலம் வளரக் குடி உயரத் தொண்டு தொடர அருள்பாலிப்பார்களாக.

தாய்

ஒரு குடும்பத்தில் சிறு வயதில் ஒருவர் சந்நியாசி ஆகி விட்டால் குடும்பத்திலுள்ள எல்லோரும் அவரை வணங்கி ஆசி பெற வேண்டும். இதற்கு ஒரே ஒரு விதி விலக்கு தாய். தாயின் காலில் தான் சந்நியாசி வீழ்ந்து ஆசி பெற வேண்டும். தாயின் இந்தத் தனிச்சிறப்பை இந்து மதம் நன்றாகவே உணர்ந்திருக்கிறது.

வயிற்றிலும், மார்பிலும் குழந்தையைச் சுமப்பதோடு அவள் சுமை முடிவதில்லை. குழந்தை வளர்ந்து எத்தனை வயதானாலும், எந்த நேரத்திலும் பெற்ற பிள்ளையை மனதில் சுமக்கிறாளே அந்தச் சுமைக்கும் நாம் கூலி கொடுத்து விட முடியுமா? தாயிடம் நாம் பெற்ற பால் கடன் நம்மால் திருப்பித்தர முடியாத கடன். அதைத் திருப்பித் தருவதற்காக ஒரே ஒரு வழிதான் உண்டு என்பார்கள் மகான்கள். அதுதான் தாய்க்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்.

எட்டு வயதில் வீட்டை விட்டுப் புறப்படுகின்ற ஆதிசங்கரர் தன் தாயின் ஈமக் கடன்களுக்காக வீடு திரும்புகிறார். காடு மேடெல்லாம் சுற்றித் திரிந்த பட்டினத்தார் தாயின் அந்திமச் சடங்குகளைச் செய்து பால் கடனை முடித்தார்.

தாயின் சடலத்தை மூன்று முறை வலம் வந்த பட்டினத்தார். கையில் தீப்பந்தத்தை ஏந்தியவாறே தாயிடம் கூறுகிறார். தாயே நான் இடப்போகிற இந்தத் தீ உங்களுக்கு நினைவிருக்கிறதா? அன்று அடிவயிற்றில் நீங்கள் எனக்குக் கொடுத்த தீயைத்தான் இன்று நான் உங்களுக்குத் திருப்பித் தருகிறேன்.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே

என்று பாடி தாயின் சிதைக்குத் தீ மூட்டித் தனது பால் கடனை நேராக்கினார் பட்டினத்தார்.

தாயன்பு நிதர்சனமானது, தூய்மையானது, உடல் பூர்வமாக மட்டுமல்ல, உள்ளப் பூர்வமாகவும் நம்மோடு இணைந்து இருப்பவள். நாம் தாயிடம் குழந்தையாக இருந்தது போல் ஒரு கால கட்டத்தில் தாய் நம்மிடம் குழந்தையாகிறாள். தன்னைக் கொடுத்து நம்மைப் பெற்றவள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த தாய் தன் தள்ளாத காலத்தில் அவள் தன் மக்களிடம் கையேந்தி நிற்கும் நிலைமையை மாற்றி அவளை அன்போடும், பண்போடும், பாசத்தோடும், பரிவோடும் கவனிப்பதே சிறந்த பிள்ளைகளின் கடமையாகும். இதற்கு மிஞ்சிய அறம் இல்லை.

ஏஎன். சோமசுந்தரம், அரிமளம்

"இதழியலில் - குமரன்"

முனைவர் **பழ. முத்தப்பன்,** முதல்வர், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி, திருச்சி

நகரத்தாரின் புகழுக்கு ஓர் அச்சாணி. செட்டி நாட்டின் வரலாற்றில் ஓர் மைல்கல். தமிழ் மொழி வரலாற்றில் ஒரு பக்கம். சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையின் செம்மல். இத்தகைய பெருமைகளுக்குரிய செட்டியார் சொ. முருகப்பர். அவரால் தொடங்கப் பெற்று வெள்ளிவிழாக் கண்ட இதழ் குமரன். குமரன் இதழின் முதல் ஒருவருட இதழ்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தருவது இக்கட்டுரையின் நோக்கம்.

துந்துபி வருடம், வைகாசி மாதம் திருஞானசம்பந்தரின் நட்சத்திரத்தன்று (மே. 1922) என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற தொடரைக் குறிக்கோள் தொடராகக் கொண்டு மாதப் பத்திரிக்கையாகத் தொடங்கப் பெற்றது குமரன் இதழ். இதழ் வருடத்தைக் குறிக்கச் சதங்கை என்றும், மாதத்தைக் குறிக்க மணி என்றும் குறிக்கப் பெற்றுப் பத்திரிக்கை ஆசிரியர் சொ.முருகப்பா அவர்களால் காரைக்குடி தனவைசிய ஊழியன் பிரஸில் அச்சியற்றிப் பிரசுரம் செய்யப் பெற்றது.

பத்திரிக்கையின் அட்டையில் படம் எதுவும் முதலாண்டு இதழ்கள் பன்னிரண்டிலும் இல்லை. மேற் குறிப்பிட்ட செய்திகளே உள்ளன. முதல் பக்கத்தில் நம் பண்பினைக் காட்டும் உ, சிவமயம் என்று தொடங்கி, 'குமரன்' பெரிய எழுத்தில் அச்சிடப் பெற்று, "கற்றதனாலாய" என்று தொடங்கும் திருக்குறள் இடம் பெற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மூன்று அச்சிடப் பெற்றுள்ளன. இதழ் பெண்ணிபே கிளேஸ் காகிதம். முப்பத்திரண்டு பக்க அளவில் வருடச் சந்தா ஒன்றரை ரூபாயாக அறிவிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

குறிக்கோள்

முதல் இதழில் குமரன் இதழின் குறிக்கோளைப் பற்றி 'நமது குமரன்' என்ற தலைப்பில் 5 பக்கங்களில் கட்டுரையாக எழுதியுள்ளார். ஆசிரியர் அக்கட்டுரையில் குமரன் என்று இதழுக்குப் பெயர் வைத்ததன் காரணத்தை ஆசிரியர் முருகக் கடவுளோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். மேலும் குமரக் கடவுளின் பெருமையைப் பலவாறு எடுத்துக்காட்டி "வள்ளி மணாளனைத் துணைக் கொண்டு, நம் நாட்டு மரபு பற்றிக் கடவுள் திருநாமத்தையே தன்னாமமாகக் கொண்டு நமது குமரன் வெளி வருகிறான்" என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

"நமது சமயம் வளர – தமிழ் மொழி வளர – தமிழ் நாடு வளர – தொழில் வளர – வாணிபம் வளர – அறிவு வளரத் தன்னகத்தே உயர்ந்த கட்டுரை ..... புதிய முறைகளில் எளிய உயரிய நடையில் – உரைநடை வடிவாகவும்... தனிக் கட்டுரைகளாகவும் தாங்கி நமது

குமரன் வெளிவருவான்" (பக். 5) என்று இதழின் குறிக்கோள் – அமைப்பு ஆகியன பற்றி விரிவாக ஆசிரியர் தந்துள்ளார்.

கட்டுரைகள்

முதல் 12 இதழ்களில் (மணிகளில்) திரு.வி.க., திரு.வி.உலகநாத முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை, துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்) பண்டிதை அசலாம்பிகை அம்மாள். தி.நா. சுப்பிரமணியம், பண்டித மயில் வாகனனார், அரு. சோமசுந்தரம் செட்டியார் ஆகியோர்களின் சமய, இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. திரு.வி.க. அவர்கள் முருகன் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை முதல் இதழில் முதல் கட்டுரையாக இடம் பெற்றுள்ளது. "சென்னை – ஸ்ரீமான் தி–வி.கலியாண சுந்தர முதலியாரவர்கள் எழுதியது" என்ற தலைப்பின்கீழ் கட்டுரை ஆசிரியர் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. கட்டுரையின் தொடக்கத்தில் கல்கத்தாவில் நடைபெற்று வரும் "மாடர்ன் ரெவியூ" என்னும் மாதாந்திரப் பத்திரிக்கை போலப் பத்திரிக்கை ஒன்று தமிழ் மொழியில் வரவேண்டும் என்று நீண்ட காலமாக எண்ணியிருந்தேன். இது போழ்து காரைக்குடியில் ஸ்ரீமான் சொ.முருகப்பசெட்டியார் அவர்களைக் கொண்டு குமரன் என்னும் இதழ் வெளிவருவது கேட்டு மகிழ்வு எய்தினேன். "நாட்டுக்கோட்டை நகரச் செட்டியார் ஒருவரால் குமரன் நடத்தப்படுவதால் அப்பத்திரிக்கை கல்கத்தா 'மாடர்ன் ரெவியூ' போலத் தமிழ் நாட்டில் விளங்கும் என உறுதியாக நம்புகிறேன்" எனத் திரு.வி.க. குறிப்பிட்டிருப்பது நகரத்தார் மரபுக்குப் பெருமை சேர்க்கும் தொடராகும். (சதங்கை –1, மணி –1, பக். 7)

சச்சிதானந்தம் பிள்ளையின் கட்டுரை சமயவாழ்க்கை. இக்கட்டுரை முதல் மூன்றுமாதத் தொடர் கட்டுரையாக அமைந்துள்ளது. இன்றைய சமய வாழ்க்கையில் ஏற்பட வேண்டிய சீர்திருத்தங்களை இக்கட்டுரை அற்புதமாக வரையறுக்கிறது. மறைமலை அடிகளின் கட்டுரை "சைவ சித்தாந்தமும் ஆரிய வேதமும்" என்பதாகும். இக்கட்டுரை மணி பத்தில் பக் 300ல் அமைந்துள்ளது. கட்டுரை ஆசிரியர் "பல்லாவரம் பொதுநிலைக் கழகத்து சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகளால் எழுதப்பட்டது என்று குறிக்கப் பெற்றுள்ளார். கட்டுரையில் வேதங்கள் சைவசித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல்கள் ஆகமாட்டா என்பதையும், அவைகள் சிறுதேவர்களின் வழிபாட்டைப் பெரும்பாலும் குறிக்கும் ஆரிய நூல்களே ஆகும் என்பதையும் தெளிவாக மறைமலையடிகளார் விளக்கியுள்ளார்.

துடிசைக் கிழார் அ.சிதம்பரனார் அவர்கள் "சிவ நாமங்களின் பெருமை" என்ற கட்டுரை மணி. 5,11 இரு இதழ்களில் தொடர் கட்டுரையாக வெளிவந்துள்ளது. முதற்பகுதி ஐந்தாவது இதழிலும், பிற்பகுதி பதினொறாவது இதழிலும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானின் பெயர்களின் காரணங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. முதுமொழிக் காஞ்சியார்

எழுதிய, 'பழமொழிக் களஞ்சியம்' என்ற தலைப்புடைய கட்டுரை ஏழு இதழ்களில் தொடர் கட்டுரையாக வெளியிடப் பெற்றுள்ளது. இக்கட்டுரையில் பழமொழிகளுக்கு நடைமுறைச் செய்திகளைக் கொண்டு விளக்கம் தரப்பெற்றுள்ளது. (இக்கட்டுரைகள் இன்று மறுபதிப்பு வருமானால் மிக்க சுவைபாகவும், சமுதாயத்திற்கு விளக்கம் தருவதாகவும் அமையும்)

'சொற்காத்தல்' என்ற கட்டுரையை (மணி –6, பக். 164) திருப்பாதிரிப்புலியூர் அசலாம்பிகை அம்மாள் எழுதியுள்ளார்கள். இக்கட்டுரை திருக்குறள் கட்டுரையாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் பருத்தித்துறை பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள் எழுதிய 'குளிக்கப் போய்ச் சேறாடல்' என்ற கட்டுரை மணி பதினொன்றில் வெளியாகியுள்ளது. இக்கட்டுரை உயிர்ப்பலி செய்வதைக் கண்டித்துப் புலால் உண்ணாமையை வலியுறுத்துகிறது. பெண்படைப்பாளர்களின் படைப்புகளையும் குமரன் ஊக்கப் படுத்தியமைக்கு இவ்விரு கட்டுரைகளும் சான்றாகும். குமரன் கட்டுரைகள் இன்றைய நிலையில் நீள்வாசிப்பிற்கும் மறுபதிப்புகட்கும் உரியனவாகும். இலக்கிய நயமும், சமுதாய விழிப்புணர்ச்சியும் அமைந்து சுவை தருகின்றனவாகக் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கவிதைகள்

குமரன் இதழ்களில் கட்டுரைகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கப் பெற்றது போல் கவிதைகட்கும் உரிய இடம் அளிக்கப் பெற்றுள்ளது. மூன்றாவது இதழில் இதழாசிரியர் ஜீவகாருண்யச் சிந்து என்று ஒரு அற்புதமான கவிதை. கவிதைப் பகுதியாக முதன் முதலாக இடம் பெறுகிறது. நம் படைப்பு வீடுகளில், ஆடு, கோழி பலியிட்டுப் படைப்பதைக் கண்டனம் செய்யும் கவிதையாக அக்கவிதை அமைந்துள்ளது. மணி 10ல் சென்னை திரு. வி. உலகநாத முதலியார் இயற்றிய 'குட்டி வதைக்காகத் தாயினம் இரங்கல்' என்ற தலைப்பில் உயிர்ப்பலியைக் கண்டனம் செய்யும் கவிதை இடம் பெற்றுள்ளது. காந்தியடிகளைப் பற்றிய கவிதை (மணி 8) உள்ளிட்ட மிகச்சில கவிதைகள் இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

கதைகள் :

முதல் பன்னிரண்டு இதழ்களில் கதைகள் காணப் பெறவில்லை. தன் வரலாறு கூறுதல் என்ற அமைப்பில் கரும்பு, முல்லைப்பூ, வைரமோதிரம், பொன்னனையாள், தில்லைத் தாமரை ஆகிய தலைப்பில் அவையவை தங்களின் பிறப்பு, பயன், வரலாறு இவற்றைக் கூறுவது போன்ற படைப்புகள் இதழ்களில் இடம் பெற்றுள்ளன. இவை கதை போன்று எழுதப் பெற்றுள்ளன எனலாம். கரும்பு, முல்லை, தில்லைத் தாமரை ஆகியவை தாங்கள் முளைத்துப் பயிராகி, பூத்து, மக்கட்குப் பயன் படுவதைத் தாங்களே கூறுவது போல அப்படைப்புகள் அமைந்துள்ளன. வைரமோதிரம் கிம்பர் சுரங்கத்தில் தோன்றியதிலிருந்து கன்னியாகுமரி மகாராசா மோதிரமாக்கி அணிந்தது. பிறகு மால்சுப்பம்மாள் என்ற தாசி கைமாறியது, பிறகு

திருட்டுப் போனது என்றெல்லாம் கதை போல அப்படைப்பு அமைந்துள்ளது படித்து இன்புறத் தக்கதாகும். மணி – 7.

தலையங்கக் கட்டுரைகள்

நாட்டின் நிலைமையும் நமது கடமையும் (மணி–2) நமது நாட்டில் கிறிஸ்துவரின் முயற்சி (மணி. 3) வேத பாடசாலைகள் (மணி –4) ராட்டினத்தொழில் (மணி 7) ஆகிய தலையங்கக் கட்டுரைகள் மிகச் சிறந்த கட்டுரைகளாகும். இவைகள் இதழாசிரியர் சொ. முருகப்பாவின் படைப்புகளாகும். முதல் ஏழு இதழுக்குப் பிறகு பிற ஆசிரியர்களின் கட்டுரைகள் தலைப்புக் கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன. சொ. முருகப்பாவின் படைப்புகளில் வேத பாடசாலைகள், நகரத்தார் வரலாற்றில் இடம்பெற வேண்டிய கட்டுரையாகத் திகழ்கிறது. நம்மவர்கள் செய்த வேதபாடசாலைகளின் மதிப்பீடு அக்கட்டுரை எனலாம். தலையங்கக் கட்டுரைகளை நாட்டு நடப்புச் செய்திகளின் மதிப்புரை எனலாம். நாட்டு வரலாற்றுக்குப் பெரிதும் அவை துணை புரிவனவாகும்.

மதிப்புரை

இதழின் கடைசிப் பக்கம், பின்புற அட்டையில் நூல்களின் மதிப்புரைகள் இடம் பெற்றுள்ளன. திரு.வி.க. அவர்களின் ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’, ‘சைவசமய சாரம்’ ஆகிய நூல்கட்கும், ‘ராமகிருஷ்ண விஜயம்’ உள்ளிட்ட இதழ்கட்கும் மதிப்புரைகள் இடம் பெற்றுள்ளன. கல்பதரு, விநோத விகடன், தெய்வ பக்தன், தத்துவ இல்லம் தரும சீலன், சோதிடகலாநிதி ஆகிய இதழ்கள் தமிழ்நாட்டில் வெளி வந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. இவை பற்றிய குறிப்புகளும் கிடைக்கின்றன. சதாசிவப் பிரம்மத்தின் அற்புத விருத்தாந்தம் என்ற நூல் அரையணா தபால் முத்திரை (ஸ்டாம்ப்) அனுப்பினால் வேந்தன்பட்டி – திருவள்ளுவர் வாசகசாலையில் கிடைத்திருக்கிறது. இது இலவசப் பதிப்பு. இதுபோன்ற செய்திகள் இடம் பெற்றிருப்பது வரலாற்று நோக்கில் மிகவும் பயன்தரு செய்திகளாகும்.

சதாங்கை ஒலி

செட்டிநாட்டு நடப்புகளையும், சமுதாய நடப்புகளையும் பெட்டிச் செய்தியாகத் தெரிவிக்கும் பகுதி இப்பகுதியாகும். இன்று நம்இதழ்களில் பல நகரத்தார்களின் படங்கள் இடம் பெற்று, அவர்களின் பேட்டியும், அவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் இடம் பெற்று வருகின்றன. இவற்றைப் பலர் தவறாக விமர்சனம் செய்துவிட்டு அதாவது இது வெறும் விளம்பரம், ஆடம்பரம் என்ற விமர்சனம் செய்கின்றனர். ஆனால் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இச்செய்திகள் வரலாறுகள் என்பதை உணரவேண்டும். அதனை மெய்ப்பிப்பதே குமரன் இதழில் வந்திருக்கும் பெட்டிச் செய்திகள், கண்டனூர் பள்ளி மாணவ மாணவியர் சிவன்

கோவில் உற்சவத்தில் கையில் தாளம் தொண்டு, சிவ வேடப் பொலிவுடன் தேவாரத் திருமுறைகள் பாடினார்கள் (மணி. 2)

காரைக்குடி மெய்யம்மை ஆச்சி, பாம்பு கடித்தபோது மருத்துவரைத் தேடவில்லை, மருந்து உட்கொள்ளவில்லை, திருநீறு பூசி, திரு நீற்றுப் பதிகம்பாடி, பாம்பு விடத்தை இறக்கிக் கொண்டார், பாம்பையும் அடிக்கக் கூடாது என்றார். (மணி. 4)

இரணிக்கோயில் கூட்டம்

துந்துபி, ஐப்பசி 4ஆம் தேதி முதல் 16 வரை 12 நாட்கள் நடைபெற்றது. 1200 புள்ளிகள் உள்ளனர். ஒரு புள்ளிக்கு 7 ரூபாய் வீதம் வசூல் செய்து – திருப்பணி நடத்தத் திட்டம். திருப்பணி முடியும் வரை வேறு எந்த விதமான வழக்கு மூட்டைகளையும் அவிழ்க்கக் கூடாது என்று பேசி முடிவு எடுக்கப்பட்டது. (பிள்ளையார் பட்டிக் கோவிலானது காரியத்தன யுத்தத்தால் கிடக்கும் நிலை இப்பொழுது ஞாபகம் வருகிறது) இரணியூர்க் கோவிலுள் பல ரகஸியங்கள் இருப்பதாகச் சொல்லப் பெறுகிறது. முன்னதாகவே ஒரு அஸ்திவாரம் உள்ளது. ஆதலின் அந்தக் கோவிலை உள்ள அளவிலேயே அமைப்பது சாலச் சிறப்புடையதாம். ஊரூராகச் சென்று வரியெழுதாமல் அவரவரும் கோயில் வாசலில் சென்று தாங்களாகவே சீட்டு எழுதிப் போடுவது என்று செய்திருக்கும் தீர்மானம் உண்மையானவர்க்கு இன்பம் தருவதாகும். (மணி. 6)

அரியக்குடியில் சிவாலயம்

மிகப் புராதனமான சிவாலயம் இங்குள்ளது. கார் காத்த வேளாளர் வழிபாடு செய்ததாம். இப்பொழுது ஒரு சிறு ஒட்டுக் கட்டிடத்தில் ஒரு பரதேசியார் பூசையில் இருந்து வருகிறது. இவ்வூர் நகரத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து பதினாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்வது என்று தீர்மானித்திருக்கிறார்கள் என்றறிந்து மகிழ்கிறோம். (மணி. 8)

காரைக்குடி சிவன்கோவில்

அறுபத்துமூவர் மடத்தில் நகரக்கூட்டம், சிவன் கோவில், கொப்புடையம்மன் கோவில் மற்றும் நகரப் பொது சம்பந்தமான காரியங்களையும், இளையாற்றங்குடி கோவிலாரில் மூவர் மாற்றூர்க் கோவில், வயிரவன் கோவில், நேமங்கோவில், இரணியூர்க் கோவில், தனித்தனி ஒருவர் பிள்ளையார்பட்டிக் கோவில் மூவர் ஆகப் பதின்மர் பாதுகாத்து வருவது என்று தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. நடப்புக்காரியங்களை ஆண்டு ஒன்றுக்குத் தனித்தனி இரண்டுபேர் கவனித்துவருவது என்று தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. (மணி. 9)

தங்கப் பதக்கம்

திருப்பூரில் நடைபெற்ற மாகாண மாநாட்டில் கதர் பரீட்சை ஒன்று நடைபெற்றது. நூல் நூற்பதில் மிக்க தேர்ச்சி பெற்றுள்ள நமது நண்பர் வேந்தன்பட்டி ஸ்ரீமான் மு. சொக்கலிங்கம் செட்டியாருக்குத் தங்கப் பதக்கம் அளிக்கப் பெற்றது.

இத்தகைய செய்திகள் நம் மரபு வரலாற்றுச் செய்திகளாகும். பெருமைக்குரிய செய்திகளும் ஆகும். இதுபோன்ற இதழ்களை நாம் பாதுகாப்பது எவ்வளவு தேவையான செயல் என்பதை இச்செய்திகள் மெய்ப்பிக்கின்றன.

முடிவு

பன்னிரண்டு இதழ்களைப் பைண்ட் செய்து வைத்திருந்ததை என் சகோதரர் வீர.வீர. சோலையப்பன் அவர்கள் தந்தார்கள். அவர்கட்கு என் நன்றி என்றும் உரியது. குமரன் இதழ்கள் நம் வரலாற்றுக் கருவூலம். தமிழ் மொழியின் கலங்கரை விளக்கம். சமயத்துறையின் வழிகாட்டி என்று போற்றப் பெறும் அளவிற்குப் பெருமை பெற்றது என்பதை இக்கட்டுரை ஒரு சிறிது விளக்கியிருக்கும். இன்னும் பன்னிரண்டு இதழ்களில் உள்ள செய்திகள் அரிய செய்திகளாகும். அவை பற்றிக் கூறின் கட்டுரை விரியும், என்பதால் இச்சுருக்கத்தோடு கட்டுரை நிறைவு பெறுகிறது.

சிந்தனைகள் 14

1.	மிக மிக நல்ல நாள்	–	இன்று
2.	மிகப்பெரிய வெகுமதி	–	மன்னிப்பு
3.	மிகவும் வேண்டாதது	–	வெறுப்பு
4.	மிகக் கொடிய நோய்	–	பேராசை
5.	மிகப் பெரிய தேவை	–	சமயோஜிதப்புத்தி
6.	மிகவும் சுலபமானது	–	குற்றம் காணல்
7.	கீழ்தரமான விஷயம்	–	பொறாமைப்படுதல்
8.	நம்பக்கூடாதது	–	வதந்திகளை
9.	ஆபத்தை விளைவிப்பது	–	அதிக பேச்சுகள்
10.	செய்யக்கூடாதது	–	உபதேசம்
11.	செய்ய வேண்டியது	–	உதவி
12.	விலக்க வேண்டியது	–	விவாதம்
13.	உயர்வுக்கு வழி	–	உழைப்புகள்
14.	நழுவவிடக் கூடாதது	–	வாய்ப்புகள்

சத்திரத்தின் திருப்பணிகள்

SP. பனையப்பன் மேலாளர், ஸ்ரீ காசிச் சத்திரம், வாரணாசி

திருக்கைலாசநாதரின் கபாலத்தில் உருவாகிவரும் கங்கா நதி தீரத்தில் பார்புகழும் பனாரஸ் எனும் காசி மாநகரில், தென்னகத்தில் செட்டிநாடு தேசத்தில் கோட்டைகள் போல வீடுகள் அமைத்து தமது ஊர்களை நகரங்களாக நிர்வகித்துவரும் நகரத்தார் பெருமக்களின் தெய்வீகப் பேரின்ப ஈடுபாட்டினால், சுமார் 200 ஆண்டுகளாக ஸ்ரீகாசி விஸ்வநாதர், ஸ்ரீ விசாலாக்ஷி, ஸ்ரீ அன்னபூரணி ஆகிய தெய்வங்களுக்கு நித்ய மூன்றுகால அபிஷேக ஆராதனைகள் நகரத்தார் பெருமக்களால் செய்துவரப்படுகின்றன.

மூன்று காலமும் அபிஷேக ஆராதனைகள் செய்ய 10 சாதுக்களால் காலம் தவறாமல் தென்னக மேள வாத்தியத்துடன் அபிஷேக ஆராதனைப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு அபிஷேக ஆராதனைகள் செய்து வரப்படுகின்றன. அவ்வாறு மூன்றுகால அபிஷேக ஆராதனைகள் தங்கியிருந்து செய்வதற்கு அழகுடனும் எழில்மிகு தோற்றத்துடனும் செட்டிநாடு வீடுகள் போலவே நகரத்தார் பெருமக்களால் அமைக்கப்பட்ட இடமே ''ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்'' ஆகும்.

சத்திரத்தில் நகரத்தார் பெருமக்களின் திருநாமத்திலேயே அருள்மிகு நகரேஸ்வரி உடனாய நகரேஸ்வரர் திருக்கோயில் அழகிய தோற்றத்துடன் அமைந்துள்ளது. மேலும், ஸ்ரீ பாதாளஈஸ்வரர், ஸ்ரீ அன்னபூரணி திருக்கோயில்களும் அமைந்துள்ளன.

சத்திரத்தில் உள்ள திருக்கோயிலில் நித்ய அபிஷேக ஆராதனைகள் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ காசி விஸ்வநாதரைத் தரிசனம் செய்யவரும் தென்னகப் பக்தர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்குச் சத்திரத்தில் குறைந்த வாடகையில் தங்க இடம் அளிக்கப்படுகின்றது.

பக்தர்களுக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீருடன் அறுசுவை உணவு குறைக்கப்பட்ட விலையில் மூன்று காலமும் வழங்கப்படுகின்றது. சத்திரத்தில் விபூதி, குங்குமம், தெய்வீகப் படங்கள், காசிக் கயிறு, திரிவேணி தீர்த்தம், அன்னபூரணி விக்ரகம், ருத்திராக்ஷ மாலைகள், நவரத்தின, ஸ்படிக மாலைகள் நியாயமான விலையில் கிடைக்கின்றன. கங்கைக் கரையில் முன்னோர்களுக்குத் தப்பணம் செய்யவும், மேலும் சிறப்புப் பூஜைகள் செய்யவும் சாஸ்திரிகள் மூலம் ஏற்பாடு செய்து தரப்படுகிறது.

காசி மாநகரில் உள்ள காலபைரவர் கோயில், இந்திய அரசாங்க முத்திரையில் உள்ள நான்கு முகசிங்கம் உள்ள சாரநாத், ராம்நகர் கோட்டை, பிர்லா கோயில், சங்கட் மோட்சன் கோயில், துளசி ராமாயணம் எழுதிய துளசிதாசர் கோயில், துர்கா கோயில், மற்றும் காசியைச் சுற்றிப் பார்க்கவும் சத்திரத்தில் வாகன ஏற்பாடுகள் குறைந்த வாடகையில் செய்து தரப்படுகின்றது.

காசியில் இருந்து 125 கி.மீ. தூரம் உள்ள அலகாபாத் திரிவேணி சங்கமம், 225 கி.மீ. தூரம் உள்ள அயோத்தி, 265 கி.மீ. தூரம் உள்ள கயா ஆகிய இடங்களைத் தரிசனம் செய்யச் சத்திரத்தில் வாகன வசதிகள் குறைந்த வாடகையில் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன.

காசியும் நகரத்தாரும்

கவிஞர் (தென்னவன்) வெ. நா. வெங்டாசலம் (எ) மாணிக்கம், M.A., வலையபட்டி

உலகம் நிலைபெற வாழ்ந்திடும் மாமலை
ஓங்கியே நிற்கும் இமயம் தன்னில்
வளர்நம சிவாய எனுமொலி கேட்க
வணங்கித் துதித்திடும் முனிவர்கள் தேவர்கள் (1)

மாமலை மேருவின் கயிலா யத்தின்
மகா தேவனை கங்கைக் கரையினில்
காசியாம் வார ணாசியில் அமைத்துத்
துள்ளிப் பாடித் துதிக்கக் காலையில் (2)

மன்னர்கள் முறைமைக்குப் பின்னோ ராக,
மாதவம் செய்த நங்கள் குலத்தார்,
நாட்டுக் கோட்டை நகரத் தார்முடி
சூட்டி மகிழ்ந்து சுகம்பல கண்டனர் (3)

மகுட தனவை சியரெனப் பட்டயம்
மாண்புறப் பெற்றனர் மன்னர்கள் வாழ்த்தினர்
மக்கள் வளம்பெற வாழ்வாங்கு வாழ்ந்தே
சிக்கெனப் பிடித்தே சிவமயம் கண்டனர் (4)

சம்போ சம்போ மகா தேவா
சாம்ப சங்கர மகா தேவா
என்னும் ஒலியை இணைத்தனர் நீற்றுச்
சின்னம் நெற்றியில் சேர்த்தே மகிழ்ந்தனர். (5)

விண்ணவர் போற்றும் விஸ்வேஸ் வரனின்
பொன்னடி போற்றிப் பூஜைகள் கண்டனர்
அலங்கார அபிஷேகம் அனுதினம் செய்திட
நிலம்வேண் டுமென்றே நினைத்தனர் பெற்றனர் (6)

இருநூறு ஆண்டுகள் கடந்தே நடந்திடும்
ஈடில்லா நகரச் சத்திரம் ஒன்றை
வானுயர் மண்டபம் வரவேற் பறையுடன்
தானுயர் மாடநன் மாளிகை சமைத்தனர் (7)

இகபர சுகம்பெற இனிதாய் விடுதியில்
நகரேஸ் வரரெனும் நமச்சிவா யத்தின்
கோயிலொன் றமைத்துக் குடமுழுக் காற்றி
ஏகன் அநேகன் இதயத்தைத் தொட்டனர் (8)

அன்னையாம்	தங்க	விசாலாட்சி	தனக்கு,	
எண்ணியே	ஆங்கோர்	கோயிலை	நம்மவர்	
விண்ணுயர்	கோபுரம்	வீதிகள்	அமைத்து	
நண்ணிய	புகழை	நாட்டின	ராங்கே	(9)
கங்கை	யமுனை	சரஸ்வதி	தன்னில்	
அங்கம்	துலக்கி,	அரனை	வணங்கி	
மதியம்	இரவுப்	பூஜைகள்	நமக்கென	
இட்டனர்,	தொட்டனர்,	இதயம்	மகிழ்ந்தனர்.	(10)
மலர்கள்	வைகலும்	வேண்டுதல்	எண்ணியே	
மாபெரும்	நந்த	வனமொன்	றமைத்து,	
நலமெலாம்	பெருகியிவ்	வையகம்	தழைக்க,	
நைவேத்	தியங்கள்	நாளும்	அனுப்பினர்	(11)
தங்கமாம்,	அன்ன	பூரணி	யாளின்	
தாள்பணிந்	தென்றும்	தமிழ்மறை	ஓதியே	
பங்கயச்	செல்வி	படியளந்	தருளும்	
இங்கிதம்	கண்டே,	இணையடி	போற்றினர்	(12)
இருநூறு	ஆண்டாய்ப்	பலப்பல	குழுக்கள்	
இறைபணித்	தொண்டை	முழுமன	துடனே,	
வருகின்ற	காற்றையும்	மழையையும்	பாராது	
வந்திருந்	திங்கே	வளமுறச்	செய்தனர்	(13)
இம்முறை	டாக்டர்	எம்.ஆர்.எம்.	தலைமையில்	
எம்மிறை	மலையாண்டி,	வலம்புரியின்	அக்ரி சொ	
தம்மை	யணுகித்	துணையாகச்	செயலாற்றும்	
செம்மைமிகு	சோமுவுடன்	ராமுமற்றும்	குழுவினரோ	(14)
நாசிக்	பஞ்சவடி	நடக்கின்ற	விழாவதனை	
பேசிக்	கலந்து	பெருமளவில்	கொண்டாடி	
வீசுபுகழ்	நகர	விடுதிக்கு	லெட்சலெட்சம்	
காசுபணம்	சேர்த்தார்கள்,	கண்ணியமும்	காத்தார்கள்	(15)
தித்திக்கும்	மிட்டாய்த்	தீபஒளித்	திருநாளில்	
எத்திக்கு	மிருந்துவரு	மெல்லா	வகுப்பார்க்கும்,	
பக்திச்	சுவையுணவும்	பரிவோடு	நல்லிடமும்	
நத்திக்	கொடுப்பதுதான்	நகரத்தார்	மரபன்றோ	(16)
பூஜைப்	பொருள்களுக்கும்	பொலிவுறு	தானியங்கிக்கும்	
ஆசையுடன்	நகரத்தார்	அள்ளிக்	கொடுத்தார்கள்	
தேசுபுகழ்	தங்க	விசாலாட்சி	திருவிடத்தைக்	
கூசுமுயர்	நற்பளிங்குக்	கோட்டமென	ஆக்கிவைத்தார்	(17)

வாகான நகரத்தார் நன்மரபின் முத்தையா,
வளமான அக்ரிசொ வந்தாலே நன்கொடைதான்
நாகாபரணம் விஸ்வ நாதருக்கு வெள்ளியிலே
ஏகாந்த மாயமைத்து இறைபருளைப் பெற்றார்கள் (18)

காசிவிஸ்வ நாதர் கதவெல்லாம் பித்தளையாய்
மாசுமறு வில்லாமல் மாற்றியதும் இக்குழுதான்
பாசமிகு காசிமக்கள் பாராட்டி நம்குலத்தைப்
பேசுவதும் ஈசன் பேரருளால் தானன்றோ (19)

ஈடில்லா நன்மதியம் இராக்கால பூஜைகளை
நாட்கோட் வருமென்று காணுதற்கும் காத்திருப்பர்
கூடுமுயர் சித்தரும் தேவரும் வானிருந்து
நாடியே நமைவாழ்த்தி நல்லருளைப் பொழிவார்கள் (20)

நகரேஸ் வரனாரின் நல்ல குடமுழுக்கின்
தகவுடைய காரியங்கள் தடையின்றிச் செய்தவர்கள்
மிகவுயர்ந்த நன்மனத்தார் மேன்மைபெறு நகரத்தார்
சிகையுடைய ஈசன் திருவருளால் வாழியவே (21)

காகமோ கரையாது, கௌளியோ பேசாது
காளைமுட்ட மாட்டாது, கருடன் பறக்காது,
வேகமிகு சுடுகாடு வீசாது, காசிநகர்
ஆகமங்கள் கூறிவரும் ஐதீகம் உண்மையன்றோ (22)

இமயமுதல் குமரிவரை ஈடிணையே இல்லாத
அமரர்களும் போற்றும் அழகுமிகு சத்திரங்கள்
அமையத் துடிப்புடனே அள்ளிப் பொருளீந்த
நமசிவாயத் துள்ளடங்கும் நகரத்தார் வாழியவே (23)

வீசுபுகழ் காசியிலே, விட்டவுயிர் நிச்சயமாய்
ஈசனடி சேருமென்று சொன்னார்கள் அந்நாளில்
பேசரிய விஸ்வேஸ் வரன்பெயரைக் காசியுடன்
நேசமுடன் நினைத்திடுவோம் நிலைபெற்று வாழ்த்திடுவோம் (24)

உழுவலன்புடையேன்

மனவளக்கலை ஓர் அறிமுகம்

அருள்நிதி மீனாட்சி சோமசுந்தரம், அரிமளம்

உலகில் பிறந்த எல்லா உயிர்களும் வாழ நினைக்கின்றன. மனிதனும் வாழ்கிறான். வாழ நினைக்கிறான். அதுவும், அவன் துன்பமில்லாத, இன்பமான வாழ்க்கையே வாழ நினைக்கிறான். ஆனால், பெரும்பகுதி துன்பத்தையே அனுபவிக்கின்றான். மனித குலத்தில் துன்பத்தை நீக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்தவர்களே சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள் ஆவார்கள். அந்த வகையில் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் ஞானி அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

வாழ்க்கை யாருடைய கையில் இருக்கிறது? வாழ்க்கை என்பது என்ன? பிறந்தோம் நாமாக விரும்பி இவ்வுலகத்தில் பிறக்கவில்லை. எனவே, பிறப்பு என்பது நம் கையில் இல்லை. இறப்பு, அது எப்பொழுது வரும்? யாருக்கும் தெரியாது. இறந்து போனவர்களும் வந்து நம்மிடையே சொன்னதில்லை. அந்த அனுபவமும நமக்குத் தெரியாது. இறப்பு என்பதும் நம் கையில் இல்லை. ஆனால், பிறப்பு, இறப்புக்கு இடைப்பட்ட நிலை – அது தான் வாழ்க்கை. அது நம் கையில தான் இருக்கிறது. ஆனால் வாழுகின்ற கலை, அதுதான் நமக்குத் தெரியவில்லை, துன்பத்திற்குக் காரணம் புரியவில்லை.

நாம் ஓரளவு வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அல்லது நல்ல வசதியான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொருள், சுற்றம் என அனைத்தும் இருக்கின்றன. ஆனால் காலை முதல் இரவு படுக்கும்வரை நமது மனம் மகிழ்ச்சியான நிலையில் இல்லை. நாம் சந்தோஷமாக இருந்தோமா என்று எண்ணிப்பார்த்தால் அதுதான் இல்லை. நமது பக்கத்து வீட்டுக்காரர் நம்மைவிடச் சிறிது வசதியாக இருந்துவிட்டால், அதைப் பொறுக்கமுடியாமல் நமது மனம் பொறாமை உணர்ச்சியில், கவலையில் வாடுகிறது. நமது குழந்தைக்கு நல்ல வேலை கிடைக்கும்பொழுது மகிழ்ச்சியடையும்மனம், மற்றவர்களுக்கு அது கிடைக்கும்பொழுது, அமைதி இழந்து தவிக்கிறது. அனைத்து வசதிகளையும் நிரம்பப் பெற்றிருந்தாலும் ஏதோ ஒன்றை நாடி அமைதி இழந்து தவிக்கின்றது மனம். அந்த அமைதியைப் பெற இறைவனை நாடுகிறது ஆனாலும், இறைவனைப் பற்றிய உண்மையான அறிவு இல்லாத காரணத்தினால், தனக்கு வேண்டியதைப் பெற இறைவனிடம் பேரம் பேசுகிறான் மனிதன் இறைவா நீ எனக்கு இந்தக் காரியத்தை நல்ல முறையில் நடத்தினால் பதிலுக்கு உனக்கு நான் காணிக்கை தருகிறேன். மொட்டை அடித்துக் கொள்கிறேன் என்று வேண்டிக்கொள்கிறான். மனிதனைப் போலவே இறைவனையும் நினைத்து விடுகிறான். காரியம் நடந்தாலும், முடிந்தவரையில் இறைவனை ஏமாற்றவே பார்க்கிறான். ஏன், அந்தக் காணிக்கையை முன்கூட்டியே இறைவனிடம் சமர்ப்பித்தால் என்ன?

யாராவது ஒருவர் இறந்துவிட்டால், அவர் சிவலோக பதவி அடைந்து விட்டார், வைகுண்ட பதவி அடைந்துவிட்டார் அல்லது இறைவனடி சேர்ந்துவிட்டார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கடிதம் எழுதுகிறோம். ஒரு நல்ல வேலை அல்லது பதவி நமக்குக் கிடைத்துவிட்டாலே மனம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது ஆனால், கிடைத்தற்கரிய, இறைவன் அடியை அடைந்ததற்கு சிவலோகத்தில் பதவி கிடைத்ததற்கு நாம் ஏன் வருத்தமடையவேண்டும்?

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்கிறது குறள், இப்படிக் காரண, காரியம் புரியாமலே, அதைத் தெரிந்து கொள்ளாமலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மதங்களின் பெயரால் குழப்பம், இறைவன் பெயரால் குழப்பம். நமக்கெல்லாம் தெரியும் மனிதன் 5 அறிவுடைய விலங்கினத்திலிருந்து வந்திருக்கிறான். டார்வின் தியரிப்படி ஓரறிவுடைய தாவரத்திலிருந்து 5 அறிவுடைய விலங்கினமாகிப் பின் 6வது அறிவு உடைய, பகுத்தறிவுடைய மனிதனாக வந்திருக்கிறான். அதற்கு முன்னதாக ஜடப்பொருட்கள் எனப்படும் பஞ்சபூதங்கள், அந்த 5 பௌதிகப் பொருட்களுக்கு முன்னாள் அணுக்கள், அணுக்களோ பரம அணுக்களின் கூட்டு, இவை அனைத்தையும் படைத்துக் காத்துக்கொண்டிருப்பவன் இறைவன். இறைவன் எல்லாவற்றிலும் இருக்கிறான். தூணிலும் இருக்கிறான். துரும்பிலும் இருக்கின்றான், நம்முள்ளும் இருக்கின்றான் என்பதை உணர்வாகப் பெற வேண்டும். பரமாத்மாவாக இருக்கின்ற அந்த இறைவன், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கின்ற அவன், நம்முள்ளே ஆத்மாவாக, ஜீவாத்மாவாக உள்ளதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்துக்கள் இந்துக்கடவுளையும், கிறித்துவர்கள் யேசுவையும், முஸ்லீம்கள் அல்லாவையும் வணங்குகிறார்கள். அப்படியென்றால், எத்தனை கடவுள்கள் இருக்கின்றனர்? கடவுள் உண்டு என்று ஆத்திகவாதிகளும், கடவுள் இல்லை என்று நாத்திகவாதிகளும் ஒரு பக்கம் விவாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆழியாரிலே, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் கேட்டார்கள் – கடவுள் ஒன்றா? பலவா? நீங்கள் அனைவரும் ஒன்று கூடி முடிவு செய்யுங்கள் என்று. இறைவனடி சேர்ந்து விட்ட சிறந்த ஆன்மீகவாதியான சுவாமி சச்சிதானந்தா அவர்கள் வேடிக்கையாகக் கூறினார்கள், கடவுள் ஒன்றுதான் பல கடவுள்கள் இருந்திருந்தால் இந்நேரம் வீட்டுக்கு வீடு ஓட்டுக்கேட்டு நம்மிடம் வந்திருப்பார்கள் என்று.

அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஒரு கவியில்,

கடவுள்தான் அனைத்தையுமே படைத்தான் என்றேன்
கண், காது மூக்கு வைத்துக்கதைகள் சொன்னேன்
கடவுள் என்று கற்சிலையை அறையில் வைத்துக்
கதவு அடைத்துப் பூட்டியும் வைத்தேன் பின்அந்தக்
கடவுளுக்குப் பசிதீர்க்கப் பால், நெய், தேங்காய்
கனிவகைகள் கற்சிலை முன்படைத்தேன் ஆனால்
கடவுள் நிலை அறிந்த போது என் செய்கையெல்லாம்
கண்டுவிட்டேன் சிறுபிள்ளை வியைாட்டாக

என்று கடவுள் நிலையை விளக்குகிறார்.

ஒரு இனிப்பைச் சுவைப்பவரே அதன் சுவையை உணரமுடியும். மற்றவர்கள் அதைக் கேட்கத்தான் முடியும். அது போல அவரவரே கடவுளை ஆத்மசொருபமாக, மனதுக்குள்ளே உணர வேண்டும். மற்றவர்களிடமும் அதே கடவுள் நிலை இருப்பதை உணர வேண்டும். சொர்க்கம், நரகம் என்பது இறந்தபின் அல்ல. அவரவர் வாழும் காலத்திலே நல்லது செய்தால் இன்பத்தையும் (சொர்க்கம்), தீமை செய்தால் துன்பத்தையும் (நரகம்) அடைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனதைப் பண்படுத்தத் தியானம், உடலைப் பேணிக்காத்திட எளியமுறை உடற்பயிற்சி, உயிர்காக்கும் சித்தர் காட்டிய காயகல்பப்பயிற்சி, குணத்தை மேம்பாடு அடையச் செய்யத் தற்சோதனைப் பயிற்சி என அனைத்தையும் மனவளக்கலை மன்றம் கற்றுக்கொடுத்து வருகிறது. பிறருக்குத் துன்பம் அளிக்காமலும், துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்தும் நாமும் மகிழ்ச்சியாக வாழலாம். மற்றவரையும் மகிழ்ச்சியுடன் வாழ வைக்கலாம்.

வாழ்க வளமுடன்

குறிப்பு : பொள்ளாச்சி அருகில் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் ஆழியாரில் இருந்து கொண்டு ஆன்மிகக் கல்வியாக மனவளக்கலையை அனைவருக்கும் பயிற்று வித்து சாமானியனையும் பிரம்மஞானியாக்கிக் கொண்டிருக்கும் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் தத்துவத்தை ஒட்டிய கருத்துக்கள் இவை.

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே

– திருமூலர்

நகரத்தார் நன்னெறியை நழுவவிடலாமா?

– பேராசிரியர் தேவநாவே –



சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட இனம் நகரத்தார் இனம். மாமன்னர்க்குப் பின்னர் கோயில் திருப்பணிகள் செய்வதையும், பசுமடங்கள் வேதபாட சாலைகள் தோற்றுவித்து நிலைபெறச் செய்வதையும், அன்னதான மடங்கள் நிறுவி அற்றார் அழிபசி தீர்த்தலையும் தம் கடமைகளாகச் செய்த தருமசீலர்கள் நிறைந்த இனம் நகரத்தார் இனம். காலத்தின் தேவைக்கேற்ப உயர் கல்வி நிறுவனங்களையும் மருத்துவமனைகளையும் நிறுவி சமுதாயப்பணி செய்த பெருமக்கள் நிறைந்த இனம் நகரத்தார் இனம். தமக்கென ஓர் ஒப்புயர்வற்ற பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள் கொண்ட பெருமைக்குரிய இனம் நகரத்தார் இனம்.

நகரத்தார் தொடக்கத்தில் நாகநாட்டில் வாழ்ந்த போதும், பின்னர் காஞ்சியில் வாழ்வைத் தொடர்ந்த போதும், காவிரிப்பூம்பட்டினத்தில் பல இன்னல்களைச் சந்தித்த போதும், பின்னர்ப் பாண்டி நாட்டில் குடியேறிச் சிறந்த போதும், தங்கள் மரபுகளை, வாழ்வின் உயிரோட்டமாக இருந்த அடிப்படை உணர்வுகளைக் கைவிடாமல் பேணி வந்தனர். பர்மாவிலிருந்து பயந்து வந்த பின்னர் பஞ்சமும் பட்டினியும் நம்மை வாட்டத் தொடங்கிய போதும் மேங்கோப்பை விற்றாவது தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவலநிலை வந்தபோதும் நிலைகுலையாமல் தங்கள் இனத்து நெறிதவறாமல் வாழ்ந்தவர்கள் நகரத்தார்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை நகரத்தார் நன்கறிந்திருந்தார்கள்.

செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனில் கூரியது இல்

என்ற வள்ளுவர் குறளை அடியொற்றித் திரைகடலோடித் திரவியம் தேடுவதில் திறமையானவர்கள் அல்லவா? இன்று நம் இளைஞர்கள், ஆடவரும் பெண்டிரும் பாராட்டத்தக்க முறையில் கல்விபயின்று வெளிநாடுகளில் பணி செய்து, பெரும் பொருளீட்டுகிறார்கள். நம் முன்னோர் செய்த அறப்பணிகள் அவர்களை வாழ வைக்கின்றன. இது நமக்குப் மன மகிழ்ச்சியை அளிக்கிறது. ஏழ்மையில் வாடிய குடும்பத்தில் ஒரு பையன் தலையெடுத்து வெளிநாட்டில் பணிபுரிந்தால் அக்குடும்பம் வளம் பெறுகிறது. பெற்றோரும் உடன் பிறந்தோரும் நலம் பெறுகிறார்கள்.

வேலை வாய்ப்பைப் பெறவும் பொருளீட்ட உதவும் வணிக நிறுவனங்களை நடத்தவும் பல்வேறு ஊர்களில் பல்வேறு நாடுகளில் வாழும் நகரத்தார் நினைவிற் கொள்ள வேண்டியவை யாவை? சற்று சிந்திப்போம்.

1. மணமாகவேண்டிய பெண்களின் எண்ணிக்கை, வாழ்க்கைத் துணையை எதிர்நோக்கியிருக்கும் பையன்களின் எண்ணிக்கையைவிடக் குறைவாக இருக்கிறது. ஆனாலும் பையனைப் பெற்றவர்களின் பேராசை குறைந்தபாடில்லை. தொகையும் நகையும் எதிர்பார்த்துத் தளர்ந்து போயிருக்கிறார்கள். தங்கள் சொந்த மனநிலை காரணமாகவோ அல்லது குடும்பத்தில் நிலவும் பணநிலை காரணமாகவோ நகரத்தார் பெண்கள் வேறினத்து இளைஞர்களுக்கு வாழ்க்கைப்படும் போக்கு அதிகரித்துள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும். தமிழகத்தில் தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுகின்ற காலம் வரை நகரத்தார் இனம் தன்னுடைய தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எனவே நம் பெண்களுக்கு நம் மரபுகளை, நம் பெருமையை இளமைக்காலந் தொட்டே உணர்த்தும் வழிவகைகளைப் பெற்றோர் கடைப்பிடிக்க வேண்டும். பையனைப் பெற்றோர் நகை தொகையைப் பெரிதாக எண்ணாமல் நல்ல பெண்ணை நாடி மருமகளாக்கிக் கொள்ள வேண்டும்.

2. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்றார் பொய்யில்புலவர். இல்லறம் நடத்துவதன் முதற்பயன் குழந்தைப் பேறு என்றால் மிகையாகாது. நமது முன்னோர்கள் திருக்கோயில்களெல்லாம் சென்று தீர்த்தமாடி வழிபட்டுத் தவமிருந்து குழந்தைகளைப் பெற்றார்கள். இன்றோ கல்யாணம் முடிந்தவுடன் கணவனும் மனைவியும் கலிபோர்னியாவுக்குப் போய்விடுகிறார்கள். கற்பமானால் வேலையைவிட வேண்டுமே என்ற கவலை; பிரசவத்திற்கு தொலைதூரம் யார் வருவார்கள் என்ற அச்ச உணர்வு; இவற்றால் குழந்தைப் பேற்றைத் தள்ளிப் போடுகிறார்கள். பொறியியல் படிப்பு முடித்துத் தக்கவரன் அமைந்து திருமணமாகும் போதே வயது இருபத்துமூன்றைத் தாண்டிவிடுகிறது. இன்னும் குழந்தைப் பேற்றைத் தள்ளிப்போடுவது என்ன நியாயம்? உள்நாட்டில் இருந்தாலும் சிலர் ஒரு குழந்தைக்கு மேல் பெறுவதில்லை என்று வைராக்கியமாக இருக்கிறார்கள். உரிய காலத்தில் பிள்ளைகளைப் பெறுவதுதான் வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஒரு இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தும், இருவருக்கும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும் என்பதை இந்தப்பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா?

3. படித்த பெண்கள் பையன்களிடையில் இறைவழிபாட்டுணர்வு குறைந்து வருவது ஒரு வருத்தத்திற்குரிய செய்தி. அறிவியல் வளர்ச்சியின் காரணமாகக் கடவுள் என்று ஒருவன் எங்கோ இருந்துகொண்டு நம்மையெல்லாம் இயக்கிக்கொண்டிருப்பது உண்மையா என்ற ஐயப்பாடு தோன்றியிருப்பது நியாயம்தான்; இது காலத்தின் கட்டாயம். கங்கையையும் திங்களையும் தலையில் சுமந்துகொண்டு முக்கண்களை உடைய திருமேனியோடு சிவபெருமான் காட்சிதருவான் என்பதையும் அவனுக்கு ஆனைமுகத்தோடு ஒரு பிள்ளை ஆறுமுகத்தோடு ஒரு பிள்ளை இருப்பார்கள் என்பதையெல்லாம் கணினியுகத்தில் இளைஞர்கள் ஏற்க மறுப்பார்கள் என்பது இயல்புதான். ஆனால் நம்மை மீறிய சக்தியொன்று எங்கும் வியாபித்திருக்கிறது என்பதை மட்டும் அவர்கள் அனுபவம் உணர்த்துமல்லவா? திருவள்ளுவரைவிடப் பெரிய ஞானி உண்டா?

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்று அவர் சொன்ன சொல்லை மறக்கலாமா?

நம் முன்னோர்கள் நெடுங்காலமாகச் சைவ சமயநெறியைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் காவியுடுத்திச் சாமியாராய்ப் போனதில்லை. பொருளீட்டினார்கள்; இனிய சுவையான உணவு உண்டார்கள்; மனைவிமக்களோடு வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். எனினும் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்கும் சமநெறிகளைத் தவறாது மேற்கொண்டார்கள். இளம் வயதிலேயே தீட்சைபெற்று, ஐந்தெழுத்து மந்திர உபதேசம் பெற்று, இடைவிடாது சைவ அநுட்டானங்களை மேற்கொண்டு இவ்வுலகில் நலமாக வாழ்ந்தார்கள். அதனால் வயதான காலத்தில் அவர்களால் அச்சமின்றி மரணத்தைக்கூட எதிர்கொள்ள முடிந்தது. இவ்வுலகைவிட்டு நீங்கும்போது அவத்தையின்றி அடங்கினார்கள். அவர்கள் தந்த செம்மைநெறியை நழுவவிட்டுவிட்டு நம் தலைமுறை தவிக்கிறதே! உடற்பயிற்சியையும், தியானத்தையும் உள்ளடக்கிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்ளாமல் விட்டுவிட்டோமே என மனம் வருந்துகிறது. நமக்காகத்தான் பட்டினத்தடிகள்.

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே!

என்று வேண்டுகிறார்.

அமெரிக்காவில் வாழ்ந்தாலும், கனடாவில் குடியிருந்தாலும், இலண்டனில் வசித்தாலும்

சென்னையிலோ பெங்களூரிலோ தொழிலில் கொடிகட்டிப் பறந்தாலும், வீட்டில் கோலமிட வேண்டும். சாமிபடங்களுக்கு மலர் சாத்தி வழிபட வேண்டும், விளக்கேற்ற வேண்டும். தேவார திருவாகப் பாடல்கள் ஒன்றிரண்டேனும் ஓத வேண்டும்,. மூன்று விரல்களால் நெற்றி நிறையத் திருநீறு அணிய வேண்டும் என்கிற நல்ல பழக்கங்களை மங்கலச் செயல்களை இடைவிடாது நம் பிள்ளைகள் பின்பற்றினால் மகிழ்ச்சியோடு வாழலாம். மனநோய் மருத்துவமனைக்குப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகாது. இறைவழிபாடு ஒன்றுதான் வாழ்வில் இன்பதுன்பங்களைச் சமமாகப் பாவிக்கும் உணர்வைத் தரும். இவற்றை இளைஞர்கட்குப் புரியவைப்பது எப்படி ?

4. நகரத்தார் சமூகம் திருமணத்தைப் புனிதமானதாகக் கருதியது. மனம் ஒன்றினாலும் ஒன்றாவிட்டாலும், மகிழ்ச்சி நிறைந்தாலும் குறைந்தாலும், மணமுறிவு ஏற்படாமல் வாழ்ந்தார்கள். குறையில்லாத குடும்பம் ஏது ? முழு மனநிறைவோடு வாழ்ந்தவர்கள் ஆயிரத்தில் ஒருவராகத் தான் இருந்திருக்கமுடியும். அறுபது முதல் எழுபது சதவீத மகிழ்ச்சியோடு வாழ்ந்தவர்கள்தான் அதிகம் நம் முன்னோர் சமூகக் கட்டுப்பாட்டுக்கு மதிப்பளித்துப் பெரியவர்கள் சொற்களுக்குச் செவிசாய்த்துப் பொறுமையாய் விட்டுக்கொடுத்து வாழ்ந்ததால் நிறைவான வாழ்க்கையைப் பெற்றார்கள். ஆனால் இன்றோ அதிக எதிர்பார்ப்புடன் திருமணங்களைச் செய்து கொண்டு சிறிய ஏமாற்றங்களையும் தாங்கிக் கொள்ளமுடியாமல் தவிக்கிறார்கள். திருமணமானவுடன் குழந்தை பெற்றுக்கொண்டால் ஒரு பாலம், ஒரு வலுவான இணைப்பு, தம்பதிகளுக்கிடையே தோன்றிவிடும். அதையும் தள்ளிப்போட்டு அல்லற்படுகிறார்கள். ஆணும் பெண்ணும் தங்கள் தங்கள் விருப்பம்போல் மற்றவர் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இருவரும் பொருள் சேர்ப்பதால் ஒருவரை மற்றவர் சார்ந்துவாழ வேண்டும் என்ற தேவையும் இல்லாமல் போய்விட்டது. எனவே மணமுறிவுகள் மிகச் சாதாரணமாக நடந்தேறிவிடுகின்றன. இதன் விளைவாக இருவரும் அடையும் மனவேதனை சொல்லிமாளாது. முன்னோர் போற்றிய பொறுமை நெறியை இந்நாள் இளைஞர் கைக்கொள்வது எப்போது ? எப்படி ?

5. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்

என்றார் திருவள்ளுவர். சுற்றத்தாரைத் தழுவி வாழும் வாழ்க்கைதான் ஆக்கம் தரும் வாழ்க்கை என அறிந்திருந்தவர் நகரத்தார். மணவினை நிகழ வேண்டுமானால் இருபக்கமும் மாமக்காரர் வரவேண்டும். அத்தை விளக்கு வைக்க அப்பத்தாள் ஆரத்தி எடுத்துத் திருநீறு பூசினால்தான் மாப்பிள்ளை அடியெடுத்து வைக்கமுடியும். நாத்தனாரோ சடங்குக்காரி; நல்ல ஆயாள் பால்பழம் தர வேண்டும். இப்படி எல்லோரையும் இணைக்கும் நடைமுறைகள் இருந்தன நம் குலத்தில். செட்டியார் இறந்துபோனால் வாய்க்கரிசி போட வேண்டும். உலக்கையெடுத்து நெல்குத்த மூத்தமகள் வர வேண்டும் ஆத்தாள் வீட்டிற்கு. பாய்சுற்ற இளையமகள்,

குளிப்பாட்டப் பங்காளி, அரிசிக்குப் பணம் வைக்கச் சம்பந்தம் செய்தவர்கள். இவ்வாறு யாவரையும் கூட்டுவிக்கும் சடங்குகளைப் பேணிவந்தார், நகரத்தார். இன்றைக்கு நிலைமை என்ன? ஒன்றுபட்ட வாழ்வெங்கே? யாருக்குத் தெரிகிறது சடங்குகளின் தாத்பரியம்? உறவெல்லாம் நம்மோடு உறவாடிவாழும்படி ஒற்றுமையைக் காத்திட வேண்டாமா?

திரைகடல் ஓடியும் திரவியம் தேடுதல்
இன்பம் நிறைக்கும் இல்லறம் பேணுதல்
அறிவறிந்த மக்களைப் பெற்று வளர்த்தல்
அளவோடு சமயநெறிகளைப் பேணுதல்
உறவோடு உளம்மகிழ்ந்து கூடிவாழுதல்
இயன்ற தருமம் எழிலுறச் செய்தல்
அஞ்செழுத் தோதுதல் அரன்கழல்தொழுதல்
இருக்கும்போதே இறையின்பம் துய்த்தல்

என்னும் நகரத்தார் நன்னெறியை நழுவவிடலாமோ?

கந்தன் என் காதலன்

– கவிஞர் **அழ. அண்ணாமலை** ஆ. முத்துப்பட்டினம்

பண்வடிக்கும் தொழிலைப்
பலகாலம் செய்பவன்நான்
கண்ணடிக்கும் வேலையினைக்
கதிர்வேலன் தந்துள்ளான்

இருதாரம் இருந்தாலும்
இனியொரு தாரமென
அரிதாரம் பூசுகிறேன்
அவதாரம் என்தலைவன்

அன்னை வயதிருக்கும்
அரைநூறைத் தாண்டியவன்
சின்னஞ் சிறுசாக்கிச்
சேட்டையினைப் பாடென்றார்

கூட்டத்தைப் பார்த்தால்தான்
குரலுக்குப் போதைவரும்
ஆட்டத்தில் சேர்ந்தால்தான்
அவரவர்க்குப் போதைவரும்

உண்டால்தான் போதைதரும்
உண்மையிலே மதுவகைகள்
கண்டாலே போதைதரும்
காரிகையின் விழிமலர்கள்

மைவேலை செய்துவரும்
மைனரென வரவில்லை
கைவேல் முருகனவன்
காதலியாய் வந்துள்ளேன்

அண்ணா மலையான்நான்
ஆன்றோரின் முன்னாலே
உண்ணா மலையானேன்
உறவைத் தொடர்கின்றேன்

சேலை அணியவிலை
செவ்விதழில் சாயமிலை
கோல விழியுமில்லை
குங்குமத்தால் பொட்டுமிலை

இந்நிலையில் பெண்ணானேன்
என்ன திகைக்கின்றீர்
உந்தும் நினைவலைகள்
உள்ளத்தில் தானெழுந்து

சின்னவளின் கைப்பிடித்துச்
சேர்த்தணைக்கச் சொன்னதுவோ
சொன்னதென்றால் ஏமாந்தீர்
சொல்லிடுவேன் உண்மையினை

மெய்யாலே ஆணென்றும்
மனத்தாலே பெண்ணென்றும்
உய்யவழி நல்கும்
உமையொரு பாகனென

நிற்கின்றேன் பொய்யில்லை
நெஞ்சில் தமிழுணர்வைப்
பெற்ற பெருமிதத்தால்
பெரும்பொருளைப் பாடுகிறேன்

கொஞ்சும் குமரியெலாம்
கொண்டாடும் சீர்முறையால்
அஞ்சும் குமரிகளாய்
அல்லல் படுகின்றார்

தாலி கழுத்தேறத்
தாய்நாட்டு இளைஞரெலாம்
கூலிமிகக் கேட்பதனால்
குமரனைநான் காதலித்தேன்

கூலியினைக் குறைத்தால்தான்
குறிஞ்சிமலர் பூப்பூக்கும்
வேலியினைத் தாண்டாமல்
வெள்ளாடு குலங்காக்கும்

என்னை மறந்தேன்
இனிமேலும் தாமதமேன்?
சின்னக் குயிலோசை
செவியில் விழுகிறதா?

பால்மாறி வந்தாலும்
பழனியப்பன் காதலிநான்
ஆள்மாறி வந்தாலும்
ஆண்டியப்பன் காதலிநான்

விடைமீது என்மாமன்
விளையாடும் என்அன்பர்
சடைமீது கங்கை
சரிபாதி என்மாமி

நல்ல குடும்பத்தின்
நாயகியாய்ச் செல்வதற்கே
வல்ல தமிழ்முருகை
வளரன்பால் காதலித்தேன்

காமன் பொடியாகக்
கண்நுதலான் தனிவீரம்
மாமன் சிவனாண்டி
மருமகனாய் மனைசெல்வேன்

முறைச்சிட்டை எழுதாமல்
முறைப்பணமும் கேட்காமல்
குறையேதும் சொல்லாமல்
குலவிளக்காய் எனைஏற்பார்

மாமி இடும் சண்டை
மாநிலத்தில் பெருகுவதால்
சாமி குடும்பத்துச்
சம்பந்தம் வேண்டுகிறேன்

மெத்தச் சுகம்கிடைக்க
மேலான வாழ்வுபெற
அத்தை மலையரசி
ஆத்தாளாய் எனைக்காப்பாள்

ஆத்தி எனவலற
அண்ணமுண்டி ஓடோட
நாத்தி எனக்கில்லை
நாறுகிற சண்டையிலை

பாத்தி அமைத்திங்கே
பருவப்பயிர் வளர்க்கின்றேன்
கொழுந்தன் விநாயகரோ
கொழுக்கட்டைப் பிரியரவர்

விழுந்தாலும் எழுந்தாலும்
வினைதீர்க்கும் கடவுளவர்
அஞ்சாறு கொழுக்கட்டை
ஐங்கரனார் போதுமென்பார்

எஞ்சியுள்ள சொத்தெல்லாம்
இளவரசைச் சேராதா?
முடியுடையார் மணமுடிக்க
முன்பணங்கள் கேட்கின்றார்

மொட்டைத் தலையானே!
முகூர்த்தத்தைப் பார்ப்போமா?
மொட்டைத் தலையென்று
முருகனைநான் பழித்தாலும்

கட்டையிலே வேகுமட்டும்
கந்தனையே காதலிப்பேன்
உன்னை நினைத்தே
உறக்கத்தில் உளறுகிறேன்

கனவில் வருகின்றாய்
கண்ணாமூச்சி ஆடுகிறாய்
கண்பொத்தி விளையாடக்
கையிரண்டு போதவில்லை

பெண்புத்தி பின்புத்தி
பெருஞ்சத்தி உன்சக்தி
வெடிக்கும் அடுப்புக்கு
வேலையில்லை என்பதனால்

படியளக்கும் முருகனைநான்
பல்லாண்டாய்க் காதலித்தேன்
உன்னைத்தான் காதலித்தேன்
உனக்காக வாழுகிறேன்

எனக்கும்ஒரு வாழ்வுகொடு
இல்லறத்தில் பங்குகொடு
போலி மனிதரிடை
புண்ணியவான் நீகட்டும்

தாலிக் கயிறுக்கே
தவமாய்த் தவமிருந்தேன்
வள்ளி மயிலுக்கு
வாழ்வு கொடுத்தவனே!

புள்ளி மயிலுக்குப்
புதுவாழ்வு தருவாயா?
ஏரகத்தில் இருப்பவனே?
ஈவிரக்கம் உனக்கிலையா

தாரகத்தைச் சொன்னவனே
தலையணையைக் கற்போமா?
ஆறு முகமிருந்தும்
பாரா முகம்தானா?

வேறு முகமென்றா
விளையாடிப் பார்க்கின்றாய்?
ஓமென்று சொன்னவனே!
உட்பொருளைத் தந்தவனே!

ஆமென்றால் ஆகாதா
ஐப்பசியில் நாள்பார்ப்போம்
பெண்வந்து கேட்கின்றேன்
பேரிரக்கம் உனக்கிலையா?

முன்வந்து பதிலுரைத்தால்
முத்தா உதிர்ந்துவிடும்?
ஊமைத் துரையா?
உனைநான் விடமாட்டேன்

சீமைக்குப் போனாலும்
செட்டிமகள் பின்தொடர்வேன்
இத்தனைக்கும் பின்னாலே
எழில்முருகன் எனைப்பார்த்தான்

அத்தனைக்கும் பின்னாலே
அருகில் எனையழைத்தான்
"சக்களத்தி இருவருண்டு
சண்டைக்குப் பஞ்சமிலை

மனையாட்டி இருவருண்டு
மறுபடியும் திருமணமா?"
"ஒருதாரம் இருக்கையிலே
மறுதாரம் பெற்றவனே

இருதாரம் இருக்கையிலே
இனித்தாரம் ஆகாதா?"
ஒன்று இரண்டானால்
ஒன்றும் தவறில்லை

இரண்டு மூன்றானால்
எவ்வாறு தவறாகும்?
தெய்வானை வள்ளி
திருத்தாலி ஆனவனே

பெண்மானைக் காதலித்தல்
பெருமானுக் கழகிலையா?
வள்ளியொடு தெய்வானை
வாகனத்தில் இடமிலையா?

உள்ளத்தில் இடம் தருக
உயர்மாலை எனக்கருள்க
சிவனுக்கோ இருதாரம்
சிங்கார வேலன்நீ

அவன்மைந்தன் பத்தாறு
அடிபாய்ந்தால் ஆகாதா?
வம்சம் வளர்ந்தோங்க
வாரிசொன்று வேண்டாமா?

என்னை மணந்துகொண்டால்
ஈன்றெடுக்க மாட்டேனா?
"எவ்வுயிரும் நானேதான்
எல்லோரும் பிள்ளைகள்தான்

அவ்வளவில் கண்திறந்தேன்
ஆறுமுகம் அங்கில்லை
கண்திறந்து நான்பார்த்தேன்
கதிர்வேலன் அங்கில்லை

கண்ணீர் பெருகியதே!
கவிதை உருவாகியதே!



நகரச்சத்திரத்திலிருந்து திருக்கோவிலுக்கு நாள்தோறும் கொண்டு செல்லப்பெறும் பூஜைப் பொருட்களின் விபரம்

ஸ்ரீ காசி விஸ்வநாதர் - அதிகாலை 3 மணி

மங்கள ஆர்த்தி - நைவேத்திய பொருட்கள்

1.	தேங்காய்	1	
2.	வாழைப்பழம்	6	
3.	ஆப்பிள்/மாம்பழம்	1 டஜன் 6+6 = 2பாக்கட்	
4.	வெற்றிலை பட்டியல்	3	
5.	ஊதுபத்தி	6	
6.	அத்தர்	1 பாட்டில்	
7.	கற்பூரம்	50gm	பேப்பர் மடித்து 2 பொட்டலம்
8.	மஞ்சள் குங்குமடம்	25gm	பேப்பர் மடித்து 2 பொட்டலம்
9.	ஸ்வீட் பாக்கட்	250gm	பாக்கட் மடித்து 1 பொட்டலம்
10.	குண்டு மிட்டாய்	50gm	
11.	டைமன் கல்கண்டு	200gm	
12.	(டிரை புருட்ஸ்) உலர் பழங்கள்	250gm	முந்திரி பருப்பு 60gm கிஸ்மஸ் 60gm பாதம் 60gm
13.	அருகம்புல்	1 கட்டு	

ஸ்ரீ காசி விஸ்வநாதர் - அதிகாலை 3 மணி

மங்களார்த்தி பூஜை - வெள்ளிப் பாத்திரங்கள்

1.	விபூதி	250 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
2.	நாட்டு சர்க்கரை	200 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
3.	தயிர்	250 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
4.	பஞ்சாமிர்தம்	250 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
5.	சந்தனம்	250 கிராம்	பெரிய வெள்ளி டம்ளர்
6.	செண்ட்		பஞ்சில் நனைத்து
7.	நெல்லிக்காய் தைலம்	50 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
8.	பன்னீர்	80 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
9.	தேன்	100 கிராம்	பெரிய வெள்ளிக் கிண்ணம்
10.	நெய்	25 கிராம்	சிறிய வெள்ளிக் கிண்ணம்
11.	அரிசி	40 கிராம்	சிறிய வெள்ளிக் கிண்ணம்
12.	நெய்	20 கிராம்	சிறிய பித்தளை கிண்ணம்
13.	அரிசி	20 கிராம்	சிறிய பித்தளை கிண்ணம்
14.	நெய் (தீபத்திற்காக)	100 கிராம்	சிறிய எவர்சில்வர் டப்பா
15.	பால் செம்பு	2	வெள்ளி
16.	பசும்பால்	5 லிட்டர்	எவர்சில்வர் தூக்கு
17.	பூமாலை	25 No	

ஸ்ரீ காசி விசாலாட்சி கோயில்

உச்சிகால அபிஷேகம்

1.	தேங்காய்	1
2.	வாழைப்பழம்	2
3.	வெற்றிலை பட்டியல்	1
4.	ஊதுபத்தி	4
5.	பூ மாலை	1
6.	குங்குமம்	30gm
7.	கற்பூரம்	25gm
8.	தயிர்	200gm
9.	பஞ்சாமிர்தம்	300gm
10.	நல்ல எண்ணெய்	250gm
11.	பன்னீர்	50gm
12.	நெல்லிக்காய் தைலம்	50gm
13.	நாட்டு சர்கரை	50gm
14.	நெய்	25gm
15.	அரிசி	25gm
16.	தேன்	
17.	சந்தனம்	
18.	பசும்பால்	1 லிட்

ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில்

காலை பூஜை முற்பகல் 11-00 மணி

1.	விபூதி	250 கிராம்	பெரிய வெண்கலக் கிண்ணம்
2.	நாட்டு சர்கரை	250 கிராம்	பெரிய வெண்கலக் கிண்ணம்
3.	தயிர்	250 கிராம்	பெரிய வெண்கலக் கிண்ணம்
4.	பஞ்சாமிர்தம்	450 கிராம்	பெரிய பித்தளைக் கிண்ணம்
5.	பழரசம்	சாத்துக்குடி / ஆரஞ்சு	சிறிய பித்தளைக் கிண்ணம்
6.	சந்தனம்	350 கிராம்	பெரிய பித்தளை டம்ளர் (+ பஞ்சை செண்டில் நனைத்து)
7.	நெல்லிக்காய் தைலம்	50 கிராம்	சிறு பித்தளை பானை செம்பு
8.	பன்னீர்	50 கிராம்	சிறு பித்தளை பானை செம்பு
9.	நெய்	20 கிராம்	சிறு பித்தளைக் கிண்ணம்
10.	அரிசி	20 கிராம்	சிறு பித்தளைக் கிண்ணம்
11.	தேன்		சிறு எவர்சில்வர் கிண்ணம்
12.	கற்பூரம்	40 கிராம்	பித்தளைக் கிண்ணம்
13.	மஞ்சள் குங்குமம்	30 கிராம்	பேப்பரில் மடித்து
14.	ஊதுபத்தி	4 No	
15.	டர்க்கி டவல்	2 No	

16.	அருகம்புல்	1 கட்டு	
17.	திரி	1 No	
18.	பூணூல்	1 No	
19.	அரிசி	2gm	
20.	மிளகு	30gm	பித்தளை பாத்திரம்
21.	சீரகம்	30gm	
22.	பூ மாலை	18 No	கூடையில்
23.	பசும்பால்	10 லிட்	பித்தளைக் குடம்
24.	கமண்டலம்	2 No	
25.	7 முக சூட தீபத்தாம்பாளம்		1 No
26.	1 முக நெய் தீப விளக்கு		1
27.	தூபக்கால்		1
28.	மணி		1
29.	மணி வைப்பதற்குத் தாம்பாளம்		1

ஸ்ரீ காசி விஸ்வநாதர்

சிருங்கார் ஆர்த்தி இரவு 09-00 மணி

1.	வி பூதி	250 கிராம்	பெரிய கிண்ணம் 1
2.	நாட்டு சர்க்கரை	250 கிராம்	பெரிய கிண்ணம் 1
3.	தயிர்	250 கிராம்	பெரிய கிண்ணம் 1
4.	பஞ்சாமிர்தம்	450 கிராம்	பெரிய கிண்ணம் 1
5.	பழரசம்		
	சாத்துக்குடி / ஆரஞ்சு		சிறிய கிண்ணம் 1
6.	சந்தனம்	350 கிராம்	பெரிய டம்ளர்
7.	நெல்லிக்காய் தைலம்	50 கிராம்	சிறு கிண்ணம்
8.	பன்னீர்	50 கிராம்	சிறு கிண்ணம்
9.	நெய்	20 கிராம்	சிறு கிண்ணம்
10.	அரிசி	20 கிராம்	சிறு கிண்ணம்
11.	தேன்		சிறு கிண்ணம்
12.	கற்பூரம்	40 கிராம்	சிறு கிண்ணம்
13	கற்பூரம்	40 கிராம்	பேப்பரில் மடித்து 2 பொட்டலம்
14.	மஞ்சள் குங்குமம்	30 கிராம்	பேப்பரில் மடித்து 1 பொட்டலம்
15.	ஊதுபத்தி	4 No	
16.	அத்தர்	1	சிறுபாட்டில்
17.	செண்ட்		பஞ்சில் நனைத்து

18.	குண்டுமிட்டாய்	50gm	
19.	டைமன் கல்கண்டு	100gm	
20.	உலர் பழங்கள்	150gm	முந்திரி40g, கிஸ்மிஸ்40g, பாதாம்20g, பிஸ்தா20g, சாரா30g
21.	ஆப்பிள் / மாம்பழம்	1 6 + 6 = 2 பாக்கட்	
22.	டர்க்கி துண்டு	2 No	
23.	பட்டு	2 No	
24.	பூ மாலை	30 No	
25.	பசும் பால்	10 லிட்	பித்தளைக்குடம்
26.	அருகம்புல்	1 கட்டு	

ஸ்ரீ காசி அன்னபூரணி கோயில்

காலை 3-00 மணி

1.	வீபூதி	250 கிராம்	1 பெரிய வெண்கலக் கிண்ணம்
2.	நாட்டு சர்கரை	250 கிராம்	1 பெரிய வெண்கலக் கிண்ணம்
3.	தயிர்	250 கிராம்	1 பெரிய எவர்சில்வர் கிண்ணம்
4.	பஞ்சாமிர்தம்	300 கிராம்	1 பெரிய எவர்சில்வர் கிண்ணம்
5.	நெல்லிக்காய் தைலம்	50 கிராம்	1 சிறு பித்தளைப் பாத்திரம்
6.	பன்னீர்	50 கிராம்	1 சிறு பித்தளைப் பாத்திரம்
7.	நல்ல எண்ணெய்	100 கிராம்	1 சிறு பித்தளைப் பாத்திரம்
8.	தேன்	25 கிராம்	1 சிறு பித்தளைப் டம்ளர்
9.	அரிசி	20 கிராம்	1 சிறு பித்தளைக் கிண்ணம்
10.	குங்குமம்	10 கிராம்	1 சிறு பித்தளைக் கிண்ணம்
11.	சந்தனம்	200 கிராம்	1 பெரிய பித்தளைக் கிண்ணம்
12.	கற்பூரம்	30 கிராம்	பேப்பரில் மடித்து
13.	ஊதுபத்தி	4 No	
14.	பூ மாலை	1 No	
15.	பால்	1 லிட்	1 வெண்கலச் செம்பு

உ

சிவமயம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

காரைக்குடி

பொதுக்குழு உறுப்பினர்கள் 2004 – 2007

கீழவட்டகை

1.	திரு. கரு.மு. சாத்தப்பன்	பிள்ளையார்பட்டி
2.	திரு. சொ.மெ.பள.சுப.மு.கா. சோமசுந்தரம்	தேவகோட்டை
3.	திரு. இளை. சுப்பையா	தேவகோட்டை
4.	திரு. KM.KR.AR. தியாகராஜன்	தேவகோட்டை
5.	திரு. சோம.ராம. சோமசுந்தரம்	தேவகோட்டை
6.	திரு. அ.வீர.அ.செ.வெங்கடாசலம்	தேவகோட்டை
7.	திரு. PL. கண்ணப்பன்	தேவகோட்டை
8.	திரு. அள.அரு.சோம.நாராயணன் செட்டியார்	தேவகோட்டை
9.	திரு. லெ.மு.மு. முத்துமாணிக்கம்	தேவகோட்டை
10.	திரு. நா. பஞ்சநதம்	தேவகோட்டை
11.	திரு. MR. சுப்பிரமணியன்	தேவகோட்டை
12.	திரு. வெ.தெ.அ.சோம. அண்ணாமலை	தேவகோட்டை
13.	திரு. SML. வெள்ளையன்	தேவகோட்டை
14.	திரு. முவீ. அருணாசலம் (செம்பொன்)	தேவகோட்டை
15.	திரு. ஆத.வெ.சுப. சிதம்பரஞ்செட்டியார்	தேவகோட்டை
16.	திரு. உ.ராம.மெ.சு.மெ.சேவு.அரு. சோமசுந்தரம்	தேவகோட்டை
17.	திரு. S. காசி	தேவகோட்டை
18.	திரு. பழ.சுப.நாக. பழனியப்பன்	தேவகோட்டை
19.	திரு. சொ.சித.ச. செல்லப்பன்	தேவகோட்டை
20.	திரு. சேவு.லெ.சேவு. சின்னவடிவேல் செட்டியார்	தேவகோட்டை
21.	திரு. முத்து.க.அ. ராமநாதன்	தேவகோட்டை
22.	திரு. சி.நா.வயி.நா.வ. நாச்சியப்பன் (எ) பஞ்சு	தேவகோட்டை
23.	திரு. கவிஞர் வெ. பழநியப்பன்	தேவகோட்டை
24.	திரு. வீர. சின்ன அருணாசலம்	தேவகோட்டை
25.	திரு. கா.பா.வெ.நா.வெ.நா. வெங்கடாலம்	தேவகோட்டை
26.	திரு. SPM. முத்துக்கருப்பன் செட்டியார்	ஆறாவயல்
27.	திரு. தெ.பெ.நா. பெத்தாச்சி	ஆறாவயல்

28.	திரு. மு.ராம.ராம. ராமனாதன் (சேது)	ஆறாவயல்
29.	திரு. சி.மெ.லெ.ராம. லெட்சுமணன்	ஆறாவயல்
30.	திரு. பழ.கரு. சுந்தரேசன்	கல்லுப்பட்டி
31.	திரு. நா.அ.மெ.நா. மெய்யப்பன்	கல்லுப்பட்டி
32.	திரு. பழ. கருப்பன் செட்டியார்	கல்லுப்பட்டி
33.	திரு. சுகு. ம.பழ. பழனியப்பன்	காரைக்குடி
34.	திரு. M.RM.S.PR. சொக்கலிங்கம் PRC	காரைக்குடி
35.	திரு. சா.லெ.நா.சா.விஸ்வநாதன்	காரைக்குடி
36.	திரு. அரு.நா.நா. நாராயணன்	காரைக்குடி
37.	திரு. அழ.இராம.கரு. முத்தய்யா	காரைக்குடி
38.	திரு. சிவ.மெ.சித.நா.கி.நா. கண்ணன்	காரைக்குடி
39.	திரு. ராம.தெ. முத்துக்கருப்பன்	காரைக்குடி
40.	திரு. முரு.நா.முரு. மெய்யப்ப செட்டியார்	காரைக்குடி
41.	திரு. நா. மெய்யப்பன்	காரைக்குடி
42.	திரு. சி.முரு.நா. ராமசாமி செட்டியார்	காரைக்குடி
43.	திரு. ஆத.ராம.சு.ராம.வீர. ராமநாதன்	காரைக்குடி
44.	திரு. வ.ராம.வீர.ராம ராமசாமி செட்டியார்	காரைக்குடி
45.	திரு. நா.மெ.மெ.கீ.சேவு. மெய்யப்பன்	காரைக்குடி
46.	திரு. ப.மு.சித. சிதம்பரம்	காரைக்குடி
47.	திரு. சித.நா.ராம. நாராயணன்	காரைக்குடி
48.	திரு. AL.S. அழகப்ப செட்டியார்	காரைக்குடி
49.	திரு. நா.சித.ராம.அழ. மகாதேவன் செட்டியார்	காரைக்குடி
50.	திரு. க.தெ.க.அள.அ. திருநாவுக்கரசு	காரைக்குடி
51.	திரு. தெ.மு. இராமசாமி	காரைக்குடி
52.	திரு. பெரி.நா.நா. சுதேவ நாச்சியப்பன்	காரைக்குடி
53.	திரு. க.அ.ப.அ. பழனியப்பன்	காரைக்குடி
54.	திரு. பெ.மு.அ.ராம.மு.ராம. முத்தையா	கோட்டையூர்
55.	திரு. Dr. MR. முத்தையா	கோட்டையூர்
56.	திரு. மெ.கி.சித. மெய்யப்பன்	கோட்டையூர்
57.	திரு. L. PV. வீரப்பன்	கோட்டையூர்
58.	திரு. K.PM.RM. பழனியப்பன்	கோட்டையூர்
59.	திரு. ஆர். சொக்கலிங்கம்	பள்ளத்தூர்
60.	திரு. AN. விஸ்வநாதன்	பள்ளத்தூார்
61.	திரு. மு.வயி. சுப. வயிரவன்	பள்ளத்தூார்
62.	திரு. கதி.சோ. பழநியப்பன்	பள்ளத்தூார்
63.	திரு. மெ.சொ.மெ. மெய்யப்பன்	பள்ளத்தூார்
64.	திரு. அரு.வ. வள்ளியப்ப செட்டியார்	பள்ளத்தூார்

65.	திரு. VR. முருகப்பன்	பள்ளத்தூர்
66.	திரு. RM. N. கருப்பையா	கானாடுகாத்தான்
67.	திரு. KM. நாராயணன்	கானாடுகாத்தான்
68.	திரு. RM. அண்ணாமலை	கானாடுகாத்தான்
69.	திரு. A. சந்திரமௌலி	கானாடுகாத்தான்
70.	திரு. SV. சிதம்பரம்	நேமத்தான்பட்டி
71.	திரு. S.RM.S. குட்டையன் செட்டியார்	நேமத்தான்பட்டி
72.	திரு. அரு. சுப்பிரமணியன் செட்டியார்	நேமத்தான்பட்டி
73.	திரு. RM.AR. காளைராஜா	கொ.லெட்சுமிபுரம்
74.	திரு. CT. நடராஜன்	கொ.லெட்சுமிபுரம்
75.	திரு. M. ராமநாதன்	கொத்தமங்கலம்
76.	திரு. சி.அரு. சின்னக்கருப்பன்	கொத்தமங்கலம்
77.	திரு. M. SP. அருணாசலம் செட்டியார்	கொத்தமங்கலம்
78.	திரு. மு. தெய்வராயன்	கடியாபட்டி
79.	திரு. தீ.சொ.கி.மு.கிருஷ்ணன் செட்டியார்	கடியாபட்டி
80.	திரு. அழ.ந. இரத்தினம்	கடியாபட்டி
81.	திரு. பெரி. குமரப்பன்	கடியாபட்டி
82.	திரு. சித. சோலையப்பன்	கடியாபட்டி
83.	திரு. PL. சிதம்பரம்	ராயவரம்
84.	திரு. நா.ந. வயிரவன் செட்டியார்	ராயவரம்
85.	திரு. அ.முரு. கதிரேசன் செட்டியார்	ராயவரம்
86.	திரு. சு.அழ. அழகப்பசெட்டியார்	ராயவரம்
87.	திரு. அரு.பெரி.அண. பெரியணன்	ராயவரம்
88.	திரு. ப.ராம. பழனியப்பன்	அரிமளம்
89.	திரு. அரு. முத்துராமன்	அரிமளம்
90.	திரு. KT.S. வள்ளியப்ப செட்டியார்	அரிமளம்
91.	திரு. A. அண்ணாமலை	அரிமளம்
92.	திரு. AN. சோமசுந்தரம்	அரிமளம்
93.	திரு. செ.லெ. முத்து செல்லப்ப செட்டியார்	அரிமளம்
94.	திரு. கா. திருநாவுக்கரசு	கோனாபட்டு
95.	திரு. பவ.பழ. பழநியப்பன்	கோனாபட்டு
96.	திரு. மெ.அ. அழகப்பன்	கோனாபட்டு
97.	திரு. நா. இளங்கோவன்	கோனாபட்டு
98.	திரு. மு. சுப்பிரமணியன்	கோனாபட்டு
99.	திரு. RM. சொக்கலிங்கம்	ஆ. முத்துப்பட்டணம்
100.	திரு. S. நாச்சியப்பன்	ஆ. முத்துப்பட்டணம்
101.	திரு. நா.சொ.நா. சிதம்பரம்	ஆ. முத்துப்பட்டணம்

102.	திரு.	கா. சந்திரசேகரன்	ஆத்தங்குடி
103.	திரு.	நா. நாரயணன்	ஆத்தங்குடி
104.	திரு.	சோம. திருநாவுக்கரசு	ஆத்தங்குடி
105.	திரு.	சுப. முத்து	ஆத்தங்குடி
106.	திரு.	ராம. சோலைமலை	பலவான்குடி
107.	திரு.	கும. வள்ளியப்ப செட்டியார்	பலவான்குடி
108.	திரு.	பழ. சங்கரநாரயணன்	பலவான்குடி
109.	திரு.	பழ.சு.ராம.சு. இராமநாதன்	ஒ. சிறுவயல்
110.	திரு.	வ.அழ.நா. மீனாட்சி சுந்தரம்	ஒ. சிறுவயல்
111.	திரு.	கரு.வெ.வெ.சே.சுப. சேவியப்பன்	ஒ. சிறுவயல்
112.	திரு.	பெரி. பெரிச்சியப்பன் (எ) சேது	ஒ. சிறுவயல்
113.	திரு.	சு.கரு. பழநியப்ப செட்டியார்	சொக்கலிங்கம் புதூார்
114.	திரு.	மு. வீரப்பன்	சொக்கலிங்கம் புதூார்
115.	திரு.	சித.நா.சுப. நாச்சியப்பன்	கோ.அழகாபுரி
116.	திரு.	அழ.ராம. அழகப்பன்	கோ.அழகாபுரி
117.	திரு.	சுப. சண்முகம்	கண்டனூார்
118.	திரு.	அன்பு. நா. சிதம்பரம்	கண்டனூார்
119.	திரு.	அழ.வீர.அழ. வீரப்பன்	கண்டனூார்
120.	திரு.	PR. அருணாசலம்	கண்டனூார்
121.	திரு.	ராம.மு.ராமநாதன்	புதுவயல்
122.	திரு.	அ. குப்பான் செட்டி	புதுவயல்
123.	திரு.	சொ. சிதம்பரம்	புதுவயல்
124.	திரு.	வீர.சா. மெய்யப்பன் (அட்வகேட்)	புதுவயல்
125.	திரு.	சோ. மீனாட்சி சுந்தரம்	புதுவயல்
126.	திரு.	KR. பழநியப்பன்	தேனிப்பபட்டி
127.	திரு.	செ.காசி	தேனிப்பட்டி
128.	திரு.	நா.சா.ராம.சா.ராம.நாராயணன் செட்டியார்	அரியக்குடி
129.	திரு.	வயி.ராம.அரு.பழ. அருணாசலம் செட்டியார்	அரியக்குடி
130.	திரு.	நாக. லெட்சுமணன்	அமராவதிபுதூார்
131.	திரு.	கா. கண்ணப்பன்	மானகிரி
132.	திரு.	கலு. கருப்பஞ்செட்டியார்	மானகிரி
133.	திரு.	PL. பழநியப்பன்	சிராவயல்
134.	திரு.	RM. லெட்சுமணன்	சிராவயல்
135.	திரு.	KR.N.TR. நாச்சியப்பன் (திருநாச்சியப்பன்)	நாச்சியாபுரம்
136.	திரு.	N. கண்ணப்பன்	நாச்சியாபுரம்
137.	திரு.	சு.பெ. திருநாவுக்கரசு	நாச்சியாபுரம்

மேலவட்டகை

1.	திரு.	S. சுப்பிரமணியன்	ராங்கியம்
2.	திரு.	VN. சிதம்பரம் செட்டியார்	ராங்கியம்
3.	திரு.	RM. சிங்காரம் செட்டியார்	ராங்கியம்
4.	திரு.	SP. நாச்சியப்பன்	வலையபட்டி
5.	திரு.	வடு. கண்ணன்	வலையபட்டி
6.	திரு.	AL. முத்தையா செட்டியார்	வலையபட்டி
7.	திரு.	Dr. T. ராமநாதன்	வலையபட்டி
8.	திரு.	சுப. மணியன்	வலையபட்டி
9.	திரு.	மு. முத்துவள்ளியப்பன்	வலையப்பட்டி
10.	திரு.	SP. சொக்கலிங்கம்	வலையபட்டி
11.	திரு.	P.KT. சிங்காரம்	வலையபட்டி
12.	திரு.	Dr. J. பழநியப்பன்	வலையபட்டி
13.	திரு.	RM. பழநியப்பன்	மேலச்சிவபுரி
14.	திரு.	ராம. சுப்பையா செட்டியார்	மேலச்சிவபுரி
15.	திரு.	இராம. ஆண்டியப்பன்	மேலச்சிவபுரி
16.	திரு.	ஆறு.சுப. ஆறுமுகம் செட்டியார்	மேலச்சிவபுரி
17.	திரு.	ராம.சா. சாத்தப்ப செட்டியார்	வேந்தன்பட்டி
18.	திரு.	VN. அண்ணாமலை	வேந்தன்பட்டி
19.	திரு.	PR.R. லெட்சுமணன்	வேந்தன்பட்டி
20.	திரு.	RR. ராமநாதன்	வேந்தன்பட்டி
21.	திரு.	N. சிங்காரம்	வேந்தன்பட்டி
22.	திரு.	கும.துக.சொ. தூர்க்கைகருப்பன்	வேந்தன்பட்டி
23.	திரு.	SP. ஆறுமுகம் என்ற சின்னத்துரை	பொ – புதுப்பட்டி
24.	திரு.	மு.சே.சுப. சுப்பையா செட்டியார்	பொ – புதுப்பட்டி
25.	திரு.	கா. ஆறுமுகம்	பெ – புதுப்பட்டி
26.	திரு.	சுப. கணபதி செட்டியார்	பெ – புதுப்பட்டி
27.	திரு.	PL. சொக்கலிங்கம்	வேகுப்பட்டி
28.	திரு.	KN. முத்துப்பழநியப்பன்	வேகுப்பட்டி
29.	திரு.	A.RM.KM. முத்தையா	வேகுப்பட்டி
30.	திரு.	அண. முத்துப்பழனியப்பன்	வேகுப்பட்டி
31.	திரு.	S. லெட்சுமணன்	கொப்பனாபட்டி
32.	திரு.	சா. குழந்தைவேலன்	கொப்பனாபட்டி
33.	திரு.	பழ. அண்ணாமலை	கொப்பனாபட்டி
34.	திரு.	AR. முத்துக்கருப்பன்	கொப்பனாபட்டி

35.	திரு. சுப. அண்ணாமலை செட்டியார்	பூலாங்குறிச்சி
36.	திரு. லெ. பழனியப்பன்	பூலாங்குறிச்சி
37.	திரு. பழ. சொ. சிங்காரம் செட்டியார்	பூலாங்குறிச்சி
38.	திரு. ந.பழ.சித.மு.வ.ராம. வள்ளியப்பன்	மிதிலைப்பட்டி
39.	திரு. வெ.லெ. லெட்சுமணன்	மிதிலைப்பட்டி
40.	திரு. S. பழநியப்பன்	மிதிலைப்பட்டி
41.	திரு. Y.ST.L. சிதம்பரம் செட்டியார்	குழிபிறை
42.	திரு. AL. சின்னையா செட்டியார்	குழிபிறை
43.	திரு. RM. சுப்பிரமணியன்	குழிபிறை
44.	திரு. பெரி.சி. சுப்பையா செட்டியார்	குழிபிறை
45.	திரு. V. முத்துராமன்	குழிபிறை
46.	திரு. வயி.லெட்சுமணன் செட்டியார்	விரையாச்சிலை
47.	திரு. முரு. ராம. முத்தையா ராமன்	விரையாச்சிலை
48.	திரு. அரு.ச. ராஜகோபால்	விரையாச்சிலை
49.	திரு. மெ. முருகப்பன்	நற்சாந்துப்பட்டி
50.	திரு. ராம. ராமநாதன்	நற்சாந்துப்பட்டி
51.	திரு. KL. சுப்பிரமணியம்	நற்சாந்துப்பட்டி
52.	திரு. V. சிவசாமி	நற்சாந்துப்பட்டி
53.	திரு. வீர. முத்துக்கருப்பன் செட்டியார்	நற்சாந்துப்பட்டி
54.	திரு. RM. ஜோதிலிங்கம்	வி. லெட்சுமிபுரம்
55.	திரு. RM. சிங்காரம் செட்டியார்	வி. லெட்சுமிபுரம்
56.	திரு. தெ.நா.நா.மா. சுப்பையா	உலகம்பட்டி
57.	திரு. N.SP.RM. திருநாவுக்கரசு	உலகம்பட்டி
58.	திரு. RM. சுந்தரம்	உலகம்பட்டி
59.	திரு. லெ. முத்துக்கணேசன்	பனையபட்டி
60.	திரு. தி. சிவனடியான்	பனையபட்டி
61.	திரு. AR. சுவாமிநாதன்	பனையபட்டி
62.	திரு. இராம. சிவராமன் செட்டியார்	கீழச்சீவல்பட்டி
63.	திரு. க.மு.சுப.நா. சுப்பிரமணியன்	கீழச்சீவல்பட்டி
64.	திரு. சுப.அழ.கரு. அழகப்பன்	கீழச்சீவல்பட்டி
65.	திரு. ப.அழ.மு. அழகப்ப செட்டியார்	கீழச்சீவல்பட்டி
66.	திரு. வயி.ராம.பழநியப்பன்	விராமதி
67.	திரு. AN. பழனியப்ப செட்டியார்	விராமதி
68.	திரு. VN. வெங்கிடாசலம் செட்டியார்	பி.அழகாபுரி
69.	திரு. N. நாகப்பன்	பி.அழகாபுரி
70.	திரு. சித.பெரி.பெ.சி. திட்டாணி	பி.அழகாபுரி
71..	திரு. M. சோமசுந்தரம்	பி.அழகாபுரி

72.	திரு. SP. ராமநாதன்	ஆவணிப்பட்டி
73.	திரு. SP. சுந்தரம்	ஆவணிப்பட்டி
74.	திரு. PL. ஆண்டியப்பச் செட்டியார்	ஆவணிப்பட்டி
75.	திரு. மு. கிருஷ்ணப்பன்	குருவிக்கொண்டான்பட்டி
76.	திரு. முப. அருணாசலம் செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
77.	திரு. கருப்பைய்யா செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
78.	திரு. PL.S. கணேசன் செட்டியார்	செவ்வூர்
79.	திரு. S. KR. ராமநாதன் செட்டியார்	செவ்வூர்
80.	திரு. RMS. முத்துப்பழனியப்பன்	செவ்வூர்
81.	திரு. SP. முத்துராமன்	மகிபாலன்பட்டி
82.	திரு. RM. சாத்தப்பன்	மகிபாலன்பட்டி
83.	திரு. சோம. சிங்காரம் செட்டியார்	கண்டவராயன்பட்டி
84.	திரு. AL.S. விஸ்வநாதன்	கண்டவராயன்பட்டி
85.	திரு. SP. அழகப்பன்	கண்டவராயன்பட்டி
86.	திரு. N. கண்ணப்பன்	கண்டவராயன்பட்டி
87.	திரு. பழ.சா.சா.சொ. சாத்தப்பன்	கண்டவராயன்பட்டி
88.	திரு. அரு.மா. சுப்பையா செட்டியார்	ஆ. தெக்கூர்
89.	திரு. கரு. முத்து அழ. சீ. முத்துராமன்	ஆ. தெக்கூர்
90.	திரு. KM.SP. அழ. சீ. முத்துராமன்	ஆ. தெக்கூர்
91.	திரு. அண.ராம. சொக்கலிங்கம் செட்டியார்	ஆ. தெக்கூர்
92.	திரு. SP. சுப்பிரமணியன்	நெற்குப்பை
93.	திரு. T. கனகசபை	நெற்குப்பை
94.	திரு. PL. வைரவன்	நெற்குப்பை
95.	திரு. PL. அடைக்கப் செட்டியார்	நெற்குப்பை
96.	திரு. M. தியாகராஜன்	நெற்குப்பை
97.	திரு. சோம. அழகப்ப செட்டியார்	சிறுகூடல்பட்டி
98.	திரு. தி. தேனப்பன்	சிறுகூடல்பட்டி
99.	திரு. S. சோலைமலை	சிறுகூடல்பட்டி

தெற்கு வட்டகை

1.	திரு. K. ராஜாசுவாமிநாதன்	சக்கந்தி
2.	திரு. பழ. சோலையப்பன்	கல்லல்
3.	திரு. RM. நாச்சியப்ப செட்டியார்	கல்லல்
4.	திரு. கண.சுப. பழனியப்ப செட்டியார்	கல்லல்
5.	திரு. நா.நா. சாமிநாதன்	கல்லல்
6.	திரு. N.SP.K. சுப்பிரமணியன் செட்டியார்	செம்பனூர்

7.	திரு. நா. மாணிக்கம் செட்டியார்	சொக்கனாதபுரம்
8.	திரு. ஏ.எஸ்.ஏ. சம்பத்செட்டியார்	சொக்கனாதபுரம்
9.	திரு. வ.செ. இராமநாதன்	சொக்கனாதபுரம்
10.	திரு. காசி ஸ்ரீ மு.சுப. இராகவன் செட்டியார்	சொக்கனாதபுரம்
11.	திரு. RM. ராமநாதன்	மதகுபட்டி
12.	திரு. AL. வெங்கடாசலம்	மதகுபட்டி
13.	திரு. சுப. ஜெகநாதன் செட்டியார்	அலவாக்கோட்டை
14.	திரு. பி.நா.ராம.நா. லெட்சுமணன் செட்டியார்	அலவாக்கோட்டை
15.	திரு. A. இராமநாதன்	அலவாக்கோட்டை
16.	திரு. கூ.அரு.க.அரு.க. கண்ணப்ப செட்டியார்	கீழப்பூங்குடி
17.	திரு. லெ. சொக்கலிங்கம்	கீழப்பூங்குடி
18.	திரு. சி.சித. அண்ணாமலை செட்டியார்	ஒக்கூர்
19.	திரு. மு.செ.மு.சே.ரெ. சேக்கப்பன் செட்டியார்	ஒக்கூர்
20.	திரு. AN. சேதுராமன்	சோழபுரம்
21.	திரு. ச.ராம.ராம.கண்ணப்பன் செட்டியார்	நாட்டரசன் கோட்டை
22.	திரு. அழ.சுப. ராமசாமி செட்டியார்	நாட்டரசன் கோட்டை
23.	திரு. வெ.ராம. வள்ளியப்பன்	நாட்டரசன் கோட்டை
24.	திரு. மெ.நட. லெட்சுமணன் செட்டியார்	நாட்டரசன் கோட்டை
25.	திரு. ப.ப.வே. அண்ணாமலை செட்டியார்	நாட்டரசன் கோட்டை
26.	திரு. வெ.கண. கண்ணப்ப செட்டியார்	நாட்டரசன் கோட்டை
27.	திரு. தே. வேலாயுதம்	கொ.அழகாபுரி
28.	திரு. O. சிங்காரம்	கொ.அழகாபுரி
29.	திரு. வ.சி.முத்தையா செட்டியார்	காளையார்மங்கலம்
30.	திரு. RM. ஐங்கரன்	காளையார்மங்கலம்
31.	திரு. N. சிதம்பரம் செட்டியார்	கருங்குளம்
32.	திரு. S. வயிரவன்	கருங்குளம்
33.	திரு. PR.AL.M.M.AN. முத்துக்கருப்பன் செட்டியார்	பாகனேரி
34.	திரு. K. தியாகராஜன்	பாகனேரி
35.	திரு. மு. பழ.கண.பழ. கண்ணப்ப செட்டியார்	பாகனேரி
36.	திரு. லெ.மாணிக்கம்	பாகனேரி
37.	திரு. KR.S. கணேசன்	அரண்மனை சிறுவயல்
38.	திரு. K.N. அருணாசலம்	அரண்மனை சிறுவயல்
39.	திரு. MR. உடையப்பன்	நடராஜபுரம்
40.	திரு. அண.அரு.வீர. வீரப்ப செட்டியார்	நடராஜபுரம்
41.	திரு. அ. தெய்வராயன் செட்டியார்	வெற்றியூர்
42.	திரு. MR. சுப்பையா	வெற்றியூர்

43.	திரு. S. சேது	பனங்குடி
44.	திரு. N. நாச்சியப்பன்	கண்டரமாணிக்கம்
45.	திரு. லெ. இராமன்	கண்டரமாணிக்கம்
46.	திரு. VS.KR. கருப்பையா	கண்டரமாணிக்கம்
47.	திரு. MCM. மாணிக்கம்	கண்டரமாணிக்கம்
48.	திரு. AT.M. முருகப்பன்	பட்டமங்கலம்
49.	திரு. அழ. பெரியகருப்பன்	பட்டமங்கலம்

ஒன்பது நகரக் கோயில்ளின் முகவரி

அருள்மிகு கைலாசநாதர் – நித்தியகல்யாணி கோயில்,
இளையாற்றங்குடி – 630 205. (வழி) கீழச்சிவல்பட்டி, சிவகங்கை மாவட்டம்
போன் : 04577 – 265221

அருள்மிகு வளரொளிநாதர் – வடிவுடையம்மை கோயில்,
வயிரவன்பட்டி – 630 215, (வழி) சிறுகூடல்பட்டி, சிவகங்கை மாவட்டம்
போன் : 04577 – 264237

அருள்மிகு ஐநூற்றீசுவரர் – பெரியநாயகி கோயில்
மாத்தூர் – 630 202, (வழி) அரியக்குடி, சிவகங்கை மாவட்டம்
போன் : 04565 – 231862

அருள்மிகு கற்பக விநாயகர் – திருவீசர் – சிவகாமவல்லி கோயில்,
பிள்ளையார்பட்டி – 630 207, சிவகங்கை மாவட்டம்
போன் : 04577 – 264240 / 41


அருள்மிகு ஆட்கொண்டநாதசுவாமி – சிவபுரந்தேவி கோயில்,
இரணியூர் – 630 205. (வழி) கீழச்சிவல்பட்டி, சிவகங்கை மாவட்டம்
போன் : 04577 – 265645

அருள்மிகு சுயம்பிரகாசேசுவரர் – சவுந்தரநாயகி கோயில்,
இலுப்பக்குடி – 630 202. சிவகங்கை மாவட்டம்
போன் : 04565 – 221810 / 230653

அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் – சவுந்தரநாயகி கோயில்,
நேமம் – 630 206, (வழி) குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
போன் : 04577 – 264196

அருள்மிகு தேசிகநாதசுவாமி – ஆவுடையநாயகி கோயில்,
பூவாண்டிப்பட்டி என்ற நகரச் சூரக்குடி – 630 102
(வழி) செட்டிநாடு, சிவகங்கை மாவட்டம் போன் : 04565 – 281575

அருள்மிகு சண்டிகேசுவரர் – காமாட்சியம்மை கோயில்,
வேலங்குடி – 630 106, (வழி) கோட்டையூர், சிவகங்கை மாவட்டம்


செட்டிநாடு
நாட்டுக்கோட்டை நகரத்தார் ஊர்கள்
N
PUDUKOTTAI
ULAGAMPATTI
KOPPANAPATTI
KULIPIRAI
PANAIYAPATTI
NARSANTHUPATTI
VIRAIYACHILAI
NEIKKULAM
(V. LAKSHMIPURAM)
VALAIYAPATTI
PON. PUDUPPATTI
VEKUPPATTI
FOOLANKURICHI
VENTHANPATTI
MELACHIVAPURI
SEVVOOR
RANGIYAM
MITHILAIPATTI
KURUVIKKONDANPATTI
AVINIPATTI
NERKKUPPAI
ELATARTRANKUDI
TEMPLE
ERANIYOORKOVIL
KEELACHEVALPATTI
VIRAAMATHI
MAHIBALANPATTI
KANDAVARAYANPATTI
MADURAI TO
SIRUKOODALPATTI
VAIRAVAN TEMPLE
NEMAM TEMPLE
THIRUPATTUR
PILLAIYARPATTI
TEMPLE
SIRAVAYAL
THIRUMAYAM
RAYAVARAM
ARIMALAM
KADIYAPATTI
RAMACHANTHIRAPURAM
KOTHAMANGALAM
KANADUKATHAN
NEMATHANPATTI
K. LAKSHMIPURAM
THENIPATTI
KONAPET
SURAKKUDI
TEMPLE
ATHANGUDI
S. PUDUR
PALLATTHUR
ARANTHANGI
PALAVANGUDI
VELANGUDI
TEMPLE
KOTTAIYOOR
K. ALAGAPURI
PUDUVAYAL
KANDANOOR
O. SIRUVAYAL
KUNDRAGUDI
KARAIKUDI
MAATTHUR TEMPLE
ELUPPAIKUDI TEMPLE
ARIYAKUDI
MANAGIRI
THIRUKOSHTIYOOR
KANDARAMANICKAM
PATTAMANGALAM
KARUNKULAM
CHOKKANATHAPURAM
ALAVAKKOTTAI
MATHAGUPATTI
BEMPANOOR
KALLAL
RAILWAY TRACK
AMARAVATHI PUDUR
SHANMUGANATHAPURAM
(ARAVAYAL)
KALLUPPATTI
KEELAPOONGUDI
PAGANERI
ARANMANAI SIRUVAYAL
DEVAKOTTAI
OKKOOR
NATARAJAPURAM
PANANGUDI
CHOLAPURAM
RAMESWARAM - CHENNAI
VETRIYUR
KALAIYARMANGALAM
NATTARASANKOTTAI
K. ALAGAPURI
SANKARATHI
SIVAGANGAI
அட்டவணை
நகரத்தார் ஊர்கள்
நகரக் கோவில்கள்
பிற ஊர்கள்
சாலை